அன்சாரி நினைவுத் தொடர்

குர்ஆன், தஜ்ஜால் மற்றும் ஜஸத்

இன்றைய தாருல் உலூம் மற்றும் ஸலஃபி முறைக்கும் விழித்தெழும் அழைப்பு

இம்ரான் N. ஹுஸைன்

இம்ரான் N. ஹுஸைன் வெளியீடுகள்

பொருளடக்கம்

1. ஜஸத் மற்றும் பொருள் ஆய்வு செய்யும் முறை அறிமுகம் 4

திருக்குர்ஆனை சிந்தித்து ஊடுருவி ஆய்வு செய்ய வேண்டும்.16

2. தஜ்ஜால் யார் போலி மஸீஹா அல்லது அந்திக்கிறிஸ்துவா? 19

3. சுலைமான் அலைஹி சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த ஜஸத் யார்? 23

மனித ஜஸத்தாக தஜ்ஜாலினுடைய தாக்கங்கள் என்ன?..... 26

மேலும் அவனுடைய தாக்கங்கள் பற்றிய கூடுதல் பார்வை 28

4. தஜ்ஜால் மனிதர்களைத் தன்னைப் போன்றே ஜஸத்களாக எவ்வாறு மாற்றுகிறான்?..... 31

மால்கம் எக்ஸ் மற்றும் ஜஸத் 34

5. ஜஸத், ஜின் மற்றும் சுலைமான் (அலை) மரணம் 38

6. தாப்பத்துல்-அர்த் பற்றிய விளக்கம் (அதாவது, மிருகம் அல்லது பூமியில் இருந்து வெளிப்படும் பிராணி) 45

மின்சா-அ பற்றிய நமது பார்வை..... 49

இறுதி வார்த்தைகள் 52

பிற்சேர்க்கைகள்

1.திருக்குர்ஆனில் உள்ள (ஜஸத்) உயிரற்ற உடல் பற்றிய மேன்மையான உரையாசிரியர்களின் கருத்துச் சுருக்கம் ஹஸ்புல்லாஹ் ஷா:ஃபிஇ 57

2.திருக்குர்ஆனில் உள்ள நபி சுலைமான் (அலை) மரணத்தைப் பற்றிய மேன்மையான உரையாசிரியர்களின் கருத்துச் சுருக்கம் ஹஸ்புல்லா ஷா:ஃபிஇ 68

3. ஜஸத் மற்றும் தாப்பத்துல்-அர்த் பற்றிய அமீர் ஹசன் இலாகியின் கருத்து.....78

4. ஜஸத் மற்றும் தாப்பத்துல்-அர்த் பற்றிய இமாம் அபுல் ஆலா மவ்தூதியின் கருத்து. 84

5. ஜஸத் மற்றும் தாப்பத்துல்-அர்த் பற்றிய முஹம்மது அஸத்தின் கருத்துக்கள்..... 95

6. ஜஸத் மற்றும் தாப்பத்துல்-அர்த் பற்றிய முஹம்மது அலியின் கருத்துகள்..... 100

அத்தியாயம்-1

ஜஸத் மற்றும் பொருள் ஆய்வு செய்யும் முறை அறிமுகம்

திருக்குர்ஆனில் கூறப்பட்ட "**ஜஸத்**"(جَسَد) மற்றும் "**தாப்பத்துல்-அர்த்**"(دَآبَّةُ ٱلْأَرْضِ) என்பதைப் பற்றி எங்கள் பார்வையில் ஆய்வுசெய்து, அதிலிருந்து கிடைக்கப்பெற்ற பொருளினை வெளிப்படுத்தவும், அதற்கு ஒரு அறிவார்ந்த பதிலை தருமாறு "ஸலஃபி" முறை ஆய்வாளர்களையும், திருக்குரானை கற்றுக்கொடுக்கும் "தாருல் உலூமில்" பாடம் கற்ற ஆய்வாளர்களையும் மரியாதையுடன அழைக்க வேண்டும் என்ற ஓர் குறிப்பிட்ட நோக்கத்துடன் இந்த புத்தகம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது !

இதற்குமுன் "குர்ஆன் தஜ்ஜால் மற்றும் அவ்வல் அல் ஐமான்" என்ற புத்தகத்தில் நபி சுலைமான்(அலை) அவர்களின் சிம்மாசனத்தில் போடப்பட்ட "ஜஸத்" பற்றிய பாடத்தை நாம் ஏற்கனவே சொல்லி இருந்தாலும், மீண்டும் இங்கு குறிப்பிட வேண்டிய கட்டாயத்தை உணர்ந்ததால், இந்தப் புதிய புத்தகத்தில் அதைப்பற்றி அதிக விவரத்துடனும், எளிய முறையிலும் விவரித்துள்ளோம்.

பல காரணங்களுக்காக இதைப்பற்றிய ஆய்வை நாங்கள் செய்தாலும் இதில் முதன்மையான பாடம் யாதெனில், அது "ஜஸத்" என்ற உச்சக்கட்ட சோதனைப் பற்றியதாகும். திருக்குரானை சரியான முறையில் அறிந்தால், இது நமக்கு விளங்கும்.

ஷியா, ஸலஃபி, பரேல்வி, தியோபந்தை சார்ந்த நமது சகோதரர்களுக்கும், அதேபோல் இஸ்லாமிய உயர்கல்வி நிறுவனங்களான தாருல் உலூம் மற்றும் ஜாமியா பல்கலைக்கழகங்களை நிர்வகிப்பவர்களுக்கும் நினைவூட்ட வேண்டிய நபிமொழி என்னவெனில்,

أنا تارك فيكم ثقلين – أولهما كتاب الله...
ثم قال: وأهل بيتي أذكركم الله في أهل بيتي
أذكركم الله في أهل بيتي

நபி (ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள் :-

நான் உங்களிடம் இரண்டு பலமான விஷயங்களை விட்டுச் செல்கிறேன்.அதில் ஒன்று நேர்வழியும், ஒளியும் உள்ள அல்லாஹ்வின் வேதமாகும். அதனால் அதை இறுகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்; மற்றொன்று எனது குடும்பத்தை சேர்ந்தவர்கள்(**அஹ்லுல்-பய்த்**).எனது குடும்பத்தை சேர்ந்தவர்களிடம் கருணையுடன் நடந்துகொள்ள உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.எனது குடும்பத்தை சேர்ந்த நபர்களுடன் கருணையாக நடந்து கொள்ள மீண்டும் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

(நூல்- சஹீஹ் முஸ்லிம்)

நபியவர்களின் உம்மத்திற்கு உயர்ந்த வழிகாட்டியான திருக்குர்ஆன் முழுமையான உண்மை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இதில் அவர்களது சொந்தக் குடும்பமும் உள்ளடங்கும், எனவே நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றக் கூடியவர்கள் இதன் காரணமாகத்தான் திருக்குர்ஆனை பற்றிப் பிடித்துக்கொள்ள வலியுறுத்தப்பட்டார்கள்.

இறை வேதமான திருக்குர்ஆன், தொடக்கம் முதலே இஸ்லாமிய மார்க்கத்தில் ஒப்பற்ற நிலையை அடைந்திருக்கிறது. மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் ஆதாரச்சான்றுகளில் அனைத்து பிரிவுகளையும், திருக்குர்ஆனுடைய அடிப்படை அறிவைக்கொண்டு தரநிலைப்படுத்தி மதிப்பிட வேண்டும்.
திருக்குர்ஆனில் "ஜஸத்" இடம் பெற்றுள்ளதால் அது யார்? என்பதை, இஸ்லாமிய இயக்கங்கள் கண்டறிந்து எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அறிவார்ந்த பார்வையில் எழுதி, வழங்கப்பட்டுள்ள இந்த புத்தகத்தில் விரிவான பதிவுகள் எதுவாக இருந்தாலும், அது மிக முக்கியமான திருக்குர்ஆனின் வசனத்தை விளக்கவேண்டும் என்ற ஆசை தானே ஒழிய வேறில்லை. மேலும் இந்த பாடத்தை வருங்காலத்தில் வரக்கூடிய இஸ்லாமிய ஆய்வாளர்களில், சுதந்திரமாகவும் நேர்மையாகவும் ஆய்வுசெய்யும் அறிவார்ந்த அறிஞர்களிடம் விட்டுவிடுகிறோம். அவர்கள் உறுதியாக எந்த பயமும், எதிர்பார்ப்பும் இல்லாமல் ஷியா, சன்னி, ஸலஃபி, சூஃபி என்ற அனைத்து வாசகர்களின் நன்மைக்காகவும் தங்களது ஆய்வின் முடிவை வெளியிடுவார்கள்.

நபி சுலைமான் (அலை) அவர்களின் சிம்மாசனத்தில் எறியப்பட்ட ஜஸத்தைப்பற்றி குறைந்த கவனத்தை செலுத்தியதன் காரணத்தால், இந்த

புத்தகத்தில் மறுபடியும் இப்பாடத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம்.இதன் விளைவாக இதை வாசிக்கக்கூடிய அதிகமான வாசகர்களுக்கு இவ்விஷயம் புதிதாகவும், இதற்குமுன் அறியப்படாத பாடமாகவும் இருக்கும். இதனால்,இதைப் பற்றி புரிந்து கொள்வதற்கு முன், இதன் வழியாக உங்களுக்கு கிடைக்க இருக்கும் அதிர்ச்சிக்கு, உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

இறுதியாக,வரலாற்றுத் துணையுடன் "ஜஸத்" என்ற தலைப்புக்கு நாங்கள் திரும்பிவிட்டோம். அறிஞர்களின் எண்ணங்களில் இப்பாடத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய அளவிலான குழப்பத்திற்கு சரியானதொரு தெளிவை தரவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இதனால், இந்த காலத்திற்கு மட்டுமின்றி எல்லா காலக்கட்டத்திற்கும் வேண்டிய தெளிவை, கைக்கு அடக்கமான இந்த புத்தகத்தில் தந்து சாதித்து விட்டதாகவே நாங்கள் நம்புகிறோம்.

திருக்குர்ஆன் (38: 34,35)ல் நபி சுலைமான் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வால் எடுத்துக்காட்டப்பட்ட காட்சியில் அவருடைய சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த "ஜஸத்" யாராக இருக்கும் என்று எங்கள் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்ததில், அது "தஜ்ஜாலைப்" பற்றி காணப்படும் திருக்குரானின் நேரடி குறிப்பாகவே தெரிகிறது.

உண்மையில் "ஜஸத்" ஆகிய "தஜ்ஜால்" என்னும் போலி மஸீஹ் **(False messiah**) அல்லது அந்திக்கிறிஸ்துவைப் (**Anti-Christ**) பற்றிய அறிவை பெறக்கூடிய, மிக முக்கியமான பாடத்தை திறக்கும் தகுதிமிக்க திறவுகோலாக, திருக்குர்ஆனின் இந்தப்பகுதி அமையும்.

இப்போது "தஜ்ஜாலைப்" பற்றிய இந்தப் பாடம் ரொம்ப முக்கியமா? என்று கால்நடைகளை போன்றோர் கேட்பார்கள். ஏனெனில், கால்நடைகளுக்கு அறிவு கிடையாது. இவர்களுக்கான பதில் என்னவெனில், உலக வரலாற்றிலேயே,, மனித குலம் எதிர்கொள்ள இருக்கும் மிகப்பெரிய அபாயம் தஜ்ஜால் தான்.

وعن عمران بن حصين رضي الله عنهما
قال: سمعت رسول الله صلى الله عليه
وسلم يقول: ما بين خلق آدم إلى قيام
الساعة أمر أكبر من الدجال.

அல்லாஹ், ஆதமை படைத்த நாள் முதல் மறுமை நாள் வரை "தஜ்ஜாலை" விட மிகப்பெரிய சோதனையும், மிகப்பெரிய அபாயமும் இல்லை என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள். **(சஹீஹ் முஸ்லிம்)**

உலகத்தின் எல்லா பகுதிகளிலும் உள்ள அனைத்து மனித குலமும் எதிர்கொள்ளும் மிகப்பெரிய அபாயம் தஜ்ஜால்தான் என்று இமாம் முஸ்லிம் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். (மக்கா மற்றும் மதினாவை தவிர).

(சஹீஹ் முஸ்லிம்)

திருக்குர்ஆனில் "தஜ்ஜால்" மற்றும் "அவ்வல்-அல்-ஜமான்" என்ற தலைப்பில் நாங்கள் வெளியிட்டிருந்த புத்தகத்தில் "தஜ்ஜால்" தான் இந்த "ஜஸத்" என்று குறிப்பிட்டிருந்தோம்.ஆனால் உலகில் உள்ள இஸ்லாமிய அறிஞர்களுக்கு எங்களது கூற்று ஆச்சரியமாக இருந்ததால், அந்த புத்தகத்திற்கு எவ்வித கருத்தையும்,முக்கியத்துவத்தையும் அவர்கள் அளிக்கவில்லை. இதன் காரணமாக இவ்விஷயத்தில் கலக்கத்தில் உள்ள அறிஞர்களுக்கு அழகிய முறையில் உயர்ந்த இறைவனாகிய அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனை எடுத்துக் கூறலாம் என்றால், எங்களுக்கு தங்களது பள்ளிவாசல்களின் கதவுகளையும் திறப்பதில்லை. (குறிப்பாக UK வில் இருக்கும் பிரச்சனையை சொல்வதற்காக எழுதப்பட்டதே இந்த புத்தகம்).

எங்கள் பார்வையில் வெளியிடப்பட்டுள்ள இந்த புத்தகம் தவறு என்றால், அதற்கான சரியான விளக்கத்தை தருமாறு அவர்களை அழைக்கிறோம். எங்கள் கருத்துக்களை ஏற்காமல் தங்களது பள்ளிவாசல்களின் கதவுகளை தொடர்ந்து மூடுவதும்,இந்த புத்தகத்திற்கு தங்களின் இயலாமையினாலும் விருப்பமின்மையினாலும் பதிலளிக்காமல் இருப்பதிலிருந்தும், அவர்களிடையே மார்க்க அடிப்படையும்,போதுமான அறிவாற்றலும் இல்லை என்பதையே உணர்த்துகிறது.

திருக்குர்ஆனை படிப்பதற்கு எவ்வழிமுறையை அனுகுவது என்பதே, இந்த புத்தகத்தின் மிகப்பெரிய சவாலாக இருக்கும். இந்த சவால் வழங்கப்பட்டதும், இன்று உலமாக்கள் மற்றும் இஸ்லாமிய மார்க்கத்தில் அறிஞர்களாக அறியப்பட்டுள்ள பெரும்பான்மையானவர்கள், சரியான அனுகுமுறையில் திருக்குர்ஆனை படிப்பதில்லை என்பது இந்த கதாசிரியருக்கு தெளிவாக தெரிகிறது. அவர்கள் இதனை சிந்திப்பதன் விளைவாக, சரியான அனுகுமுறையில் அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனை படிக்க வேண்டிய கட்டாயத்தையும், முக்கியத்துவத்தையும் அவர்களிடம் தூண்டுவதைத்தவிர வேறு எதையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

இறுதியாக உண்மையே எப்போதும் மேலோங்க வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது.அல்லாஹ்வினால் அருளப்பட்ட இந்தக் திருக்குர்ஆனின் விளக்கத்தில் நாம் தவறிழைத்திருப்போம் எனில்,காலப்போக்கில் நாம் கூறியது மறைந்து போய்விடும் . ஆனால், அதுவே நாம் கொடுத்த திருக்குர்ஆனின் விளக்கம் சரியானதாக இருந்தால், அப்பொழுது எங்களுக்காக யாரெல்லாம் தங்களது பள்விவாசல்களின் கதவுகளை மூடினார்களோ, அவர்களெல்லாம் வருந்தத்தக்க தவறான குற்றச்செயலை புரிந்தவர்களாகவே கருதப்படுவர்.

மிக உயர்ந்தவனாகிய அல்லாஹ், சுலைமான் (அலை) அவர்களை மிகவும் சோதித்தான் என்பதை மட்டும் திருக்குர்ஆன் வெளிப்படுத்தவில்லை;மாறாக திருக்குர்ஆன் 38:34 மற்றும் 36:35ல், சுலைமான்(அலை) அவர்களின சிம்மாசனத்தில் 'ஜஸத்தை' அல்லாஹ் எரிந்தபோது, மனிதர்களிலேயே மிகவும் புத்திசாலியாக இருந்த சுலைமான்(அலை) அவர்கள், இறைவனின் அந்த சோதனைக்கான காட்சியை உடனடியாகப் புரிந்துகொண்டு துரிதமாக பதிலளித்ததையும் நமக்கு விவரிக்கின்றது. அதில் சுலைமான் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம், மிக உயர்ந்த ஒரு பிரார்த்தனையை மேற்கொண்டார்.அதன் விளைவாக அவர்கள் இறந்தவுடன் அவருக்குப் பின் இஸ்ரேலின் புனித பூமி உள்நாட்டுப்போரில் சரிந்து, இரண்டாக உடைக்கப்பட்டது.அதன்பின் இஸ்ரேலின் பூமி, ஒருபோதும் புதுப்பிக்கப்படவில்லை.

நபிக்கும்(அலை) பின் யாரும் அவருடைய ராஜ்யத்தை, ஆட்சி செய்யாததால் சுலைமான்(அலை) அவர்களின் பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்றுக்கொண்டான் என்பது தெளிவாகிறது.

'ஜஸத்' மற்றும் சுலைமான் (அலை) அவர்கள் கண்ட காட்சிக்கு, சரியான வழிமுறையை திருக்குர்ஆனில் பிரயோகித்து, அதற்கான விளக்கத்தை எப்படி பெறவேண்டும், என்ற நமது முதன்மை நோக்கத்திற்க்காகவே, இந்த புத்தகம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

சுலைமான் (அலை) அவர்கள் "ஜஸத்தை" தனது சிம்மாசனத்தில் கண்டவுடன் சுதாரித்துக்கொண்டு, அதற்கு பதில் தரும் விதமாக அவருக்கு கொடுக்கப்பட்ட ஆட்சி அதிகாரங்களை தனக்குப் பிறகு தனது பரம்பரையில் யாருக்கும் தரவேண்டாம் என்று அல்லாஹ்விடம் எதற்காக பிரார்த்தனை செய்ய வேண்டும்? என்ற கேள்வியினை திருக்குர்ஆனை அனுகும் சரியான வழிமுறையை பின்பற்றி, "ஜஸத்துடைய" இந்த குறிப்பிட்ட விஷயத்தில் கேட்க

வேண்டியிருக்கிறது. யார் அந்த "ஜஸத்" என்றும், சுலைமான் (அலை) அவர்கள் அந்த காட்சியை கண்ட பின் ஏன் அவ்வாறு பிரார்த்தித்தார்கள்? என்று திருக்குர்ஆனிலும், அதற்கு விளக்கம் தரும் நபி (ஸல்) அவர்களின் நபிமொழியிலும், மெய்யான எந்த விளக்கமும் இல்லாததால், திருக்குர்ஆனின் விரிவுரையாளர்கள் மற்றும் பாரம்பரியமான உரையாசிரியர்களும், தொடர்ந்து இவ்விரண்டு தலைப்புகளுக்கும் தங்களது சுய கருத்துக்களை வழங்கி வருகின்றனர். மேலும் சுலைமான் (அலை) அவர்கள் உயிருடன் இருப்பதாக நினைத்து ஜின்கள் அவருக்காக செய்யக்கூடிய வேலைகளை தொடர்ந்து செய்து வந்தனர். முடிவில் "**தாப்பத்துல்-அர்த்**" சுலைமான் (அலை) அவர்களுடைய கைத்தடியின் சக்தியை அரித்தது.அப்போதுதான் நபியவர்கள் இறந்து விட்டார்கள் என்பதையே ஜின்கள் உணர்ந்தன என்று சுலைமான் (அலை) அவர்களின் மரணம் தொடர்பான விஷயத்திலும், இதுபோன்றே அவர்கள் விளக்கம் தந்துள்ளனர்.

இந்த இரண்டு தலைப்புகள் சம்பந்தமாக கற்றறிந்த எங்கள் உதவியாளர் "ஹஸ்புல்லாஹ் ஷாஃபிஇ" அவர்களின் சுருக்கமான பார்வையின் அவருடைய வர்ணனைகளில் தொகுக்கப்பட்ட பல விளக்கவுரைகள் அழகிய முறையில் கண்டறியப்பட்டு நமக்கு இங்கே காணக்கிடைக்கின்றன. அதனால், இங்கு வாசகர்களின் நலனுக்காக அவரது விரிவுரையின் சுருக்கங்களை இப்புத்தகத்தில் பின் இணைப்பு 1 மற்றும் 2 என சேர்க்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த இரண்டு பிற்சேர்க்கைகளில் வழங்கப்பட்ட எங்களது சுருக்கமான விளக்கங்களுடன் "ஜஸத்" மற்றும் "தாப்பத்துல்-அர்த்" பற்றிய திருக்குர்ஆனின் விரிவுரையாளர்களான நான்கு இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்களையும் இங்கே கூடுதலாக வழங்கினால், எங்கள் வாசகர்களுக்கு அது பயனளிக்கும் என்று நாங்கள் உணர்ந்தோம். அதில் மூன்று அறிஞர்கள் "அபுல் ஆலா மௌதூதி, அமின் அஹ்சன் இஸ்லாஹி" மற்றும் பிரபல பாகிஸ்தான் நகரமான லாகூரில் வசித்து வந்த "முஹம்மத் அலி" ஆகியோராவர். இதேபோல் நான்காவதாக, நபி (ஸல்) அவர்களை பின்பற்றும் நம்பிக்கையாளர்களில் ஒருவராக சேர்ந்த, ஐரோப்பிய யூதரான "முஹம்மது அஸத்" அவர்களையும் சேர்த்துள்ளோம்.மேலும், இதில் மிர்சா குலாம் அஹமதுவின் "அஹமதியா" இயக்கத்தைச் சேர்ந்த "முஹம்மத் அலி" அவர்களின் கருத்துக்களையும் இணைத்துள்ளோம். இவர் இஸ்லாமிய உலகத்திற்கு வரலாற்றின் இறுதி காலக்கட்டத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகளைப் பற்றி எடுத்துரைப்பதில் வல்லமை மிக்கவராவார். இந்த இரண்டு தலைப்புகளும் மிகவும் முக்கியத்துவத்துவம் வாய்ந்தது என்பதால்,இவற்றைப் பற்றி "அஹமதியா"

அறிஞர்களின் கருத்துகளையும் உங்களிடையே எடுத்துவைப்பது அவசியமாகிறது.

திருக்குர்ஆனை கற்பிக்கும் சரியான வழிமுறை யாதெனில்,எப்போதும் திருக்குர்ஆன் சம்மந்தப்பட்ட பாடத்தில், அதனுடைய எந்த வசனத்திற்கான விளக்கமாயினும், அல்லாஹ்வும் அவனது தூதரும்(ஸல்) தரும் விளக்கமே இறுதி வார்த்தையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும் அல்லாஹ்வும் அவனது தூதரும் திருக்குர்ஆனின் வசனத்திற்கு திறம்பட ஓர் விளக்கத்தை தரவில்லையெனில், பிறகு அவ்வசனத்திற்கு பாரம்பரிய விரிவுரையாளர்கள் விளக்கமளித்தாலும், அதையே, இறுதி வார்த்தையாக கருதி ஒருபோதும் செயல்படுத்த முடியாது.மாறாக ஒவ்வொரு நம்பிக்கையாளர்களும் அறிவார்ந்த நிலையில் தாங்களே அதீத முயர்ச்சியினால் திருக்குர்ஆனை படித்து அதிலுள்ள வசனங்களை ஊடுருவி தேடுவதன் மூலம், அனைவராலும் திருக்குர்ஆனுடைய வசனங்களைப் புரிந்துகொள்ள முடியும். அதுபோன்று அறிவார்ந்த நிலை கொண்டும், சுதந்திரமாகவும் முயற்சிசெய்து, புரிந்து கொள்ளவேண்டிய வசனங்கள்தான் 'ஜஸத்' என்ற திருக்குர்ஆன் அத்தியாயத்தின் 38:34,35 வசனங்களாகும். அறிவார்ந்த நிலை கொண்டு திருக்குர்ஆனை ஆராய்தல் என்பது வெறுமென தஃபசீர் விளக்கங்களை ஊடுருவது கிடையாது. இது முறையான மற்றும் அறிவார்ந்த முயற்சியும் இல்லை.

திருக்குர்ஆனின் அறிவும், விளக்கமும் அதன் விளக்கவுரைகளுக்கு அப்பால் இருக்கிறது என்பதை, இறைவன் நாடினால் நிரூபிப்பதே, இந்த புத்தகத்தின் நோக்கம். மேலும், தமக்குத்தாமே சிந்தித்து, அதை அடைய முயற்சிப்பவர்கள் மட்டுமே திருக்குர்ஆனின் பரந்த எல்லைகளையும், அறிவையும் அருளாகப்பெற முடியும். எனவே, ஸலஃபி முஸ்லிம்களின் வழிமுறைப்படி, திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ் பாடங்களில், உட்கருத்து விளக்கங்களை நுழைக்கக்கூடாது என தங்கள் மீது கடமையாக்கிக் கொண்டுள்ளனர். அதை ஒப்புக்கொள்ளும் விதமாக "ஜஸத்" யார்? என்ன? என்று அவர்கள் ஒருபோதும் தெரிந்திருக்கவில்லை.

திருக்குர்ஆனையும், ஹதீஸையும் கற்பதற்கான எங்களது வழிமுறை வித்தியாசமானது. அவ்விரண்டிலும், எப்பொழுது மெய்யான விளக்கங்கள் இல்லையோ, அது உணர்த்துவது என்னவெனில், அந்தப் பாடத்தில் நாமே முயற்சி செய்து, சிந்தித்து, அதில் ஊடுருவி தேடுவதன் மூலம் அவைகளை நாம் புரிந்து கொள்ள முடியும்.

நற்குணம் வாய்ந்த வாசகர்களுக்கு முதலில் ஒன்றை நாங்கள் நினைவுப்படுத்திய

பிறகு, "ஜஸத்" பற்றிய பாடத்தை தொடங்குகிறோம்.

அஃதாவது, திருக்குர்ஆனில் இருவகையான வசனங்கள் உள்ளது என்று திருக்குர்ஆனே அறிவிக்கிறது.இறக்கி அருளப்பட்ட மற்ற வேதங்களிலும் இது போன்றே இருவகையான வசனங்கள் அமைந்திருக்க வேண்டும். ஏனெனில் அவை அனைத்தும் ஒரே இறைவனிடமிருந்து அருளப்பட்டவையாகும்.

هُوَ الَّذِىٓ أَنزَلَ عَلَيْكَ الْكِتَٰبَ مِنْهُ ءَايَٰتٌ مُّحْكَمَٰتٌ هُنَّ أُمُّ الْكِتَٰبِ وَأُخَرُ مُتَشَٰبِهَٰتٌ ۖ فَأَمَّا الَّذِينَ فِى قُلُوبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُونَ مَا تَشَٰبَهَ مِنْهُ ابْتِغَآءَ الْفِتْنَةِ وَابْتِغَآءَ تَأْوِيلِهِۦ ۗ وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُۥٓ إِلَّا اللَّهُ ۗ وَالرَّٰسِخُونَ فِى الْعِلْمِ يَقُولُونَ ءَامَنَّا بِهِۦ كُلٌّ مِّنْ عِندِ رَبِّنَا ۗ وَمَا يَذَّكَّرُ إِلَّآ أُولُوا الْأَلْبَٰبِ

அவன்தான் இவ்வேதத்தை உம்மீது இறக்கினான்; இதில் விளக்கமான வசனங்களும் இருக்கின்றன; இவைதான் இவ்வேதத்தின் அடிப்படையாகும்; மற்றவை பல பொருட்களைக் கொண்டவையாகும்; ஆகவே, எவர்களுடைய உள்ளங்களில் சறுகுதல் இருக்கிறதோ, அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகவும், அதனில் (தாம் விரும்பும்) விளக்கத்தை தேடுவதற்காகவும் அதிலிருந்து பல பொருட்கள் கொண்டவைகளையே பின்பற்றுகின்றனர்; அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அதன் உண்மையான விளக்கத்தை அறியமாட்டார்கள்;
கல்வியில் உறுதிப்பாடு உடையவர்களோ, இதன் கருத்து தங்களுக்கு பூரணமாக விளங்காவிடினும் இதனையும் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம்; இவ்விருவகை வசனங்கள் ஒவ்வொன்றும் எங்கள் இறைவனிடமிருந்து உள்ளவைதான்! என்று அவர்கள் கூறுவார்கள் அறிவுடையோரைத் தவிர மற்றவர்கள் இதைக்கொண்டு உபதேசம் பெற மாட்டார்கள்.

(திருக்குர்ஆன்: ஆல இம்ரான்- 3:7)

[இந்த புத்தகத்தில் திருக்குர்ஆன் வசனங்களுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள அனைத்தும், அந்த வசனங்களுடைய விளக்கங்களும், விரிவுரைகளும் மொழிபெயர்ப்புகளுமேயாகும்.ஏனெனில், உயர்ந்த இறைவனாகிய அல்லாஹ்வுடைய அற்புதம் நிறைந்த புனித வார்த்தைகளை வேறு எந்த மொழியிலும் மொழிபெயர்க்க இயலாது]

நபியே! அல்லாஹ்வினால் உங்கள் மீது அருளப்பட்ட இவ்வேத புத்தகத்தில், "**ஆயத் முஹ்கமாத்**" எனப்படும் தெளிவான வசனங்கள் உள்ளது. இதன் மூலம்

இவ்வசனங்கள் தமக்குத்தாமே இப்புத்தகத்தின் இதயமாகவும், சாராம்சமாகவும் அமைகிறது. அத்துடன், இதில் "**ஆயத் முதஷாபிஹாத்**" எனப்படும் வேறு சில வசனங்களும் உள்ளன.அவைகளை உருவகப்படுத்தி, முறைப்படி புரிந்து கொள்வதற்காக விளக்கமும் தர வேண்டியுள்ளது. அப்படி நாம் உருவகப்படுத்தி வெளிப்படுத்திய எங்களது இந்த புத்தகத்தை தொடரும்போது, யாருடைய உள்ளங்கள் சிதைந்துபோய் நேர்மையற்றதாக இருக்கிறதோ, அவர்களுக்கு இது தவறான வழியாகவும், குழப்பமாகவும் தெரிகிறது. மேலும்,(சிறு சிறு இரகசிய பிரிவினையாளர்கள்) இயக்கங்களை தோற்றுவித்து, நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை சிதைக்கும் வண்ணம் செயல்படுகின்றனர்.இவர்களது உள்ளங்களில் உள்ள வக்கிரத்தன்மையால், நாங்கள் உருவகப்படுத்திய வசனங்களின் விளக்கங்களை நியாயமற்ற முறையில் தேடி கண்டுபிடித்து, தங்களுடைய விருப்பத்திற்கேற்ப சாடுகிறார்கள்.அல்லாஹ்வைத் தவிர யாருக்கும், அதன் சரியான அர்த்தங்கள் தெரியாது. இதனால் இதுபோன்ற வசனங்களுக்கு சரியான விளக்கம் எது என்று அல்லாஹ்தான் உறுதிப்படுத்த வேண்டும்.

இதில் ,ஆழமான கல்வி ஞானம் உடையவர்களின் நடைமுறை வித்தியாசமானதாக இருக்கும்.அவர்கள் இவ்வசனங்களை நியாயமற்ற முறையில் பொருத்திப் பார்க்கமாட்டார்கள். மாறாக அவர்கள் உருவகப்படுத்திய வசனங்களை நம்புவார்கள் மற்றும் திருக்குர்ஆனின் அனைத்து வசனங்களின் தெளிவான மற்றும் உருவகப்படுத்திய விளக்கங்களை,இதுவும் திருக்குர்ஆனை கற்கும் முறையே என கூறி, அவை இறைவனிடமிருந்து வந்தவையே என்று அங்கீகரிப்பார்கள். எனவே உருவகப்படுத்திய வசனங்களை விளக்க வேண்டுமெனில், ஒட்டுமொத்த திருக்குர்ஆனையும் ஒருங்கிணைத்து, இணக்கமாக படிக்க வேண்டுமேயொழிய, அத்தியாயங்களை ஒன்றொடொன்று தொடர்புபடுத்தாமல்,ஒவ்வொரு பகுதிகளாக பிரித்துப் படிக்கக்கூடாது. ஆனால், தெளிவாக சிந்திக்கும் நுண்ணறிவு வழங்கப்பட்டவரை தவிர, மற்ற யாரும் இந்த உருவகப்படுத்திய வசனங்களை சரியான வழியில் படிக்கமாட்டார்கள்.

"ஜஸத்" என்றால் என்ன? அவன் யார்? என்று திருக்குர்ஆனோ, அல்லது நபிமொழியோ,நமக்கு தெளிவான விளக்கத்தை தரவில்லை. இதன் விளைவாக திருக்குர்ஆனின் இந்த வசனத்தை "ஆயத் முதஷாபிஹாத்" என அடையாளம் கண்டு, இதனை புரிந்து கொள்வதற்காக, முறைப்படி ஆராய்ந்து, விளக்கம் தேடி, இதனைக் கற்கவேண்டும்.

நமது வாசகர்களுக்கு, நாம் நினைவூட்டுவது என்னவெனில், மிக உயர்ந்தவனாகிய அல்லாஹ் திருக்குர்ஆனை தந்தது, மனிதர்கள் அதை சிந்தித்து,

ஆழ்ந்து யோசித்து,தங்களுடைய செயல்களில் பிரதிபலிக்க வேண்டும் என்பதற்காகவே, என்று மீண்டும் மீண்டும் அல்லாஹுவே திருக்குர்ஆனில் அறிவிக்கிறான்.

كَذَٰلِكَ يُبَيِّنُ اللَّهُ لَكُمُ الْأَيَٰتِ لَعَلَّكُمْ تَتَفَكَّرُونَ ۗ

நீங்கள் சிந்தித்து உணரும் பொருட்டு அல்லாஹ் வசனங்களை இவ்வாறு விவரிக்கின்றான்.

(திருக்குர்ஆன்: பகராஹ்- 2:219)

أَفَلَا يَتَدَبَّرُونَ الْقُرْءَانَ ۚ وَلَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ اللَّهِ لَوَجَدُوا فِيهِ اخْتِلَٰفًا كَثِيرًا

அவர்கள் இந்ததிருக்குர்ஆனை சிந்திக்க வேண்டாமா, அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்.

(திருக்குர்ஆன்: அன் நிசா- 4:82)

كَذَٰلِكَ نُفَصِّلُ الْأَيَٰتِ لِقَوْمٍ يَتَفَكَّرُونَ ۚ

இவ்வாறே நாம் சிந்தனை செய்யும் மக்களுக்கு அத்தாட்சிகளை விவரிக்கின்றோம்

(திருக்குர்ஆன்: யூனுஸ்- 10:24)

كِتَٰبٌ أَنْزَلْنَٰهُ إِلَيْكَ مُبَٰرَكٌ لِّيَدَّبَّرُوٓا ءَايَٰتِهِۦ وَلِيَتَذَكَّرَ أُولُوا الْأَلْبَٰبِ

அவர்கள் இதன் வசனங்களைக்கவனித்து ஆய்வதற்காகவும், அறிவுடையோர் நல்லுணர்வு பெறுவதற்காகவும் (நபியே!) பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை உம்மீது அருளியுள்ளோம்.

(திருக்குர்ஆன் சாத்: 38:29)

أَفَلَا يَتَدَبَّرُونَ الْقُرْءَانَ أَمْ عَلَىٰ قُلُوبٍ أَقْفَالُهَآ

மேலும் அவர்கள் இந்தக்திருக்குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா?அல்லது அவர்கள் இருதயங்கள் மீது பூட்டுப் போடப்பட்டு விட்டனவா?

(திருக்குர்ஆன் முஹம்மது: 47:24)

எவர்கள் இந்த திருக்குர்ஆனை சிந்திக்கவில்லையோ அவர்களின் நிலை அல்லாஹ்விடம் பயங்கரமானதாகும் என்றுதிருக்குர்ஆன் எச்சரிக்கை செய்கின்றது.

إِنَّ شَرَّ الدَّوَآبِّ عِنْدَ اللَّهِ الصُّمُّ الْبُكْمُ الَّذِينَ لَا يَعْقِلُونَ

நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உயிர்ப்பிராணிகளில் மிக்க கேவலமானவர்கள் அறிந்துகொள்ளாச் செவிடர்களும், ஊமைகளும் தாம்.

(திருக்குர்ஆன் அன்ஃபால்: 8:22)

திருக்குர்ஆனை முறைப்படி கற்பதற்கு மனிதர்கள் துல்லியமாக சிந்திக்கவேண்டும். ஏனெனில்,திருக்குர்ஆனில் உள்ள அறிவை சிந்திப்பவர்களை தவிர, வேறு எவராலும் அதை அணுக முடியாது. அப்படிப்பட்ட சிந்தனை கலைக்குத்தேவை நுட்பமான பகுத்தறிவும், இணக்கமாக வேலை செய்யும் உள்ளுணர்வும். இவையிரண்டும் இருந்தால்தான், திருக்குர்ஆன் விவரிக்கும் "மஜ்மஅல் பஹ்ரைன்" (அஃதாவது உலக அறிவும்,ஆன்மீக அறிவும்) என்ற இரண்டு கல்வி கடல்கள் சங்கமிக்கும் இடத்தை அடைய முடியும். இது போன்ற அறிவை பெற்றவர்கள் மட்டுமே திருக்குர்ஆனின் "ஆயத் முதஷாபிஹாத்" வசனங்களை ஊடுருவி புரிந்துகொள்ள முடியும்.

இன்று "தாருல் உலூம்"இல் திருக்குர்ஆனை கற்கும் மாணவர்களை, சிந்திப்பதற்கும் ஆழ்ந்து ஆராய்வதற்கும் அனுமதிப்பதில்லை. இதனால், இன்றைய உலகின் விசித்திரம் நிறைந்த மர்மமான விஷயங்களுக்கு திருக்குர்ஆன் அளிக்கும் விளக்கங்களை, "தாருல் உலூம்" பட்டதாரிகள் அறிந்துகொள்ளமுடியாத நிலை உள்ளது . ஒருவேளை, ஒரு மாணவர் இவற்றையெல்லாம் கடந்து, சுயமாக சிந்திக்க நேர்ந்தால் "தாருல் உலூமிலிருந்து" அவர் வெளியேற்றப்படுவார். இந்த அபாயகரமான "தாருல் உலூமின்" திருக்குர்ஆனை கற்பிக்கும் முறையினால், ஆழ்ந்த அறிவைப் பெற்று சிறந்து விளங்கியிருக்க இஸ்லாமிய கல்வியினை, பல காலங்களுக்கு முன்னரே

அதளபாதாளத்திற்கு கொண்டு சென்று விட்டனர்.

இன்னொரு புறத்தில் "ஸலஃபிகளின்" முறை வலியுறுத்துவது என்னவெனில் திருக்குர்ஆனின் அனைத்து விளக்கங்களையும் ஏற்கனவேநபி (ஸல்) அவர்களும் பின்னர் வந்த "அஸ்லஃப்" எனப்படும் முந்தைய முஸ்லிம்களும் முழுமையாக விளக்கிவிட்டார்கள்.அதனால், இனி திருக்குர்ஆனில், புதிதான விளக்கம் எடுப்பதற்கு சாத்தியம் இல்லை என்கின்றனர்.
அவ்வாறு இருப்பின், பிறகு ஏன்? சிந்திக்கும் மனிதர்களுக்காக அல்லாஹ் இந்த திருக்குர்ஆனை அனுப்பியதாக கூறுகிறான்.

நவீன உலகத்தை மர்மமான முறையில் நாத்திகவாதிகளான மேற்கத்திய நாகரிகத்தைப் சார்ந்தவர்கள் ஆட்சிப் புரிகிறார்கள். இவர்கள்` 'கான்ஸ்டான்டிநோபிலிலிருந்து' (**Constantinople**) பிரிந்த கிருத்துவ உலகத்தை சேர்ந்தவர்கள்.இவர்களைப் பற்றிதிருக்குர்ஆனில் நாம் எவ்வாறு தேடுவது? எப்படி விளக்கம் எடுப்பது ? என்று "ஸலஃபி" சகோதரர்களிடம் நாங்கள் கோரிக்கை வைக்கிறோம்.

மேற்கத்திய நாகரிகத்தைப் பின்பற்றும் கிறிஸ்துவர்கள் அல்லாஹ்வினால் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். புனிதசட்டத்தை கைவிட்டதால், அந்த சோதனையில் தோல்வியுற்றார்கள்.அதேபோல தடை செய்யப்பட்ட நாளில் யூதர்கள் மீன்பிடிக்கச் சென்று அந்த நாளுடைய சட்டத்தின் வரம்பை மீறினார்கள், இதன் காரணமாகவே 'தஜ்ஜால்' என்கிற **'போலி மஸீஹ்"** மற்றும் **'யஃஜூஜ் மஃஜூஜ்'** கூட்டத்தார்களை அவர்களுக்கு எதிராக அல்லாஹ் அனுப்பினான்.

وَإِذْ تَأَذَّنَ رَبُّكَ لَيَبْعَثَنَّ عَلَيْهِمْ إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ مَنْ يَسُومُهُمْ سُوءَ الْعَذَابِ ۗ إِنَّ رَبَّكَ لَسَرِيعُ الْعِقَابِ ۖ وَإِنَّهُ لَغَفُورٌ رَّحِيمٌ

அவர்களுக்குக் கொடிய வேதனை கொடுக்க கூடியவர்களையே, அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துமாறு கியாம நாள் வரை நாம் செய்வோமென்று உங்கள் இறைவன் அறிவித்தான். உம் இறைவன் தண்டனையளிப்பதில் தீவிரமானவன் .ஆனால் நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவனாகவும்,கிருபையாளனாகவும் இருக்கின்றான்.

(திருக்குர்ஆன் அல் அராஃப்: 7:167)

நாம் முறைப்படி திருக்குர்ஆனை சிந்தித்து ஊடுருவி ஆய்வு செய்ய வேண்டும்

அல்லாஹ் அனுப்பிய இந்த வேதத்தின் உட்பொருளை மனிதர்கள் எவ்வழியில் சிந்தித்து ஊடுருவி தேடவேண்டும் என்று இங்கு எங்கள் வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

إِنَّ فِى ذَٰلِكَ لَءَايَٰتٍ لِّلْمُتَوَسِّمِينَ

நிச்சயமாக இதில் சிந்தனையுடையோருக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

(**திருக்குர்ஆன் அல்-ஹிஜ்ர்: 15:75)**

"முஹம்மத் அஸத்" என்பவர் கீழ்வருமாறு இந்த வசனங்களுக்கு கருத்துரைக்கிறார்.

`யாரொருவர் ஒரு பொருளின் உண்மையான இயல்பினையும், அதன் உட்பண்புகளையும புரிந்துகொள்ளும் நோக்கில், அதன் புறத்தோற்றத்தை தனது ஆற்றலை வைத்து ஆய்வு செய்கிறாரோ' அவரைக் குறிக்க பயன்படுத்தப்படும் சொல்லே "**முதவஸ்ஸிம்**" ஆகும்.

மிக உயர்ந்தவனாகிய அல்லாஹ், தான் அருளிய திருக்குர்ஆனில், "ஆயத் முதஷாபிஹாத்" என்னும் மறைவான வசனங்களை அனுப்பியதே, மு ஃமின்கள் இவற்றை ஆழமாக ஊடுருவி ஆராய வேண்டும் என்பதற்காகத்தான் என்பது சற்று சிந்தித்தால், நமக்கே தெளிவாகப் புரியும்.

நம்பிக்கை கொண்டவர்கள் இதனைப் புரிந்து கொள்வதற்காக, இவற்றை ஊடுருவி, இவ்வாறு சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். திருக்குர்ஆனின் சரியான விளக்கத்தை அல்லாஹ் ஒருவனே உறுதி செய்யமுடியும் என்று அல்லாஹ்வே அறிவிக்கிறான். இருப்பினும் நம்பிக்கை கொண்டவர்கள், இதனை ஆய்வு செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள். (மேலே உள்ளதிருக்குர்ஆன் வசனத்தைப் பார்க்கவும்)

மேலே குறிப்பிட்டுள்ள திருக்குர்ஆனின் வசனங்களிலிருந்து பல குறிப்புகள் வெளிப்படுகிறது. அதில் முதன்மையானதும் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்ததும் , எதுவெனில் "ஆயத் முதஷாபியத்தை" சரியாக

புரிந்துகொள்வதேயாகும்.இதற்காக ஒட்டுமொத்த திருக்குர்ஆனையும் எப்போதும் ஊடுருவி, ஒருங்கிணைத்து இணக்கமாக படிக்க வேண்டுமே ஒழிய, தொடர்பில்லாமல் முற்றிலும் வெவ்வேறான பகுதிகளாக, பிரித்துப் படிக்கக் கூடாது.

திருக்குர்ஆனை கூறு கூறாக வேறுபட்ட பகுதிகளாக பிரிப்பவர்களை அல்லாஹுதஆலா உண்மையாகவே கண்டிக்கிறான்,மேலும் அவ்வாறு பிரிப்பதனால், திருக்குர்ஆன் வழங்கும் எல்லையற்ற அறிவு ஞானத்தை ஒரு போதும் நம்மால் அடையமுடியாது.

كَمَآ أَنْزَلْنَا عَلَى الْمُقْتَسِمِينَ
الَّذِينَ جَعَلُوا الْقُرْءَانَ عِضِينَ
فَوَرَبِّكَ لَنَسْئَلَنَّهُمْ أَجْمَعِينَ
عَمَّا كَانُوا يَعْمَلُونَ

(நபியே! முன் வேதங்களை) பலவாறாகப் பிரித்தவர்கள மீது முன்னர் நாம் (வேதனையை) இறக்கியவாறே, இந்ததிருக்குர்ஆனை பலவாறாகப் பிரிப்போர் மீதும் (வேதனையை இறக்கி வைப்போம்). உம் இறைவன் மீது ஆணையாக, நிச்சயமாக நாம் அவர்களனைவரையும் விசாரிப்போம்.அவர்கள் செய்து கொண்டிருந்த (எல்லாச) செயல்களைப் பற்றியும்,(நாம் விசாரிப்போம்).

(திருக்குர்ஆன் அல் ஹிஜ்ர்:15:90, 91, 92, 93.)

இங்கு இரண்டாவது குறிப்பு என்னவெனில்,மாணவர்கள் தங்களுடைய இரகசிய திட்டங்களுக்கும்,சுயதேவைகளுக்கும், கொள்கைகளுக்கும் ஆதரவாக பயன்படும்படி திருக்குர்ஆனின் "ஆயத் முதஷாபிஹாத்" வசனங்களுக்கான விளக்கத்தை சரிகண்டு பொருத்தக் கூடாது. இதுபோன்ற முறைகளால் ,அவ்வசனங்களுக்கான சரியான விளக்கம், அவர்களுக்கு கிடைக்காமல் போவது மட்டுமின்றி, மேலும் அவ்வாறு அணுகிய மாணவர்கள், திருக்குர்ஆனை அவமதித்தவராகவும் கருதப்படுவர். தங்களுடைய இரகசிய கொள்கைகளுக்கு திருக்குர்ஆனில் ஆதரவு தேடி, அதை பயன்படுத்த நினைக்கும் இரகசிய இயக்கங்களாக(சிறு சிறு பிரிவுகள்) அடையாளம் காணப்படுபவர்கள், தங்களது அணுகுமுறையை விடுமாறு, இந்த புத்தகம் அறிவுரை கூறுகிறது.மேலும், திருக்குர்ஆனை அனுகும்போது, தங்களுடைய சுய கொள்கைகளையும்,

அடையாளங்களையும் விட்டொழித்து, ஒரு நல்ல முஸ்லிமாக அனுகுங்கள்.

யாரெல்லாம் "ஸலஃபி" முறையை ஆதரிக்கிறார்களோ, அவர்களுக்கு இந்த நூலின் எழுத்தாளனாக கனிவான சவாலினை முன்வைக்கிறேன்.அதாவது திருக்குர்ஆனில் கூறப்பட்ட சுலைமான் (அலை) அவர்களின சிம்மாசனத்தில் எறியப்பட்ட "ஜஸத்" பற்றி, இந்த புத்தகத்தில் எங்கள் பார்வையில் வெளிப்படுத்தபட்டுள்ள விளக்கம் அல்லாமல், வேறு முறையில "ஜஸத்" பற்றி பதிலளிக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். மேலும் திருக்குர்ஆனை முக்கியத்துவம் கொடுத்து படிப்பதற்கு "தாருல் உலூம்" எதற்காக தடை போடுகிறது? என்றும், திருக்குர்ஆன் எனும் உண்மையான புத்தகத்தை, "தாருல் உலூமின்" பட்டதாரிகள் ஆய்வு செய்ததாகவும், தற்போதைய நடப்பிற்கேற்ப ஆழ்ந்து சிந்தித்து விளக்கம் கொடுத்ததற்கான சான்றுகள் எங்கே? என்றும் இந்த நூலின் எழுத்தாளராக நான் கேட்கிறேன். இதில் சோகத்திற்க்குரிய விஷயம் என்னவென்றால், திருக்குர்ஆனை எவ்வாறு அனுக வேண்டும் என்ற முறை கூட அறியாமல் "தாருல் உலூம்" மாணவர்கள் பட்டம் பெறுகிறார்கள்.

திருக்குர்ஆனில் கூறப்பட்ட "ஜஸத்" மற்றும் "தாப்பத்துல்-அர்த்" என்பதை பற்றி எங்கள் பார்வையில் ஆய்வுசெய்து கிடைத்த பொருளினை வெளிப்படுத்தவும் அதற்கு ஒரு அறிவார்ந்த பதிலை தருமாறும் "'ஸலஃபி" முறை ஆய்வாளர்களையும், திருக்குர்ஆனை கற்றுக்கொடுக்கும் "தாருல் உலூமில்" பாடம் கற்ற ஆய்வாளர்களையும் மரியாதையுடன் அழைக்க வேண்டும் என்ற ஓர் குறிப்பிட்ட நோக்கத்துடன் இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

அத்தியாயம் 2

தஜ்ஜால் யார் போலி மஸீஹா அல்லது அந்திக்கிறிஸ்துவா?

இறுதி காலங்களில் ஒரு உண்மையான மஸீஹ்(ஈசா அலை), உலகம் முழுவதைம் ஜெருசலேத்தில் இருந்து நீதமான முறையில் ஆட்சிப் புரிவார். நபிமார்களான டேவிட் (எ) தாவூத் (அலை) மற்றும் அவரது மகனான சாலமன் (எ) சுலைமான் (அலை) அவர்களால் புனித பூமியான இஸ்ரேல் நிறுவப்பட்டது.

மாபெரும் குழப்பங்களை உண்டாக்க கூடிய, இறுதிகாலத்தில் தோன்றவிருக்கும் தஜ்ஜால், இந்த பூமியை மையமாகக்கொண்டு ஆட்சி செய்ய நோக்கம் கொண்டிருப்பான். இந்த புனித பூமியை அவன் கைப்பற்றி, இவை தாவூத் நபி(அலை) மற்றும் சுலைமான் நபியவர்களுடைய(அலை) புனித பூமி என பிரகடனப்படுத்தி, தன்னை ஒரு உண்மையான இறைத்தூதர்(மஸீஹ்) என்றும் வாதிடுவான். ஆனால் இவன் போலியானவன். இவன் பல்வேறு சூழ்ச்சிகளை செய்ய முயற்சிப்பான், அதில் இதுவும் ஒன்று.

நமது நபி (ஸல்) அவர்கள், இவனை **அல்-மஸீஹ் அத்-தஜ்ஜால்** என்று குறிப்பிட்டார்.இதிலிருந்தே, அவன் கொடிய எண்ணம் படைத்தவனாகவும், தன்னை தூய கண்ணியரான மரியம் (அலை) அவர்களுடைய மகனான நபி ஈஸா (அலை) என வாதிடுவான் என்பதும் புலப்படுகிறது. இந்த சூழ்ச்சிகளை விட்டு அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக.மேலும் நம் நபியவர்கள் ஈஸா (அலை) அவர்களின் வருகையைப் பற்றி பல செய்திகளை கூறியுள்ளார்கள்.

நபி ஈஸா (அலை) அவர்கள்,பூமிக்கு வருகை தருவது கியாம(இறுதி) நாளின் அடையாளங்களில் முக்கியமானவை. அதைப்பற்றி நபியவர்கள் கூறும்போது:

لاَ تَقُومُ السَّاعَةُ حَتَّى يَنْزِلَ فِيكُمُ ابْنُ
مَرْيَمَ حَكَمًا مُقْسِطًا

. . .

"நபி ஈஸா (அலை) நீதனமான ஆட்சியாளராக, இந்த பூமிக்கு வருகை புரிவார் என்றார்கள்".

(நூல்:சஹீஹ் புகாரி)

மேலும் ஒரு முறை நபியவர்கள்(ஸல்), கியாம நாள் என்பது நபி ஈஸா (அலை) அவர்கள் உம்மிடையே ஒரு ஆட்சியாளராக வராதவரை ஏற்படாது என்றார்கள்.

நம் பார்வையில் ,புனித பூமியிலிருந்து(கிலாஃபா ஆட்சி) தான் ஈசா (அலை) அவர்கள் ஆட்சி புரிவார்கள்.இதனால் ஜெருசலேம் மீண்டும் புனித பூமியாக நிறுவப்படும்.

மேலும் மிக உயர்ந்தவனாகிய அல்லாஹ், மாபெரும் புனித பூமியின் அரசாட்சியை, நபி இப்ராஹிம் (அலை) அவர்களின் வழித்தோன்றல்களான இஸ்ராயீலின் சந்ததியினருக்கு அளித்ததாகதிருக்குர்ஆனில் கூறுகிறான்.

அந்த வசனம் கீழே வருமாறு:

أَمْ يَحْسُدُونَ ٱلنَّاسَ عَلَىٰ مَآ ءَاتَىٰهُمُ ٱللَّهُ مِن فَضْلِهِۦ ۖ فَقَدْ ءَاتَيْنَآ ءَالَ إِبْرَٰهِيمَ ٱلْكِتَٰبَ وَٱلْحِكْمَةَ وَءَاتَيْنَٰهُم مُّلْكًا عَظِيمًا

"அல்லாஹ் தன் அருளினால் மனிதர்களுக்கு வழங்கியவற்றின் மீது பொறாமை கொள்கின்றார்களா? இன்னும் நாம் நிச்சயமாக இப்ராஹீமின் சந்ததியினருக்கு வேதத்தையும், ஞானத்தையும் கொடுத்தோம். அத்துடன் மாபெரும் அரசாங்கத்தையும் அவர்களுக்கு கொடுத்தோம்" என்று அல்லாஹ் கூறுகின்றான்"

(திருக்குர்ஆன் அன்-நிசா 4:54)

அல்லாஹ் மற்றொரு வசனத்தில் நபி தாவூத் (அலை) அவர்களின் அரசாட்சியை பற்றியும், அதனை அல்லாஹ் மேலும் வலிமைப்படுத்தியதாகவும் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

அந்த வசனம் கீழ்வருமாறு:

وَشَدَدْنَا مُلْكَهُۥ وَءَاتَيْنَٰهُ ٱلْحِكْمَةَ وَفَصْلَ ٱلْخِطَابِ

"மேலும் நாம் அவருடைய அரசாங்கத்தையும் வலிமைப்படுத்தினோம், இன்னும் அவருக்கு ஞானத்தையும், தெளிவான சொல்லாற்றலையும் அளித்தோம்."

(திருக்குர்ஆன்- சாத்:38-20)

இந்த தலைப்பின் மேலும் விவரங்களை

1. **Jerusalem in the Qur'an (குர்ஆனில் ஜெருசலேம்)**
2. **Dajjal, The Quran and Awwal-al-zaman (தஜ்ஜால்,குர்ஆன் மற்றும் அவ்வல் அல்-ஜமான்)**

போன்ற இறுதி காலக்கட்டத்தை விளக்கும் நம்முடைய புத்தகங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

இதுவரை நாம் ஆராய்ந்ததின் அடிப்படையில், தஜ்ஜால் தன்னை ஒரு உண்மையான இறைத்தூதர் என்று நிரூபிக்க, புனித பூமியான ஜெருசலத்தை மையமாகக்கொண்டு, ஒரு ஆட்சியை நிறுவ வேண்டும்.

அதனடிப்படையில்திருக்குர்ஆனில் மேலும் ஒரு முன்னறிவிப்பு நபி சுலைமான் (அலை) அவர்களுக்கு காண்பிக்கப்பட்டது. அதில், ஒரு சடலத்தை (ஜஸத்) அவருடைய சிம்மாசனத்தில் காண்கிறார். அதனை விவரிக்கும்திருக்குர்ஆன் வசனம் கீழே வருமாறு:

وَلَقَدْ فَتَنَّا سُلَيْمَٰنَ وَأَلْقَيْنَا عَلَىٰ كُرْسِيِّهِۦ جَسَدًا ثُمَّ أَنَابَ
قَالَ رَبِّ ٱغْفِرْ لِى وَهَبْ لِى مُلْكًا لَّا يَنۢبَغِى لِأَحَدٍ مِّنۢ بَعْدِىٓ ۖ إِنَّكَ أَنتَ
ٱلْوَهَّابُ

"இன்னும் நாம் சுலைமானைத் திட்டமாக சோதித்தோம்; அவருடைய சிம்மாசனத்தில் நாம் ஒரு சடலத்தை (ஜஸத்) போட்டோம்; ஆகவே, அவர் (நம்மளவில்) திரும்பினார். என் இறைவனே! என்னை மன்னிப்பாயாக! அன்றியும், பின்னர் எவருமே அடையமுடியாத எனக்கு நீ நன்கொடை அளிப்பாயாக! நிச்சயமாக நீயே மாபெரும் கொடையாளியாவாய் எனக் கூறினார்"

(திருக்குர்ஆன்: சாத்- 38:34, 35)

மேலே கூறப்பட்ட வசனங்களின் வாயிலாக, நபி சுலைமான் (அலை) இரண்டு விஷயங்களை உணர்ந்து கொண்டதை நாம் அறியலாம்.

முதலாவதாக; தீமையை தரக்கூடிய ஒரு சடலம் (ஜஸத்) சிம்மாசனத்தில் இருப்பது;

இரண்டாவது, அது தம்முடைய புனித இஸ்ரேல் பூமியின் ஆட்சியை அடைய விரும்புகிறது என்பது.

மேலும், அல்லாஹ் காண்பித்த இந்த காட்சியின் மூலம், நபி சுலைமான் (அலை) அளவில்லா துயரத்தில் ஆழ்ந்தார். எந்த வகையிலும் அந்த சடலமானது (ஜஸத்) தன்னுடைய அரசாட்சியை புனித இஸ்ரேலின் பூமியில் நிறுவ விடக்கூடாது என்பதில் சுலைமான் (அலை) உறுதியாக இருந்தார். இதனை உணர்ந்தவுடன் அல்லாஹ்விடம் தொழுது, யாருக்குமே அளிக்கப்படாத மாபெரும் ஆட்சியை தமக்கு தருமாறு வணங்கினார். சுலைமான் (அலை) அவர்கள் புனித இஸ்ரேல் பூமி அழிந்தாலும் அழியலாமே தவிர, அந்த சடலத்தின் (ஜஸத்) அரசாட்சியில் அகப்படக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

நபியின் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதாக காட்டப்பட்ட ஜஸத் யாராக இருக்கக்கூடும்? நம்முடைய அடுத்த பாகம் இந்த கேள்விக்கு விடையளிக்கும் வண்ணம் இருக்கும்.

அத்தியாயம்-3

சுலைமான் அலைஹி சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த ஜஸத் யார்?

நபி சுலைமான் (அலை) அவர்கள் புனித இஸ்ரேல் பூமி அழிந்தாலும் அழியலாமே தவிர, அந்த (ஜஸத்) சடலத்தின் அரசாட்சியில் அகப்படக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார் என்பதை நாம் உணர்ந்தோம்.

அல்லாஹ்வினுடைய நபி சுலைமான் (அலை) அவர்கள் எச்சரிக்கையாக இருக்கும் அளவிற்கு உள்ள அந்த தீய படைப்பு எது, என்பதை ஆராய நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். அல்லாஹ் சுலைமான் (அலை) அவர்களுக்கு இதைப்பற்றி எச்சரிக்கை செய்ததை நாம் கண்டோம்.
அதனடிப்படையில்,திருக்குர்ஆனை அணுகும் வழிமுறையின்படி, நாம் ஆராயும்போது அந்த தீய படைப்பு தஜ்ஜாலாக இருக்கலாம் என்பதை நம்மால் உணர முடிகிறது. எனினும், அல்லாஹ்வே சர்வமும் அறிந்தவன்.

நம்முடைய பார்வை என்னவெனில் தஜ்ஜால்(ஜஸத்) என்னும் தீய படைப்பிற்கு, அல்லாஹ்வினால் மனிதர்களுக்கு ஊதப்பட்ட ஆன்மா (**ரூஹ்**) இருக்க வாய்ப்பில்லை.இதனால்தான், அவனை உயிர் அற்ற (ஜஸத்) படைப்பாக இருக்கிறான்(சடலம்) என்பது நாம் அனைவரும் உணரவேண்டிய கருத்து. எனினும்,அல்லாஹ்வே சர்வமும் அறிந்தவன்.

ஒருசமயம்,அல்லாஹ் சுப்ஹானதஆலா, நபி மூஸா (அலை) அவர்களை சினாய் மலைக்கு, தன்னைக் காண வருமாறு அழைப்பு விடுத்தான். அந்த சமயம் சாமிரி(ஒரு கைதேர்ந்த பொற்கொல்லன்) என்றொருவன் நபி மூஸா (அலை) அவர்களின் மார்க்கத்தை பின்பற்றுகின்ற இஸ்ரவேலர்களை அழைத்து அவர்களிடம் இருக்கும் தங்கத்தினை கொடுக்குமாறும்; அதனை வைத்து வழிபாடு செய்ய ஒரு உருவத்தினை செய்து தருவதாகவும் கூறினான். மக்களும் அவ்வாறே செய்தனர்.

சாமிரி, அந்த தங்கத்தினை வைத்து ஒரு காளைக் கன்றினை வடிவமைத்தான்.அந்த கன்றின் சிலையின் மீது காற்று வீசினால் மா மா என்று கத்தும் வண்ணம்,தனது அதீத திறமையினால்,மிக நுட்பமாக

வடிவமைத்திருந்தான். அவ்வாறு ஓசை எழும்பியதை மக்கள் அனைவரும் வியப்புற்றுக் கண்டனர். அந்த உருவம் தான் அவர்களுடைய கடவுள் என்றும், மூஸாவும் (அலை) இதைத்தான் வணங்குகிறார் என்றும் கூடியிருந்த மக்களிடம் கூறினான்.

மேலும் அல்லாஹ்திருக்குர்ஆனின் மற்றொரு வசனத்தில், மேற்கூறப்பட்ட மூஸா (அலை) அவர்களின் சம்பவத்தில், நாம் இப்பொழுது பார்த்த காளைக் கன்றை பற்றிக் கூறும்போது ஜஸத் எனும் வார்த்தை மீண்டும் பயன்படுத்த பட்டிருக்கின்றது.
அந்த வசனம் பின்வருமாறு:

فَأَخْرَجَ لَهُمْ عِجْلًا جَسَدًا لَّهُ خُوَارٌ فَقَالُوا هَٰذَآ إِلَٰهُكُمْ وَإِلَٰهُ مُوسَىٰ فَنَسِىَ

பின்னர் அவன் அவர்களுக்காக ஒரு காளைக் கன்றை (உருவாக்கி) வெளிப்படுத்தினான். அதற்கு மாட்டின் சப்தமும் இருந்தது. இதைக் கண்ட சிலர் இதுதான் உங்களுடைய நாயன், இன்னும் இதுவே மூஸாவின் நாயனுமாகும். ஆனால், அவர் இதை மறந்துவிட்டார் என்று சொன்னார்கள்.

(திருக்குர்ஆன்: தாஹா 20:88)

மேலே, நாம் பார்த்த வசனத்தில் மூஸா (அலை) அவர்களின் சம்பவத்தில் காளைக் கன்றைப் பற்றி மீண்டும் கூறுகையில் ஜஸத் என்ற வார்த்தையை அல்லாஹ் பயன்படுத்துகின்றான். அதாவது உயிரற்ற உடல் அல்லது ஆன்மா அற்ற உடல். ஆனால் சுலைமான் (அலை) கண்ட காட்சியில் அவர் காளைக் கன்றை தனது சிம்மாசனத்தில் காணவில்லை. ஒரு அரசாட்சியை அபகரிக்க இருப்பவன், மனித உருவத்தில் இருப்பது அவசியம். அவரும், அத்தகைய மனித உருவத்தில் இருக்கும் ஒரு உருவம், தன்னுடைய சிம்மாசனத்தில் இருப்பதை தான் கண்டார்.

மேலும் மற்றொரு வசனத்தில் இந்த "ஜஸத்" என்னும் சொல்லை **'உணவருந்தாத உடலைக்'** குறிக்கப் பயன்படுத்துகிறான்.
அந்த வசனம் பின்வருமாறு:

وَمَا جَعَلْنَٰهُمْ جَسَدًا لَّا يَأْكُلُونَ ٱلطَّعَامَ وَمَا كَانُوا خَٰلِدِينَ

அன்றியும் நாம் அவர்களுக்கு உணவு அருந்தாத உடலை அமைக்கவில்லை. மேலும் பூமியில் நிரந்தரமானவர்களாகவும் அவர்கள் இருக்கவில்லை.

(திருக்குர்ஆன்: அல்- அன்பியா 21:8)

சுலைமான் (அலை) தனது சிம்மாசனத்தில் அமர்ந்து, தனது ஆட்சியை பிடிக்க இருப்பதாக சொல்வது மனிதனாக இருக்க வேண்டுமேயன்றி,சடலமாக இருக்க வாய்ப்பில்லை.எனவே அவன், உணவும் அருந்த வேண்டும்.
மிக உயர்ந்தவனாகிய அல்லாஹ்வால், சுலைமான் (அலை) சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பது போன்று காட்சி அளித்தது யார்?

குர்ஆனை அணுகும் நம்முடைய வழிமுறையினை பின்பற்றி ஆராய்ந்தபோது நாம் புரிந்துகொண்டது என்னவெனில், அந்த "ஜஸத்" எனும் படைப்பு "தஜ்ஜால்" என்று நம்மால் யூகிக்க முடிகிறது. ஆனால், அல்லாஹ்வே சர்வமும் அறிந்தவன்.

நம்முடைய யூகம் சரியானதென்றால், அந்த ஜஸத் என்னும் படைப்பை பற்றி விவரிக்கும் முதஷாபிஹாத்தான வசனம், இதைப் போன்ற அருளப்பட்டுள்ள மற்ற மறைவான வசனங்களிலேயே மிகவும் முக்கியமானதாக இருக்கக்கூடும்.
இப்போது நபி முஹம்மது (ஸல்) அவர்கள் தஜ்ஜாலைப் பற்றிய கூறிய முன்னறிவிப்பினை நினைவு கூற வேண்டும். நபி ஆதம் (அலை) அவர்களின் காலம் முதல் கியாமத்(இறுதி) நாள் வரை யாரும் கண்டிராத பல குழப்பங்களையும், சோதனைகளையும்,தஜ்ஜாலின் காலக்கட்டத்தில் வாழும் மக்கள் சந்திக்க வேண்டி வரும் என கூறியிருக்கிறார்கள்.

நாம் ஜஸத் தான் தஜ்ஜால், என்ற முடிவிற்கு வருவதற்கான முதன்மையான காரணம், அவன் மிகவும் தீமையை விளைவிக்கக் கூடிய படைப்பு. அதுமட்டுமின்றி, அவன் உலகத்தை புனித இஸ்ரேலின் பூமியான ஜெருசலேத்தை (மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்திருக்கும் நகரம்) மையமாக வைத்து ஆட்சி செய்ய முற்படுவான். அப்போது, அவன் தன்னை ஈஸா (அலை)(மஸீஹ்) என்று கூறிக்கொள்வான். இதனை யூதர்களும், யூதர்களுடன் கூட்டணியில் உள்ள "ஜயோனிஸ்ட்"(Zionist) கிறிஸ்துவர்களும் ஏற்றுக்கொள்வார்கள்.

நம்முடைய யூகம் தவறென்றால், அந்த தீய படைப்பான ஜஸத் தஜ்ஜால் இல்லையெனில்; நபி சுலைமானை (அலை) யாருக்கும் கிடைக்கப் பெறாத ஆட்சியை தனக்கு வழங்கி அருளுங்கள் என்ற அல்லாஹுத்தஆலா விடம் வேண்டும் அளவிற்கு,அவரை தூண்ட வைத்த அந்த ஜஸத் யார்? அல்லது அது படைப்பானது என்ன? என்றாவது, நம்முடைய கருத்துகளுக்கு மறுப்பு தெரிவிப்பவர்கள், பதிலளிக்க வேண்டும்.

மனித ஜஸத்தாக தஜ்ஜாலினுடைய தாக்கங்கள் என்ன?

நாம் இப்போது அவனுடைய தாக்கம், மனித குலத்தின் மேல் எவ்வண்ணம் இருக்கும் என்பதை ஆராயலாம். நபி முஹம்மது (ஸல்) அவர்கள், அவனைப்பற்றி அறிமுகப்படுத்தும்போது; அவன் சுருட்டை முடி உடையவனாகவும்; ஒரு யூதனாகவும்; பலம் மிக்கவனாகவும் இருப்பான் என்றார். நபியவர்கள் மேலும் ஒரு விஷயம் அவனைப் பற்றிக் கூறுகையில்; அவன் தன்னை மிகவும் சாதாரண வாலிபனாக காண்பித்துக் கொள்வான்; நாம் அவனை பார்க்கும் போது சாதாரண மனிதனாக தோற்றமளிப்பான் என்றும் கூறுகின்றார்.ஆனால்,அல்லாஹ் தன்னுடைய திருமறையில் அவனை ஜஸத் என்று குறிப்பிடுகின்றான். இப்போது, நமக்கு எழும் கேள்வி என்னவெனில், தஜ்ஜால் ஒரு மனித உருவத்தில் இருப்பான் என்றும் அவனை ஜஸத் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.பின்னர், எந்தவகையில் தஜ்ஜால் நம்மைப்போன்ற மனிதர்களிடமிருந்து வேறுபடுகிறான்? என்பதை நாம் ஆராய வேண்டும்.

நம்முடைய பதில் என்னவெனில், அல்லாஹ் சுப்ஹானதஆலா தன்னுடைய புனித ஆன்மாவினை(ரூஹ்) நம்மில் ஊதி வாழ்வளித்தான்.இதனால்தான், பார்வை,செவியுற்றல்,புத்திசாலித்தனம் ஆகியன விலங்குகளைப் போன்று நாம் பெற்றிருந்தாலும்,புனித ரூஹ் இருப்பதனினால்தான் பகுத்தறியும் தன்மையும், ஆழ்ந்த அறிவும், கேட்கும் திறனும்,சிறிதளவு படைப்பாற்றலும் கூடுதலாக நமக்கு உள்ளது.

மேலே நாம் கண்ட செய்தியை தெளிவுபடுத்தும்திருக்குர்ஆன் வசனம் பின்வருமாறு;

ثُمَّ سَوَّىٰهُ وَنَفَخَ فِيهِ مِن رُّوحِهِۦ ۖ وَجَعَلَ لَكُمُ ٱلسَّمْعَ وَٱلْأَبْصَٰرَ وَٱلْأَفْـِٔدَةَ ۚ قَلِيلًا مَّا تَشْكُرُونَ

பிறகு அவன் அதைச் சரி செய்து, அதனுள்ளே தன் ரூஹில் இருந்தும் ஊதினான். இன்னும் உங்களுக்கு அவன் செவிப்புலன்களையும், பார்வைப்புலன்களையும், இருதயங்களையும் அமைத்தான். இருப்பினும் நீங்கள் நன்றி செலுத்துவது மிக சொற்பமேயாகும்.

(திருக்குர்ஆன்: அஸ்ஸஜ்தா 32:9)

அல்லாஹ் மனிதர்களுக்கு பார்க்கும் திறனையும், கேட்கும் திறனையும் கொடுத்தான் என்பதை மேற்கூறப்பட்ட வசனம் தெளிவாக கூறுகிறது.

அதுமட்டுமில்லாமல் மறைவானவற்றை பார்க்கக்கூடிய பார்வை ஒன்று இருக்கிறது. அதை அல்லாஹ் அவர்களின் இதயங்களில் வைத்திருக்கிறான் மற்றும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான். அதனை தெளிவுபடுத்தும்திருக்குர்ஆன் வசனம் பின்வருமாறு:

أَفَلَمْ يَسِيرُوا۟ فِى ٱلْأَرْضِ فَتَكُونَ لَهُمْ قُلُوبٌ يَعْقِلُونَ بِهَآ أَوْ ءَاذَانٌ يَسْمَعُونَ بِهَا ۖ فَإِنَّهَا لَا تَعْمَى ٱلْأَبْصَٰرُ وَلَٰكِن تَعْمَى ٱلْقُلُوبُ ٱلَّتِى فِى ٱلصُّدُورِ

அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து (இவற்றை) பார்க்கவில்லையா? அவ்வாறு பார்த்திருந்தால் அவர்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய உள்ளங்களும், நல்லவற்றைச் செவியேற்கும் காதுகளும் உண்டாயிருக்கும், நிச்சயமாக புறக்கண்கள் குருடாகவில்லை. எனினும் நெஞ்சுக்குள் இருக்கும் இதயங்கள் (அகக் கண்கள்) தான் குருடாகின்றன.

(திருக்குர்ஆன்: அல்-ஹிஜ்ர் 22:46)

மறைவானவற்றை பார்க்கக்கூடிய பார்வைத் திறனை (அகக்கண்) அவரவர்கள் இதயங்களில் வைத்திருக்கிறான் என்பதை பார்த்தோம். மேலும் அல்லாஹ் அந்த இதயங்களை கட்டுப்படுத்துகின்றான் எனதிருக்குர்ஆனில் தெளிவுபடுத்துகிறான். அவ்வசனம் கீழ்வருமாறு:

خَتَمَ ٱللَّهُ عَلَىٰ قُلُوبِهِمْ وَعَلَىٰ سَمْعِهِمْ ۖ وَعَلَىٰٓ أَبْصَٰرِهِمْ غِشَٰوَةٌ ۖ وَلَهُمْ عَذَابٌ عَظِيمٌ

அல்லாஹ் அவர்களின் இதயங்களிலும், அவர்கள் செவிப்புலன்களிலும் முத்திரை வைத்துவிட்டான். எனினும், இன்னும் அவர்களின் பார்வை மீது ஒரு திரை கிடக்கிறது. மேலும் அவர்களுக்கு கடுமையான வேதனையுமுண்டு.

(திருக்குர்ஆன்: அல்-பகரா 2:7)

நம்முடைய கருத்து என்னவென்றால்,நம்மைப் போன்று புனிதமான ரூஹ் இல்லாததால் தான்,அவன் ஜஸத் எனப்படுகிறான்.எனினும் அல்லாஹ்வே சர்வமும் அறிந்தவன்.

இதுவரை தீய படைப்பான தஜ்ஜால் நம்மைப் போன்ற மனிதர்களிடமிருந்து எப்படி வேறுபடுகிறான் என்பதை பார்த்தோம்.நபி முஹம்மது (ஸல்) அவர்கள் அவனைப் பற்றி, மேற்கொண்டு கூறியதை விரிவாகக் காணலாம். நபியவர்கள்(ஸல்) அவனை தீய படைப்பு என்று கூறியதன் உட்கருத்து,

அவன் அவ்வாறே படைக்கப்பட்டவன். அவன் மனிதன் படைக்கப்பட்டதைப் போன்று நல்ல நோக்கத்திற்க்காக படைக்கப்படவில்லை, மாறாக அவனுடைய (தஜ்ஜால்) செயல்களை அல்லாஹ் கணக்கில் எடுப்பதில்லை(மறுமை நாளில் கேள்விக் கணக்கு இல்லை).அவனுக்கு சுயமாக சிந்தித்து முடிவு எடுக்கச் கூடிய திறன் இருக்காது என்றும், சுயமாக இயங்க கூடிய திறன் இல்லை என்றும் இதன் உட்கருத்தாக இருப்பதை நம்மால் உணர முடிகிறது.சுயமாக யோசிக்கும் திறன் இல்லை என்பதன் உட்கருத்து அல்லாஹ்வின் நாட்டம் அவனுடைய செயல்களில் இருக்காது.

தஜ்ஜால் வெளிப்படையாக தான் நினைத்த போக்கில் வாழாமல்,அவனுக்கு என்ன பணி கொடுக்கப்பட்டதோ,அதை அவ்வாறே ஏற்று நடக்க வடிவமைக்கப்பட்டவன். அதுமட்டுமின்றி, அவனுடைய அனைத்து குணாதிசயங்களையும் ஒப்பிடுகையில் அவன் தான்இயங்கி(Automaton) போன்று, செயற்கையான நுண்ணறிவை கொண்டு இயங்கலாம்.எனினும் அல்லாஹ்வே சர்வமும் அறிந்தவன்.

<u>மேலும் அவனுடைய தாக்கங்களை பற்றி கூடுதல் பார்வை</u>

நாம் ஆராயந்தபடி "ஜஸத்" என்பது தஜ்ஜாலாக இருக்குமேயானால், அவன் மனிதகுலத்தில் உள்ள அனைவரையும், அவனைப்போலவே மாற்ற முற்படுவான். நல்லது எது? தீயது எது? என வேறுபடுத்திப் பார்க்கும் திறனற்றவர்களாக நம்மை மாற்ற முற்படுவான்.

அல்லாஹ் அத்தகைய நபர்களைப் பற்றி எச்சரிக்கும் வசனத்தின் உட்கருத்து பின்வருமாறு;

யார் தஜ்ஜாலினால் ஆட்க்கொள்ளப்பட்டு, உலகில் நடக்கும் ஃபித்னாக்களையும், சோதனைகளையும், கண்டுகொள்ளாமல், பொருட்படுத்தாமல் கால்நடைகளைப் போல வாழ்கின்றனரோ, அவர்களின் இருப்பிடம் நரகம்தான் என்று நம் திருமறை நம்மை எச்சரிக்கிறது.

மேலும் உலகில் இன்றளவில்,இறுதிநாள் மற்றும் அதன் தொடர்புடைய காலக்கட்டத்தின் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் அறிஞர்களுக்கு பெரும் வரவேற்போ, ஆதரவோ நம் மக்களிடம் இருந்து எப்பொழுதும் கிடைப்பதில்லை.இவை அனைத்தையும் ஒப்பிட்டு பார்க்கையில், முஸ்லிம் சமுதாயத்தினர் ஏற்கனவே அவனுடைய ஃபித்னாவில் சிக்குண்டு,

முழுவதுமாக கால்நடைகளாகவே மாறிவிட்டனர் என்பது நமக்கு தெளிவாகத் தெரிகிறது.

மேற்கண்டவற்றினைப் பற்றி அல்லாஹ் சுப்ஹானதஆலா தனது திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்:

وَلَقَدْ ذَرَأْنَا لِجَهَنَّمَ كَثِيرًا مِّنَ ٱلْجِنِّ وَٱلْإِنسِ ۖ لَهُمْ قُلُوبٌ لَّا يَفْقَهُونَ بِهَا وَلَهُمْ أَعْيُنٌ لَّا يُبْصِرُونَ بِهَا وَلَهُمْ ءَاذَانٌ لَّا يَسْمَعُونَ بِهَآ ۚ أُو۟لَٰٓئِكَ كَٱلْأَنْعَٰمِ بَلْ هُمْ أَضَلُّ ۚ أُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْغَٰفِلُونَ

நிச்சயமாக நாம் ஜின்களிலிருந்தும், மனிதர்களிலிருந்தும் அநேகரை நரகத்திற்கென்றே படைத்துள்ளோம். அவர்களுக்கு இருதயங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றை கொண்டு அவர்கள் நல்லுணர்வு பெறமாட்டார்கள். அவர்களுக்கு கண்கள் உண்டு. ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் (இறைவனின் அத்தாட்சிகளை) பார்ப்பதில்லை. அவர்களுக்கு காதுகள் உண்டு. ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் நற் போதனையை கேட்கமாட்டார்கள். இத்தகையோர் கால்நடைகளை போன்றவர்கள். இல்லை !.அவற்றைவிடவும் வழிகேடர்கள். இவர்கள் தாம் (நம் வசனங்களை) அலட்சியம் செய்தவர்கள் ஆவார்கள்

(திருக்குர்ஆன்: அல்-அரஃப் 7:179)

அல்லாஹ் சுப்ஹானதஆலா மற்றொரு வசனத்தில், மனிதனின் பிரித்து அறியும் திறனைப் பற்றி கூறுகிறான். மேலும் அவர்களுக்கு இந்த வசனம் ஒரு எச்சரிக்கையும் கூட. அவ்வசனம் கீழ்வருமாறு:

وَمَن كَانَ فِى هَٰذِهِۦٓ أَعْمَىٰ فَهُوَ فِى ٱلْءَاخِرَةِ أَعْمَىٰ وَأَضَلُّ سَبِيلًا

யார் இதில் (இவ்வுலகில் நேர்வழியை விட்டு அகக்) குருடராக இருந்தாரோ, அவர் மறுமையிலும் குருடராக இருப்பார்; இன்னும் (அவர்) பாதையால் மிகத் தவறியவராவார்.

(திருக்குர்ஆன்: பனூ இஸ்ராயீல் 17:72)

யாரெல்லாம் கண்கள் இருந்தும் குருடர்களாக இருக்கின்றனரோ, அவர்கள் அனைவரையும் தஜ்ஜால் தன்னைப்போலவே மாற்றிக்கொண்டு உள்ளான்

என்பதை நாம் உணர வேண்டும்.

மேலும் பல கேள்விகளை நாம் நம்மை கேட்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

1. அவன் எவ்வாறு மனிதர்களுடைய உள்ளத்தையும் குருடாக மாற்றுகிறான்?
2. அவன் எவ்வாறு மனிதர்களை தம்முடைய தேவைகளை விட்டு அவனுடைய சிந்தனையிலும், மோகத்திலும் மூழ்கியிருக்க வைக்கின்றான்? வாழ்க்கையில் இவர்களுடைய முடிவுகளையும் அவனே எடுக்கிறான்?
3. மேலும் நாம் நம் வாழ்க்கைக்குத் தகுந்த முடிவுகளை எடுக்கும் போது அவனுடைய சூழ்ச்சிகளில் எப்படி அகப்பட வைக்கிறான்?

இப்படி பல கேள்விகளுக்கு நாம் நம்மை ஆட்ப்படுத்தி, தஜ்ஜால் என்பவன் எப்படி அவனுடைய சதிவலைகளில் அனைவரையும் வழிகெட வைத்து,வெற்றியும் பெறுகிறான் என்பதை யோசிக்கும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டு இருக்கிறோம்.

நாம் இந்த தலைப்பில் ஆராய்ந்தவரை, தஜ்ஜால் பல சூழ்ச்சிகளையும், கேடுகளையும் விளைவிப்பான் என்பதை நபி(ஸல்) மொழியிலும்,திருக்குர்ஆன் வசனங்களிலும் கண்டோம். மேலும், முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் என்னவென்றால்,இவ்வனைத்தையும் பற்றி நாம் சிந்திக்க முற்பட வேண்டும்.

அத்தியாயம் 4

தஜ்ஜால் மனிதர்களைத் தன்னைப் போன்ற ஜஸத்களாக, எவ்வாறு மாற்றுகிறான்?

நவீன யுகத்தில் எந்த ஒரு முஸ்லிமும் மால்கம் எக்ஸை (Malcolm X) விட ஜஸத் பற்றிய சிறந்த விளக்கத்தை கொடுத்ததாக தெரியவில்லை. (மால்கம் எக்ஸ் (Malcolm X) - இவர் அமெரிக்காவை சார்ந்த இஸ்லாமியர். கருப்பின உரிமைக்காக போராடியவர்) வீட்டு அடிமை, களம் சார்ந்த அடிமையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறான் பற்றிய அற்புதமான விளக்கத்தால் மால்கம் எக்ஸ் உலகை திகைத்து கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் கடந்துவிட்டன.மேலும். மால்கம் கூறும் வீட்டு அடிமை அல்லது வீட்டு நீக்ரோ, உண்மையிலேயே ஒரு ஜஸத் ஆவான். ஏனெனில் அவன் வெளித்தோற்றத்திலும் மனதளவிலும் ஒரு அடிமை.(குறிப்பு: நீக்ரோ - கருப்பின மக்களைக் குறிக்கும் சொல்)

தன்னைப் போன்ற ஜஸத்களாக, எல்லா மனிதர்களையும் மாற்றுவதற்கான தன்னுடைய நோக்கத்தில் வெற்றி அடைய தஜ்ஜாலிற்கு இருக்கும் மிகவும் பிரபலமான வழி, மக்களை பாவங்களைச் செய்ய தூண்டுவதுதான். இவ்வாறு பாவம் செய்வதன் மூலம் நமது உள்ளத்தின் நூரினை(ஒளியை) நாம் இழக்க நேரிடும். இது ரிபா(வட்டி) போன்ற பாவங்கள்,அஃதாவது வட்டிக்கு கடன் கொடுப்பது, கடன் வாங்குவது; மக்களிடமிருந்து சொத்துக்களை ஏமாற்றி அபகரித்துக்கொள்வது; ஜினாவினுடைய (கூடாஒழுக்கம்) பாவம், (இது ஷரீயத்தில் சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்படாத ஒருவருடன் உடலுறவு கொள்ளுதல்). இப்படி எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

இவை அனைத்தையும் விட ஒரு இறை விசுவாசியை ஆகிரத்தான மறுமை வாழ்க்கையை விட்டு துன்யாவான உலக வாழ்க்கையினை நாட செய்வதுதான், மற்ற பாவங்களை விட, ஆகச்சிறப்பானதாகவும், தஜ்ஜாலினுடைய வலிமையான ஆயுதமாகவும் காணப்படுகிறது.

மறுமையைத் துறந்து இந்த உலக வாழ்க்கையை விரும்பும் நபர்களுக்கு, திருக்குர்ஆன் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளது. இவ்வாறு செய்பவர்கள் காஃபிராகவே காணப்படுகிறார்கள். தஜ்ஜால் தனது நெற்றியில் இரு கண்களுக்கு இடையில் காஃபிர்(كافر) என்ற வார்த்தையைக் கொண்டவனாக இருக்கிறான். எனவே அவன்

முஸ்லிம்களின் இறைநம்பிக்கைக்கு மிகப் பெரிய ஆபத்தை ஏற்படுத்துவான்:

ٱلَّذِينَ يَسْتَحِبُّونَ ٱلْحَيَوٰةَ ٱلدُّنْيَا عَلَى ٱلْءَاخِرَةِ وَيَصُدُّونَ عَن سَبِيلِ ٱللَّهِ وَيَبْغُونَهَا عِوَجًاۚ أُو۟لَٰٓئِكَ فِى ضَلَٰلٍۭ بَعِيدٍ

இவர்கள் மறுமையைவிட இவ்வுலக வாழ்க்கையையே விரும்புகின்றனர். அல்லாஹ்வுடைய வழியில் (அவர்கள் செல்லாததுடன், மற்றவர்களையும் அதில் செல்லாது) தடுத்துக்கொண்டு அதில் கோணலையும் உண்டுபண்ணுகின்றனர். இவர்கள் வெகு தூரமான வழிகேட்டில்தான் இருக்கிறார்கள்.

(திருக்குர்ஆன்: இப்ராஹீம் 14:3)

ஆனால் தஜ்ஜால் இந்தகைய நோக்கத்தை அடைய மக்களை மூளைச்சலவை செய்கிறான். இதன் விளைவாக மக்கள் இனி தங்களைப் பற்றியும் நினைக்க மாட்டார்கள்; தங்களுடைய சொந்த வாழ்க்கையிலும் சுயமாக எந்த முடிவுவினையும் எடுக்கவும் மாட்டார்கள்.முழுமையாக அவனுடைய கட்டுப்பாட்டில் மக்களை கொண்டு வந்து விடுவான்.

இவ்வாறு அவர்களை மூளைச்சலவை செய்த தஜ்ஜாலே அவர்களுக்காக சிந்திக்கவும் செய்கிறான்; அவர்களுடைய வாழ்க்கையினுடைய அனைத்து முடிவுகளையும் அவனே எடுக்கிறான். தஜ்ஜால் தனது இந்த பணியில் வெற்றிபெறும்பொழுது, ஒரு உலகளாவிய சமுதாயம் இறுதியில் உருவாகிவிடும். இதில் சாதாரண மனிதர்கள் மத்தியில் மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள், தாங்கள் வாழும் உலகின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், தஜ்ஜாலுடைய வழிகாட்டுதலின் அடிப்படையில் கடவுளற்ற நாத்திக வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்வார்கள். அதன்பின்னர்,அவர்கள் தஜ்ஜாலிற்கு முற்றிலும் அடிபணிந்து, அவனுடைய ஆணைக்கேற்ப செயல்படுவார்கள். இவனுடைய கொள்கைகளை எவரேனும் மறுத்து மாறு செய்தால், வெனிசுலிய முறையில் தண்டிக்கப்படுவார்கள். (வெனிசுலிய தண்டனை - அந்த நாட்டின் மீது 300 விதமான பொருளாதார தடைகள் (அமெரிக்காவால் விதிக்கப்பட்டது), அதீத பணவீக்கம்- Hyper Inflation (பணவீக்கம் 10 லட்சம் மடங்கு உயர்வு), 20 மணிநேர மின்தடை, உள்நாட்டுப் போர், சுயசார்பு கொள்கையைத் தகர்ப்பது)

வாசகர்களாகிய நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமேயானால், மேற்கண்ட அவனுடைய பணியை,தஜ்ஜால் பெரும்பாலும் நிறைவேற்றிவிட்டான் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். தஜ்ஜாலினால் சிந்திக்கும் திறனை இழந்து, இந்த உலக வாழ்க்கையில் மூழ்கி கிடப்பவர்கள்;ஒருவேளை நாம் சிந்தித்தால் உலக இன்பத்திற்கு இடையூறாக இருக்குமோ என்று சிந்திப்பதையே கைவிட்டவர்கள்;இந்த இரண்டு தரப்பினரும், இன்றைய உலகளாவிய சமுதாயத்தை உருவாக்கிய மாமேதை தஜ்ஜால் தான் என்பதை அறிந்து கொள்ளும் நேரம் வரும்பொழுது செய்வதறியாது திகைத்து திக்குமுக்காடிப் போவார்கள். தஜ்ஜால், ஷைத்தான்களை தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஏமாற்றி வருவதைப் போலவே, சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்ட மற்றும் தங்களுக்கு ஏற்படும் சோதனைகளில் தோல்வியுற்ற ஏராளமான மக்களை,அவன் ஏற்கனவே ஏமாற்றி வழிகெடுத்து விட்டான். சிரியாவில் தற்போது நடைபெறும் போலி ஜிகாத்(ஜிகாத்தை தவறாக சித்தரிக்க நடத்தப்படுகிறது),எல்லா நாடுகளும் தூக்கிப் பிடிக்கும் நவீன ஜனநாயக அரசுகளின் ஷிர்க்(இஸ்லாத்திற்கு மாறான சட்டதிட்டங்கள் - ஓரினச் சேர்க்கை, சொத்துரிமை,பெண்ணுரிமை என்ற பெயரில் வழிகெடுப்பது) மற்றும் ரிபா(வட்டியை) முதன்மையாக் கொண்டு இயங்கும் வங்கிகள் முதலியன யாவும் தஜ்ஜாலினுடைய வழிகேடுகளின் சிறந்த சான்றுகளாகும். நாம் தஜ்ஜாலுக்கு சேவை செய்யும் விதத்தில் கண்மூடித்தனமாக செயல்படுவதை தவிர்க்க வேண்டும், ஏனென்றால், ஜின் மற்றும் மனிதர்கள் ஆகிய இருவருக்கும், சிந்திக்கும் திறன் அருளப்பட்டுள்ளது. எனவே ஜின்,மனிதர்கள் ஆகிய இருவரும் அல்லாஹ்விடமிருந்து வந்த சத்தியத்தினை புறக்கணித்து, தஜ்ஜாலை எளிதாக தங்களை ஆட்க்கொள்ள அனுமதித்தால், மறுமை நாளில், அல்லாஹ்விடம் கேள்விக்குள்ளாகி, வெட்கித்தலைகுனிந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடும்.

இனி வரும் காலங்களில் மனிதகுலம் மிகவும் மோசமான சோதனைகளுக்கு உள்ளாக காத்திருக்கிறது,ஏனெனில்,கோடிக்கணக்கான குழந்தைகள் சிந்திக்கும் திறனே இல்லாதவர்களாக பருவ வயதை அடைகிறார்கள்- எவ்வாறென்றால்,அவர்களின் சிந்திக்கும் திறன் மற்றும் வாழ்க்கை செயல்முறைகள் முதலியன ஸ்மார்ட் போன்கள், வயர்லெஸ் இண்டர்நெட், மின்காந்த கதிர்வீச்சு போன்றவற்றால் மிகவும் பாதிக்கப்படுகின்றது.

وَلَقَدْ ذَرَأْنَا لِجَهَنَّمَ كَثِيرًا مِّنَ ٱلْجِنِّ وَٱلْإِنسِ ۖ لَهُمْ قُلُوبٌ لَّا يَفْقَهُونَ بِهَا وَلَهُمْ

أَعْيُنٌ لَّا يُبْصِرُونَ بِهَا وَلَهُمْ ءَاذَانٌ لَّا يَسْمَعُونَ بِهَآ أُوْلَٰٓئِكَ كَٱلْأَنْعَٰمِ بَلْ هُمْ أَضَلُّ أُوْلَٰٓئِكَ هُمُ ٱلْغَٰفِلُونَ

நிச்சயமாக மனிதர்களிலும், ஜின்களிலும் பலரை நரகத்திற்காகவே நாம் படைத்திருக்கிறோம். (அவர்கள் எத்தகையவர்கள் என்றால்) அவர்களுக்கு உள்ளங்கள் இருக்கின்றன; எனினும் அவற்றைக் கொண்டு (நல்லுபதேசங்களை) அவர்கள் உணர்ந்துகொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு கண்களுமுண்டு; எனினும், அவற்றைக்கொண்டு (இவ்வுலகிலுள்ள இறைவனின் அத்தாட்சிகளை) அவர்கள் பார்க்க மாட்டார்கள். அவர்களுக்கு செவிகளுமுண்டு; எனினும், அவற்றைக் கொண்டு அவர்கள் (நல்லுபதேசங்களுக்கு) செவிசாய்க்க மாட்டார்கள். இவர்கள் மிருகங்களைப் போல் அல்லது அவற்றைவிட அதிகமாக வழி கெட்டவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள்தான் (நம் வசனங்களை) அலட்சியம் செய்தவர்கள் ஆவர்.

(திருக்குர்ஆன்: அல்-அராஃப், 7: 179)

மால்கம் எக்ஸ் மற்றும் ஜஸத்

நவீன யுகத்தில் எந்த ஒரு முஸ்லிமும் மால்கம் எக்ஸை விட ஜஸத் பற்றிய சிறப்பான விளக்கத்தை கொடுத்ததாக தெரியவில்லை. வீட்டு அடிமை பற்றிய அற்புதமான விளக்கத்தால் மால்கம் எக்ஸ் உலகை திகைத்து கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் கடந்துவிட்டன. மேலும் வீட்டு அடிமை களம் சார்ந்த அடிமையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறான். உண்மையில் மால்கமின் வீட்டு அடிமை அல்லது வீட்டு நீக்ரோ, ஒரு ஜஸத் ஆவான். ஏனெனில் அவன் வெளித்தோற்றத்திலும், மனதளவிலும் ஒரு அடிமை.

மால்கம் எக்ஸினுடைய உரை:

"உங்களிடையே இரண்டு வகையான நீக்ரோக்கள் வாழ்கிறார்கள். பழைய வகை மற்றும் புதிய வகை. உங்களில் பெரும்பாலோருக்கு பழைய வகை நீக்ரோவைப் பற்றித் தெரியும். வரலாற்றில் கருப்பின அடிமைத்தனத்தின் போது அந்த பழைய நீக்ரோவைப் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். அவனை "மாமா டாம்(Uncle Tom)" என்று அழைப்பார்கள்.. (குறிப்பு- டாம் மாமா: அச்சுறுத்தலோ அடக்குமுறைக்கோ உள்ளாகும்பொழுது அதை சிறிதும் எதிர்க்காமல், செயலற்ற தன்மையை காட்டுபவரை குறிக்கும் பிரபலமான

சொல்) இவன் ஒரு வீட்டு நீக்ரோ (House Slave). அடிமைத்தனத்தின் போது இரண்டு விதமான நீக்ரோக்கள் இருந்தார்கள் ஒன்று வீட்டு நீக்ரோ மற்றோன்று வெளிஉலகம் அறிந்த களம் சார்ந்த நீக்ரோ(Field Slave). வீட்டு நீக்ரோ பொதுவாக தனது எஜமானருக்கு அருகிலேயே வாழ்வான்;அவன் தனது எஜமானரைப் போலவே உடை அணிவான்.;அவன் தனது எஜமானரின் இரண்டாம் தர ஆடைகளை உடுத்திக் கொள்வான்;அவன் தனது எஜமானன் மேஜையில் மீதம் வைத்த உணவையே சாப்பிடுவான்;அவன் தனது எஜமானருடைய வீட்டின் அடித்தளத்திலோ அல்லது மாடியிலோ தங்கி கொள்வான்;வேறு எங்குமே செல்வதில்லை;ஆகவே, இந்த வீட்டு அடிமை தனது எஜமானன் தன்னை எவ்வாறு அடையாளம் காட்டிக்கொள்கிறாரோ,அவ்வாறே இவனும் தன்னைக் காட்டிக்கொள்வான்.

உதாரணத்திற்கு அவனது எஜமானன் "நம்மிடம் நல்ல உணவு இருக்கிறது" என்று கூறினால், வீட்டு நீக்ரோவான இவன், "ஆம், நம்மிடம் நல்ல உணவு மிகுதியாக இருக்கிறது" என்று கூறுவான்(குறிப்ப - அஃதாவது இவனையும் எஜமானருடன் சேர்த்துக் கொண்டு "'நம்மிடம் நல்ல உணவு மிகுதியாக இருக்கிறது" என்பான்)
"நம்மிடம் ஒரு நல்ல வீடு இருக்கிறது" என்று எஜமானன் கூறினால், வீட்டு நீக்ரோவும், "ஆம், "நம்மிடம்" ஒரு நல்ல வீடு இருக்கிறது" என்று கூறுவான். எஜமானருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனால், வீட்டு நீக்ரோ தனது எஜமானருடன் தன்னை மிகவும் ஒன்றினைத்து காட்டிக் கொண்டு, "என்ன விஷயம் முதலாளி, நமக்கு ஏன் உடம்பு சரியில்லை?" என்று கேட்பான். அவனது எஜமானனின் வலி அவனுடைய வலி. அவனுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருப்பதை விட அவனுடைய எஜமானன் நோய்வாய்ப்பட்டிருப்பது அவனுக்கு மிகவும் வருத்தத்தை ஏற்படுத்தியது.

எஜமானரின் வீடு எரியத் தொடங்கினால், எஜமானரை விட வேகமாக செயல்பட்டு தீயை அணைப்பதற்கு கடினமாக போராடுவான், வீட்டு நீக்ரோ.

வெளியுலகில் அடிமையாகாத இன்னொரு நீக்ரோ இருந்தான். அவன் களம் சார்ந்த நீக்ரோ. (இவன் வயல்களிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்பவன், மனதளவில் அடிமையாக இருக்க மாட்டான்). வீட்டு நீக்ரோக்கள் சிறுபான்மையினராக இருந்தனர். களம் சார்ந்த நீக்ரோக்கள் பெரும்பான்மையாக இருந்தனர். எஜமானர் நோய்வாய்ப்பட்டபோது, அவர் இறந்துவிடவேண்டும் என்று களம் சார்ந்த நீக்ரோக்கள் பிரார்த்தனை செய்வார்கள்.[அரங்கத்தில் சிரிப்பு] எஜமானருடைய வீடு தீப்பிடித்தால், ஒரு

காற்று வந்து தீயினை இன்னும் அதிகமாக்கி வீடு முழுவதும் பரவிடக் கூடாதா என்று பிரார்த்தனை செய்வார்கள்.

யாராவது வீட்டு நீக்ரோவிடம் வந்து, "வா நாம் தனியே சென்று வசிக்கலாம்" என்று சொன்னால், இயற்கையாகவே மாமா டாம் (வீட்டு நீக்ரோ-அடக்குமுறைக்கு உட்பட்டு வாழ்பவன்), "நான் எங்கே போவேன்? முதலாளி இல்லாமல் என்னால் என்ன செய்ய முடியும்? நான் எங்கே வாழ்வேன்? உடுத்துவதற்கு ஆடைகளை யார் கொடுப்பார்? வெளியே யார் என்னை பார்த்துக்கொள்வார்கள்?" இதுதான் வீட்டு நீக்ரோ.

ஆனால் நீங்கள் வெளியில் வசிக்கும் களம் சார்ந்த நீக்ரோவிடம் சென்று, "வா நாம் தனியே சென்று வசிக்கலாம்" என்று சொன்னால், அவன் எங்கே, எப்படி என்று கூட உங்களிடம் கேட்க மாட்டான். உடனடியாக, "வா, போகலாம்" என்று கூறுவான். இவ்வாறு சற்றும் பதறாமல் எதிர்கேள்வி கேட்காமல் பேச்சை சாதாரணமாக முடித்துக் கொள்வான்.

எனவே இப்போது நம்மிடையே வாழ்வது இருபதாம் நூற்றாண்டு வகை வீட்டு நீக்ரோ, இருபதாம் நூற்றாண்டின் டாம் மாமா. 100 அல்லது 200 ஆண்டுகளுக்கு முன்பு மாமா டாம் இருந்ததைப் போலவே அவன் (வீட்டு நீக்ரோ) இன்றைய டாம் மாமா. அவன் ஒரு நவீன டாம் மாமா. அந்த பழைய டாம் மாமா தலையில் ஒரு கைக்குட்டை அணிந்திருந்தார். இந்த டாம் மாமா தொப்பி அணிந்துள்ளார். இவர் மிகவும் கூர்மையானவர். இவர் உங்களைப் போலவே ஆடை அணிவார். இவர், நீங்கள் பேசும் சொற்களை, உங்கள் மொழியிலேயே பேசுவார். உங்களை விட சிறப்பாகவும் பேச முயற்சிப்பார். உங்களுடைய அதே உச்சரிப்புகளுடன் பேசுவார். "உங்களுடைய இராணுவம்" என்று நாம் கூறினால், "நம்முடைய இராணுவம்" என்பார். அவரைப் பாதுகாக்க யாருமே இல்லை என்றாலும் '"நாம்"' "நம்முடையது" என்று அவரிடம் எப்போது கூறினாலும் பன்மையாக்கி அவரையும் இணைத்துக்கொண்டு "நம்முடையது", "நம்முடைய ஜனாதிபதி," "நம்முடைய அரசாங்கம்," "நம்முடைய சட்டசபை," "நம்முடைய கட்சிக்காரர்கள்,

இவ்வாறு டாம் மாமா கூறும் எதிலும் அவருக்கு சிறிதளவும் உடன்பாடோ சம்பந்தமோ இல்லை என்றாலும் எல்லாவற்றையும் தன்னுடன் ஒருங்கினைத்தே பேசுவார். எனவே இந்த கதாபாத்திரம்,இருபதாம் நூற்றாண்டின் நீக்ரோ ஆகும். நீங்கள்" நீ "என்று சொல்லி அவனிடம்

ஒற்றையாக குறிப்பிட்டாலும், அதை பன்மையாக்கி அவனுடன் சேர்த்து 'நாம், நாங்கள்' என்றே பதிலளிப்பான். நீங்கள் சிக்கலில் இருப்பதாகக் கூறினால் "ஆம், நாம் சிக்கலில் இருக்கிறோம்" என்று அவன் கூறுவான்.

ஆனால், இதே காட்சியில் மற்றொரு வகையான கறுப்பின மனிதர்(களம் சார்ந்த நீக்ரோ) இருக்கிறாரல்லவா. நீங்கள் அவரிடம் நான் சிக்கலில் இருக்கிறேன் என்றால், "ஆம், "நீங்கள்" சிக்கலில் தான் இருக்கிறீர்கள்" என்று ஒற்றையாகவே அவர் கூறுவார். [அரங்கத்தில் சிரிப்பு].
உங்களின் அவலநிலையுடன் அவர் தன்னை இணைத்துக் கொள்வதில்லை.. கொள்ளவும் மாட்டார்...

ஆதாரம்:
பேச்சாளர்- **மால்கம் எக்ஸ்**
தலைப்பு- "**இன பிரச்சினை**."
ஆப்பிரிக்க மாணவர் சங்கம் மற்றும் என்.ஏ.ஏ.சி.பி வளாகம். மிச்சிகன் ஸ்டேட் யுனிவர்சிட்டி, ஈஸ்ட் லான்சிங், மிச்சிகன். 23 ஜனவரி 1963.

மால்கம் விவரித்தபடி, வீட்டு அடிமை என்னும் கதாபாத்திரம், தஜ்ஜாலால் ஒரு முழு ஜஸத்தாக ஆக்கப்பட்டு, தற்போதைய உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களுடைய தன்மைக்கு, 100% சதவீதம் சரியாகப் பொருந்துகிறது.

கடந்த 60 ஆண்டுகளில், ஜஸத் போன்றவர்கள் வட அமெரிக்காவில் அதிக அளவில் பெருகிவிட்டனர்.இந்த நிலையில் இன்று மால்கம் எக்ஸ் உயிருடன் இருந்திருந்தால், அவருடைய சொற்பொழிவிற்கு பல்வேறு மஸ்ஜித்துகளிலேயே தடை விதிக்கப்பட்டிருக்கும். மேலும், அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள முஸ்லிம்கள் கூடும் மெகா மாநாடுகளிலோ, 15000 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூடும் இடங்களிலோ இவர் இவ்வாறு பேசி உண்மையை எடுத்துரைக்க, இன்றைய நிலையில், கண்டிப்பாக அனுமதித்திருக்கவே மாட்டார்கள்.

அத்தியாயம் 5

ஜஸத், ஜின் மற்றும் சுலைமான் அலைஹி மரணம்

உலகளாவிய அளவில் வைக்கப்படும் கருத்து என்னவென்றால், சுலைமான் (அலை) தனது சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் நிலையிலேயே இறந்தார் என்றும், கரையான்கள் அவர் ஊன்றியிருந்த கைத்தடியின் கீழ் பாகத்தை, சிறுக சிறுக நீண்ட காலமாக அரித்ததால், அவருடைய உடல், சரிந்து கீழே விழுந்தது என்பதாகும். நம்முடைய கருத்து என்னவென்றால் சுலைமான் (அலை) அவர்கள் இறந்ததிலிருந்து அவர்களது சிம்மாசனத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஜஸத், அவர்களது கைத்தடியின் **மின்சா-அ**(مِنسَأَ) சக்தியைப் பயன்படுத்திக் கொண்டு, காலத்தில் முன்னும் பின்னுமாக பயணித்து, சுலைமான் (அலை) உயிருடன் இருப்பது போல், ஜின்களுக்கு காட்சி அளித்து கொண்டிருக்கிறான்.

எனினும், எப்பொழுது **தாப்பத்துல்-அர்த்** தோன்றி,சுலைமான் (அலை) அவர்களின் கைத்தடியின் மின்சா-அ சக்தியை அழித்ததோ, அப்பொழுதே ஜஸத் சுலைமான் (அலை) அவர்கள் உயிருடன் சிம்மாசனத்தில் அமர்ந்து இருப்பது போலும்,நகர்வது போலும்,ஜின்களுக்கு காட்டிக்கொண்டிருந்த தன்னுடைய திறனை இழந்தான். எனவே, அந்தக் கைத்தடி தனது மின்சா-அ சக்தியை இழந்தபோது,சுலைமான்(அலை) அவர்கள் உயிருடன் இருப்பது போல் காட்டிக் கொண்டிருந்த அந்த போலியான காட்சிகள்தான் கலைந்ததே தவிர,அவரது உடல் சரிந்து கீழே விழவில்லை.இதன் பிறகுதான், அந்த ஜின்களுக்கு சிம்மாசனத்தில் அமர்ந்து இருப்பது சுலைமான் (அலை) இல்லை, அது வேறு ஒரு நபர் என்று புலப்பட்டது.

நாம் மீண்டும் ஒருமுறை சுலைமான்(அலை) அவர்களின் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த ஜஸத் பக்கம் நம் கவனத்தைத் திருப்புவோம், ஆனால் இந்த முறை திருக்குர்ஆன் நம்மை சுலைமான்(அலை) அவர்களின் மரண தருவாயில் நடந்த நிகழ்வினை,கூர்ந்து கவனிக்க சொல்கிறது.

அல்லாஹுதஆலா சுலைமான் (அலை) அவர்களுக்கு பணி புரியுமாறு ஜின்களுக்கு கட்டளையிட்டிருந்தான்.ஒருவேளை அவ்வாறு செய்ய மறுத்தால்

கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்றும் ஜின்களை எச்சரித்திருந்தான்.

وَمِنَ الْجِنِّ مَنْ يَعْمَلُ بَيْنَ يَدَيْهِ بِإِذْنِ رَبِّهِ ۖ وَمَنْ يَزِغْ مِنْهُمْ عَنْ أَمْرِنَا نُذِقْهُ مِنْ عَذَابِ السَّعِيرِ

தம் இறைவனுடைய அனுமதிப்படி அவருக்கு முன் உழைப்பவற்றில் ஜின்களிலிருந்தும் (வசப்படுத்திக் கொடுத்தோம்.) அவர்களில் எவர் (அவருக்கு ஊழியம்செய்வதில்) நம்முடைய கட்டளையைப் புறக்கணிக்கின்றாரோ, அவரைக் கொழுந்து விட்டெரியும் (நரக) வேதனையைச் சுவைக்கும் படி நாம் செய்வோம் (என்று எச்சரித்தோம்) - (திருக்குர்ஆன் - சபா 34:12)

மேலும்,அந்த ஜின்கள் ஷயாத்தீன் வகையை சார்ந்தது என்றுதிருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது. அதுமட்டுமில்லாமல் சுலைமான்(அலை) அவர்களுக்கு பணி புரியும் சில ஜின்கள் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தன என்றும் விவரிக்கிறது.

وَالشَّيَاطِينَ كُلَّ بَنَّاءٍ وَغَوَّاصٍ وَآخَرِينَ مُقَرَّنِينَ فِي الْأَصْفَادِ

மேலும், ஷைத்தான்களிலுள்ள கட்டடங்கட்டுவோர், முத்துக்குளிப்போர் ஆகிய யாவரையும்; சங்கிலியால் விலங்கிடப்பட்டிருந்த வேறு பலரையும் (நாம் அவருக்குக் வசப்படுத்திக் கொடுத்தோம்).

(திருக்குர்ஆன் - சாத் 38:37, 38)

நாம் இப்போது நம் கவனத்தை சுலைமான் (அலை) அவர்கள் மரணித்த, அந்த குறிப்பிட்ட தருணத்தை நோக்கி திருப்புவோம். ஜின்கள்,சுலைமான் (அலை) அவர்கள் மரணித்து விட்டதை அறிந்து கொள்ளாமல் தொடர்ந்து வேலை செய்து கொண்டே இருந்தன,எதுவரையெனில்,தாப்பத்துல்-அர்த் (அதிசயப் பிராணி) தோன்றி, சுலைமான் (அலை) அவர்களின் கைத்தடியின் மின்சா-அ சக்தியை அழிக்கும் வரை, அஃதாவது நபியவர்கள்(அலை) உயிருடன் இருப்பது போல் காட்டிக்கொண்டிருந்த அந்த காட்சிகள் மறையும் வரை. அதன்பிறகுதான், அந்த ஜின்கள் சுலைமான்(அலை) இறந்து விட்டார் என்பதை உணர்ந்து கொண்டன. இந்த விஷயம் முன்னரே தெரிந்திருந்தால், நாம் இவ்வளவு காலம் கடினமாக உழைத்திருக்க வேண்டிய தேவை இல்லை என்பதை எண்ணி வருந்தின.

இன்றளவிலும் கூட பலதிருக்குர்ஆன் விரிவுரையாளர்களின் கருத்து என்னவென்றால், சுலைமான் (அலை) அவர்கள் தனது சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டு தனது கைத்தடியை ஊன்றிய நிலையிலேயே இறந்தார் என்பதேயாகும். மேலும் சிலர் சுலைமான் (அலை) அவர்கள், தனது சிம்மாசனத்தில் அல்லாது வேறு இடத்தில் இறந்திருக்கலாம் என்றும் கருதுகிறார்கள்.

فَلَمَّا قَضَيْنَا عَلَيْهِ الْمَوْتَ مَا دَلَّهُمْ عَلَىٰ مَوْتِهِ إِلَّا دَابَّةُ الْأَرْضِ تَأْكُلُ مِنسَأَتَهُ ۖ فَلَمَّا خَرَّ تَبَيَّنَتِ الْجِنُّ أَنْ لَوْ كَانُوا يَعْلَمُونَ الْغَيْبَ مَا لَبِثُوا فِي الْعَذَابِ الْمُهِينِ

நம்மில் பலர் இன்றளவிலும்திருக்குர்ஆனை அதன் மொழிபெயர்ப்பை தவிர்த்து வேறு வழியில் புரிந்து கொள்வதற்கு எந்தவித வாய்ப்பும் இல்லை. சில ஆங்கில மொழிபெயர்ப்பினால் நம் மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய விஷயங்களை நாம் இப்போது பார்ப்போம்.

(திருக்குர்ஆன் - சபா 34:14)

இன்று பலபேர், மொழியாக்கத்தின் மூலமாகவேதிருக்குர்ஆனை அனுகுகிறார்கள், இவ்வாறு அனுகுபவர்கள், இந்த வசனத்தை எவ்வாறு புரிந்து கொண்டிருப்பார்கள் என்பதை கீழுள்ள வசனங்களின் மூலம், நாம் காண்போம்.

முஹம்மது அஸத் அவர்கள் மேற்கண்டதிருக்குர்ஆன் வசனத்தை எவ்வாறு மொழிபெயர்த்திருக்கிறார் என்றால்:

அவர் (சுலைமான்) மீது நாம் மரணத்தை விதித்த போது அவர் இறந்து விட்டார் என்பதை, அவர் (சாய்ந்திருந்த) தடியை அரித்து விட்ட நிலத்தின் பூச்சி (கரையானைத்) தவிர வேறெதுவும், அந்த ஜின்களுக்கு அறிவிக்கவில்லை. அவர் கீழே விழவே "தாங்கள் மறைவான விஷயங்களை அறிந்திருக்கக் கூடுமானால் (கடின உழைப்பாகிய) இழிவுதரும் வேதனையில் தாங்கள் தரி பட்டிருந்திருக்க வேண்டியதில்லை" என்று ஜின்களுக்கு தெளிவாக தெரிந்தது.

இந்த வசனத்தின் தெளிவுரை கீழ்வருமாறு காணப்படுகிறது:
சுலைமான்(அலை) அவர்களின் இந்த சம்பவத்தை எடுத்துக்காட்டி பண்டைய கால அரபு வழிமுறைப்படி,திருக்குர்ஆன் இங்கு நமக்கு ஒரு பாடம்

கற்பிக்கின்றது. அந்த எடுத்துக்காட்டு என்னவென்றால், சுலைமான் (அலை) அவர்கள் தனது சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் நிலையிலேயே கைத்தடியை ஊன்றியவாரே இறந்தார் என்றும், அவர் இறந்த விஷயத்தை யாரும் அறிந்து கொள்ளாததால், அவருக்கு பணி செய்யுமாறு கட்டளை இடப்பட்டிருந்த ஜின்கள், தொடர்ந்து தங்களின் கடினமான வேலையை செய்து கொண்டே இருந்தன. அதன் பிறகு சில கரையான்கள், அவர் ஊன்றியிருந்த கைத்தடியை சிறுக சிறுக அரித்ததால்,அவர் உடல் நிலைகுலைந்து கீழே விழுந்தது என்பதாகும். இந்த சம்பவத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்ளக்கூடிய பாடம் என்னவென்றால், மனிதனின் இவ்வுலக வாழ்க்கையின் ஆசாபாசங்களும் மேற்கூறப்பட்ட கைத்தடியை போல விரைவில் அழிந்து போகக் கூடியவையாகும்.

இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், மேற்கூறப்பட்ட வசனங்கள் யாவும் உண்மை சம்பவத்தை பிரதிபலிப்பதாக இல்லை, மாறாக இதன் மூலம் அல்லாஹுத்தஆலா நமக்குதிருக்குர்ஆனில் ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுத்துள்ளான் என்று குறிப்பிட்டுகிறார், முஹம்மது அஸத் .ஏனென்றால், சுலைமான் (அலை) அவர்கள் இறந்த நிலையிலேயே வெகுநேரம் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்ததை அந்த ஜின்கள் கூட அறியவில்லை என்றுள்ளது, அது எதுவரையெனில், சில கரையான்கள் அவரது கைத்தடியின் கீழ் பாகத்தை வெகுநேரம் அரித்து, அதன் பிறகே அவர் உடல் நிலைகுலைந்து கீழே விழுந்தது.அதன்பின்னரே ஜின்களுக்கு தெரிய வந்தது.எனவே,0இவ்வாறு நடந்திருக்க வாய்ப்பில்லை என்று அஸத் அவர்கள் கருதியால்தான், இப்படி ஒரு விளக்கத்தை அவர் அளித்துள்ளார்.

அல்லாஹ் சுப்ஹானதஆலா,திருக்குர்ஆனில் கூறும் உவமைகளை சரியாகப் புரிந்து கொள்ளாத காரணத்தினால்தான், அஸத் அவர்கள், இந்த வசனத்திற்கு, ஒரு தவறான விளக்கத்தை கொடுப்பதற்கு காரணமாக அமைந்திருக்கிறது.

அப்துல்லா யூசுஃப் அலி இந்த வசனத்தை எவ்வாறு மொழிபெயர்த்திருக்கிறார் என்றால்:

சுலைமானுக்கு(அலை) நாம் மரணத்தை விதித்தபொழுது அவர் இறந்து விட்டார் என்பதை, அவர் சாய்ந்திருந்த தடியை அரித்து விட்ட பூச்சியைத் தவிர (மற்ற எவரும்) அந்த ஜின்களுக்கு அறிவிக்கவில்லை. (அவர் சாய்ந்திருந்த தடியைக் கரையான் பூச்சிகள் அரித்து விட்டன. ஆகவே, அதன் மீது சாய்ந்திருந்த சுலைமான் கீழே விழுந்துவிட்டார்.) அவர் கீழே விழவே

(வேலை செய்து கொண்டிருந்த) அந்த ஜின்களுக்கு தாங்கள் மறைவான விஷயங்களை அறியக் கூடுமாக இருந்திருந்தால், (இரவு பகலாக உழைக்க வேண்டிய) இழிவு தரும் இவ்வேதனையில் தங்கி இருக்க மாட்டோம் என்று வருந்தினர்.

இந்த வசனத்தின் தெளிவுரை கீழ்வருமாறு காணப்படுகிறது:

இந்த வசனத்தின் மூலம் நமக்கு மூன்று விஷயங்கள் தெளிவாகிறது,
(1) ஒரு மனிதனுக்கு எவ்வளவு பெரிய பதவி பரிமாணங்கள் இருந்தாலும், அது அவனிடமிருந்து பறிபோகிறது என்று யாரும் எண்ணாத சமயத்திலேயே அது பறிபோய்விடும் (2) சில முக்கியமான நிகழ்வுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதற்கு, பெரிய அளவில் பிரச்சாரம் தேவையில்லை, சிறிய அளவில் கண்ணுக்கு புலப்படாத வகையிலும் வெளிக்கொணரக் கூடும். அது எவ்வளவு சக்திவாய்ந்த விஷயமாக கூட இருக்கலாம்,உதாரணத்திற்கு, மனிதர்கள் பிடித்து அமரக்கூடிய அந்தக் கைத்தடியை கரையான் அரித்து, அதன்மூலம், மரணத்தை பற்றி அனைவரும் அறிந்தது. (3) எங்கு நாம் தண்டிக்கப்பட்டு விடுவோமோ என்று பயந்து கொண்டே செய்யக்கூடிய வேலைகள் என்றுமே நமக்கு பயன்தராது, உதாரணத்திற்கு அந்த ஜின்களை போல. அல்லாஹுதஆலாவிற்காக வேலை செய்கிறோம் என்றால், நாம் எப்போது மனமுவந்து செயல்படுவோமோ, அதுதான் உண்மையாக பலனளிக்கக் கூடியதாகும். அதேபோல்தான் தாவூத் (அலை) அவர்கள் சம்பவத்திலும், அவருடைய போர் திறமையும் (குர்ஆன் - 2:251) ஆயுதங்களை தயாரிக்கும் நுணுக்கங்களும் நல்ல முறையில் பயன்பட்டன. எவ்வாறெனில், அதனை அவர் அல்லாஹ்வுடைய பாதையில் பணி செய்ததினால், அவருக்கு கிடைத்ததாகும். (குர்ஆன் - 34:11). இதன் காரணமாகத்தான் சுலைமான் (அலை) மற்றும் தாவூத் (அலை) அவர்களின் கோயில்களில் (வழிபாட்டுத் தலங்களில்) வேலை செய்து கொண்டிருந்தவர்களின் பணிகள் புனிதமாக பார்க்கப்பட்டன. இதனை அறியாததினால்தான் ஜின்களுக்கு அவர்களுடைய வேலை ஒரு சுமையாகவே தெரிந்தது.

மறைவான ரகசியங்களைப் பற்றி ஜின்களுக்கு எதுவும் தெரியாது; அவர்கள் வெளிப்படையானதை மட்டுமே அறிவார்கள். சுலைமான் (அலை) அவர்களின் கைத்தடியை கரையான்கள் இடைவிடாது நீண்ட காலம் அரித்ததையும், அவர்கள் அறியவில்லை.

மர்மடூக் பிக்தாலின் மொழிபெயர்ப்பு:

மேலும், நாம் அவருக்கு மரணத்தினை விதித்தபொழுது, பூமியின் ஊர்ந்து செல்லும் ஒரு பிராணியைத் தவிர,வேறொன்றும் அவரது மரணத்தை ஜின்களுக்கு காட்டவில்லை.அவை அவருடைய கைத்தடியை அரித்தன. அவர் சரிந்து விழுந்ததை கண்ட ஜின்கள் இந்த மறைவானவற்றை முன்னரே அறிந்திருந்தால், இவ்வளவு நாள் வெறுக்கத்தக்க உழைப்பை தொடர்ந்திருக்க மாட்டார்கள்.

நாட்டை ஆளும் மன்னன் தன்னுடைய அறையில் இறந்திருந்தால் அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கு விரைவிலேயே தெரிந்திருக்கும். இதை சாதாரணமாக சிந்தித்தாலே, நமக்கு புரிந்துவிடும். இதை உணர அடிப்படையான பொதுஅறிவே போதுமானது. மாறாக, அவர் சிம்மாசனம் போன்ற பொது இடத்தில் இறந்திருந்தால், இறந்து ஒரு மணி நேரத்திற்குள்ளேயே அறிந்து கொள்வர். அவர் இறந்துவிட்டார் என்பதை யாருமே உணராமல் ஒரு நாள் முழுவதும் அவர் தனது சிம்மாசனத்திலோ அல்லது வேறு எங்கும் இறந்து கிடந்திருக்க முடியாது. ஒரு பொது அரங்கில், தனது சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் மன்னர் ஒருவர், தனது நீதிமன்றத்தின் முன்னிலையில் இருப்பதோடு மட்டுமல்லாமல், தனதருகே பாதுகாப்பு ஊழியர்களையும் கொண்டிருப்பார். அவர்கள் அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்த தொடர்ந்து அவரைக் கண்காணித்து வருவர். அத்தகைய பாதுகாப்பு ஊழியர்கள்,அவருக்கு ஏதேனும் நேர்ந்தால், சில நிமிடங்களிலேயே அதனை உணர்ந்து விசாரிப்பார்கள். தன்னுடைய அறையில் தனித்தே இருந்தாலும், ஒரு ராஜாவை அணுக குடும்ப உறுப்பினர்களும், அவருடைய ஊழியர்களும் கண்டிப்பாக இருப்பார்கள்.ஒரு ராஜா பணிவிடை இல்லாமல் நீண்ட நேரம் தனித்திருக்க முடியாது.எனவே அவரது மரணம் விரைவில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது சாத்தியமற்றது.

சுலைமான்(அலை) சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும்போதே இறந்துவிட்டதாகவும், அவருடைய கைத்தடியை கரையான்கள் இடைவிடாது நீண்ட காலம் அரித்தபின்னர் தான் அவருடைய உடல் சரிந்தது என்பதே உலகளாவிய பார்வையாக, இன்றுவரை உள்ளது. சுலைமான் (அலை) இறந்தபின் அவருடைய இடத்தில் அமர்ந்திருப்பது ஜஸத் என்பதே நமது கருத்தாக இருக்கிறது. மேலும் சுலைமான் (அலை) இறந்த பின்னரும் அவருடைய கைத்தடியின் மின்சா-அ சக்தியை பயன்படுத்தி, காலத்தில் முன்னும் பின்னுமாக பயணித்து, அவர் உயிருடன் இருப்பது போன்ற உண்மையான தோற்றத்தை (காட்சிகளை) ஜின்களுக்கு

காட்டிக்கொண்டிருக்கிறான், ஜஸத். இருப்பினும், தாப்பத்துல்-அர்த் தோன்றி சுலைமான் (அலை) உடைய கைத்தடியின் மின்சா-அவை முழுமையாக அழிக்கும் பொழுது, சுலைமான்(அலை) அவருடைய சிம்மாசனத்தில் அமர்ந்து இருப்பது போன்றும், அவர் நகர்வது போன்றும் போலியான தோற்றத்தை(காட்சியை) வழங்கிக் கொண்டிருக்கும் திறனை, ஜஸத் இழக்கிறான்.
இவ்வாறு கைத்தடியின் மின்சா-அ அழிக்கப்படும் போது சரிந்து விழுந்து காணாமல் போனது நபியுடைய போலியான தோற்றமேயன்றி, அவருடைய உண்மையான மனித உடல் அல்ல. இத்துணைநாள் சுலைமான் (அலை) இடத்தில் இருந்தது வேறொருவர் என்பதை, இதன்பிறகே ஜின்கள் உணர்ந்தன.

இத்துணை காலம் சுலைமான் (அலை) அவர்களின் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தது யார்? மேலும் சுலைமான்(அலை) அவர்களுக்கு வேலை செய்வதாக வஞ்சனை செய்து, நம்பவைத்து ஜின்களை அடிபணிந்து பணிபுரிய வைத்தது யார்? இதற்கு எங்களுடைய பதில் தஜ்ஜால்,அஃதாவது
ஜஸத்; அவன்தான் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறான். இந்த புத்தகம் எழுதப்படும்பொழுதும், அவன் இன்னும் நபியுடைய சிம்மாசனத்தில் தான் அமர்ந்திருக்கிறான்.

எனவே, தஜ்ஜால் இவ்வாறே போலியான தோற்றத்தை கொண்டு வஞ்சனை செய்து ஜின்களை ஏமாற்றிக்கொண்டிருப்பான். எதுவரையெனில் தாப்பத்துல்-அர்து அல்லது பூமியின் அதிசய பிராணி தோன்றி, சுலைமான்(அலை) நபியின் கைத்தடியின் மின்சா-அ அல்லது நபியின் போலியான தோற்றத்தை வழங்கும் தஜ்ஜாலின் வியக்கத்தக்க ஆற்றலை அழிக்கும் வரை.

ஆகவே, ஜின்களை சார்ந்த ஷாயாத்தினை, அவனுக்காக தீய வேலைகளில் ஈடுபட வைத்து இன்றுவரை லாபம் ஈட்டிக் கொண்டிருக்கிறான்,தஜ்ஜால். மேலும், இந்த புத்தகம் எழுதப்படும்போதே, இன்று தஜ்ஜால் செய்யும் தீய செயல்களினால்,மற்ற அனைவரும் வீழ்த்தப்படுவதுடன், ஜெருசலேம் உலகின் ஆளுமை நிலைக்கு முன்னேறி வருவதை நம்மால் ஓரளவு விளங்கிக் கொள்ள முடிகிறது.

அத்தியாயம்-6

தாப்பத்துல்-அர்த் பற்றிய விளக்கம் (அதாவது, மிருகம் அல்லது பூமியில் இருந்து வெளிப்படும் பிராணி)

குர்ஆனின் தாப்பத்துல்-அர்த் பற்றிய வசனங்களின் (அதாவது திருக்குர்ஆன், சபா 34:14) மூலம்,சுலைமான் (அலை) அவர்கள் ஊன்றிய கைத்தடியை, கரையான்கள் அரித்ததன்பின்னரே, அது தனது சமநிலையை இழந்து சரிந்தது என்பது உலகளவில் அனைவரும் புரிந்து கொண்டுள்ள கருத்தாகும். இந்த விளக்கம் எங்களுக்கு, நம்பத்தகுந்த அளவிற்கில்லை, ஏற்புடையதாகவும் இல்லை.

அல்லாஹ் சுப்ஹானதஆலா, தஜ்ஜாலின் இஸ்ரேல் மீதான அதிகாரத்தையும் பலத்தையும் குறைக்கும் வல்லமை படைத்தவர்களையும் உருவாக்கியுள்ளான்.அவர்கள் சுலைமானுடைய (அலை) கைத்தடியின் (அஃதாவது, மின்சா-அ) ஆற்றலை பலவீனப்படுத்துவார்கள். இதனால் கைத்தடியை சார்ந்து இருந்த புனித பூமியின் அரசாங்கமும்(அதாவது, ஃபித்ரா) பலவீனம் அடையும். இதை வைத்துதான், சுலைமான்(அலை) அவர்கள் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பது போன்றும், அவர் உயிருடன் இருப்பது போன்றும் உண்மையான தோற்றம், ஜின்களிடம் காட்டப்பட்டு அவர்களை நம்ப வைத்தது.இந்த அதிசயமான ஃபித்ராவை(சக்தியை) கைத்தடி இழக்கும்போது, இறந்து நீண்ட காலமாகியும் காட்டப்பட்டு கொண்டிருக்கும் சுலைமான் (அலை) அவர்களின் பொய்யான தோற்றம் சரிந்து விழும்; அது சரிந்ததும் ஜஸத் ஆகிய தஜ்ஜால், சிம்மாசனத்தில் இருப்பது சுலைமான்(அலை) தான், என்று ஜின்களை நம்ப வைக்கும் திறனை இழந்து விடுவான்.

இந்த உண்மை ஜின்களுக்கு தெரிய வரும்பொழுது, தஜ்ஜாலின் தூய்மையற்ற இஸ்ரேல் அரசாங்கம்,ஜின்களின் பல நூற்றாண்டுகால ஆதரவை இழக்க நேரிடும். இந்த விஷயம் இஸ்ரேலின் ஒவ்வொரு ஜயோனிச யூத மற்றும் ஜயோனிச கிறிஸ்தவ ஆதரவாளர்களையும் கலங்க வைக்கும்.

இந்த அசாதாரண தகவலை வழங்கியதிருக்குர்ஆனின் வசனம் இதோ:

فَلَمَّا قَضَيْنَا عَلَيْهِ ٱلْمَوْتَ مَا دَلَّهُمْ عَلَىٰ مَوْتِهِۦٓ إِلَّا دَآبَّةُ ٱلْأَرْضِ تَأْكُلُ مِنسَأَتَهُۥ ۖ فَلَمَّا خَرَّ تَبَيَّنَتِ ٱلْجِنُّ أَن لَّوْ كَانُوا۟ يَعْلَمُونَ ٱلْغَيْبَ مَا لَبِثُوا۟ فِى ٱلْعَذَابِ ٱلْمُهِينِ

அவர் (சுலைமான்) மீது நாம் மரணத்தை விதித்த போது அவர் இறந்து விட்டார் என்பதை, அவர் (சாய்ந்திருந்த) தடியை அரித்து விட்ட நிலத்தின் பூச்சி (கரையானைத்) தவிர வேறெதுவும் அந்த ஜின்களுக்கு அறிவிக்கவில்லை அவர் கீழே விழவே "தாங்கள் மறைவான விஷயங்களை அறிந்திருக்கக் கூடுமானால் (கடின உழைப்பாகிய) இழிவுதரும் வேதனையில் தாங்கள் தரி பட்டிந்திருக்க வேண்டியதில்லை" என்று ஜின்களுக்கு தெளிவாக தெரிந்தது.

(திருக்குர்ஆன்: சபா- 34:14)

ஜின்கள், அவர்கள் முன்னிருந்த யதார்தத்தினை உணர்ந்தனர். அதாவது, சுலைமான் (அலை) இறந்துவிட்டார். அவருடைய சிம்மாசனத்தில் வேறு யாரோ அமர்ந்திருக்கிறார்கள்.ஒரு வஞ்சகனக்கு அடிமையாக வெட்கக்கேடான துன்பத்தில், இவ்வளவு ஆண்டு காலம் தொடர்ந்து உழைத்திருக்கிறோம் என்பதை ஜின்கள் புரிந்து கொண்டனர்-இஸ்ரேலின் சார்பாக அவர்கள் செய்ய வேண்டும், என்று வஞ்சகனாகிய தஜ்ஜால் கட்டளையிட்ட அனைத்து தீய செயல்களையும்,சற்றும் சிந்திக்காமல் செய்து முடித்து வந்தனர் ஜின்கள்.நாம் சற்று சிந்தித்திருந்தோமேயானால்,தஜ்ஜால் தங்களை ஏமாற்றி பயன்படுத்திக் கொண்டிருந்ததை அறிந்திருக்க முடியும் என்று எண்ணி வருந்தினர்.

தாப்பத்துல்-அர்தைப் பற்றியதிருக்குர்ஆனின் மேற்கண்ட வசனம் (அதாவது, திருக்குர்ஆன்: சபா, 34:14) கிட்டத்தட்ட உலகளாவிய அளவில் மாற்றமில்லாமல்,ஒரே கருத்தாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.அதாவது கரையான்களுக்கு ஒத்த உயிரினங்கள்,ஊன்றி நிற்கும் கைத்தடியின் அடிவாரத்தை சாப்பிட்டன, இதனால், கைத்தடி தன் சமநிலையை இழந்து, சரிந்தது.இந்த விளக்கம் எங்களுக்கு, நம்பத்தகுந்த அளவிற்கில்லை, ஏற்புடையதாகவும் இல்லை.

குர்ஆனை,முறையான வழிமுறையை பின்பற்றி அணுகி பார்த்தோமேயானால் கைத்தடியை குறிக்க அசா-அ(عصا) என்ற வார்த்தை,பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில்திருக்குர்ஆன் அசாஅ என்ற வார்த்தையை 'கைத்தடிக்கு

பன்னிரண்டு முறை பின்குறிப்படப்பட்டிருக்கும் வசனங்களில் பயன்படுத்தியுள்ளது:[அல்-அராஃப்,7:107, 117, 160; தாஹா,20:18,66;அல்-ஷுஅரா, 26:32, 44, 45, 63; அல்-நம்ல், 27:10 மற்றும் அல்-கசாஸ், 28:31]

இவ்வாறு, அல்லாஹ் சுப்ஹானதஆலா கைத்தடியைக் குறிக்க அசாஅ என்ற வார்த்தையையே எப்பொழுதும் பயன்படுத்தியிருக்கும் பொழுது,இந்த ஓரிடத்தில் மட்டும் ஏன் மாற்றம் செய்து மின்சா-அ என்ற வார்த்தையை பயன்படுத்த வேண்டும். இது தற்செயலாக நடந்ததாக எடுத்துக் கொள்ள முடியாது.அசா-அ என்ற வார்த்தையில் இருந்து மாற்றம் செய்து மின்சா-அ என்ற வார்த்தையை பயன்படுத்தியதற்கு தனித்த உறுதியான காரணம் இருந்திருக்க வேண்டும்.

நம்மை சிந்திக்க வைக்கும் பொருட்டே அல்லாஹ் சுபஹானதஆலாதிருக்குர்ஆனை இறக்கி அருளினான்.இந்த தருணத்தில், மின்சா-அ என்னும் ஒரு புதிய சொல்,திருக்குர்ஆன் முழுவதும் கைத்தடியைக் குறிக்க பயன்படுத்தப்பட்ட அசா-அ என்ற வார்த்தைக்கு பதிலாக ஏன் பயன்படுத்தப்படுகிறது என்ற கேள்வியே நம்மை சிந்திக்க வைக்கும் பொருட்டாகவே அமைந்துள்ளது.

குர்ஆனை சரியான வழிமுறையை பயன்படுத்தி ஆராய்ந்து மின்சா-அ என்னும் சொல்லை சொல்லத் தேடியபொழுது, இதேபோன்று வேறு ஒரு நிகழ்வு,அஃதாவது,சூரா: அத்-தவ்பாவில் பின்வருமாறு உள்ளது.

إِنَّمَا ٱلنَّسِىٓءُ زِيَادَةٌ فِى ٱلْكُفْرِ ۖ يُضَلُّ بِهِ ٱلَّذِينَ كَفَرُوا۟ يُحِلُّونَهُۥ عَامًا وَيُحَرِّمُونَهُۥ عَامًا لِّيُوَاطِـُٔوا۟ عِدَّةَ مَا حَرَّمَ ٱللَّهُ فَيُحِلُّوا۟ مَا حَرَّمَ ٱللَّهُ ۚ زُيِّنَ لَهُمْ سُوٓءُ أَعْمَـٰلِهِمْ ۗ وَٱللَّهُ لَا يَهْدِى ٱلْقَوْمَ ٱلْكَـٰفِرِينَ

மேலே உள்ள வசனங்களில் அல்லாஹ் சுபஹானதஆலா மாதங்களை மாற்றி குழப்பம் செய்தவர்களை எச்சரிக்கிறான்.

"(போர் செய்யக்கூடாது என்று தடுக்கப்பட்ட இம்மாதங்களை அவர்கள் தங்கள் விருப்பப்படி) முன்னும் பின்னும் ஆக்குவதெல்லாம் குஃப்ரை (நிராகரிப்பை) யே அதிகப்படுத்துகிறது இதனால் நிராகரிப்பவர்களே வழி கெடுக்கப் படுகின்றனர். ஏனெனில் ஒரு வருடத்தில் அம்மாதங்களில்

போர் புரிவ)தை அனுமதிக்கப் பட்டதாகக் கொள்கிறார்கள்;) மற்றொரு வருடத்தில் அதைத் தடுத்து விடுகின்றனர். இதற்கு காரணம் (தாங்கள் தடுத்துள்ள மாதங்களின் எண்ணிக்கையை) அல்லாஹ் தடுத்திருக்கும் மாதங்களின் எண்ணிக்கைக்குச் சரியாக்கி, அல்லாஹ் தடுத்திருக்கும் மாதங்களை தாங்கள் ஆகுமாக்கிக் கொள்வதற்காகத்தான். அவர்களின் (இத்)தீச்செயல்கள் அவர்களுக்கு (ஷைத்தானால்) அழகாக்கப்பட்டுவிட்டன அல்லாஹ், கா:ஃபிர்கள் கூட்டத்தை நேர் வழியில் செலுத்த மாட்டான்"

(திருக்குர்ஆன்: அத்-தவ்பா- 9:37)

திருக்குர்ஆனின் மேற்கண்ட வசனங்களில் உள்ள அல்-நாசியு என்ற வார்த்தை 'நேரம்' என்றே பொருள்தருகிறது. இந்த இடத்தில், வழக்கமாக காலத்தை அளவிடும் முறையில் மாற்றமாக, ஒரு வருடம் பன்னிரண்டு சந்திர மாதங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று உயர்ந்தவனாகிய அல்லாஹ் சுபஹானதஆலா கட்டளையிட்டுள்ளான்.

நபி (ஸல்) இதே வார்த்தையைப் 'நீடித்த ஆயுட்காலம்' என்பதை கூறும்பொழுது நேரத்தைக் குறிப்பிட பயன்படுத்தியுள்ளார்:

عن أنس بن مالك رضي الله عنه قال : سمعت رسول الله صلى الله عليه وسلم

يقول:من سره أن يبسط له في رزقه أو ينسأ له في أثره فليصل رحمه

யார் தனக்கு அதிக செல்வமும், நீண்ட நெடிய வாழ்க்கையும் வேண்டும் என்றும் விரும்பிகிறாரோ, அவர் தனது உற்றார் உறவினர்களுடன் நல்ல முறையில் உறவை பேண வேண்டும்.

(புகாரி, முஸ்லிம்)

குர்ஆனின் சில விரிவுரையாளர்கள் மேலே உள்ள மின்சா-அ என்ற சொல்லுக்கு, 'கைத்தடி என்று பொருள் தருகின்றனர். ஆனால் மின்சா-அ என்ற வார்த்தைக்கு இந்த விளக்கம் போதுமானதாக இல்லை என்று நாங்கள் கருதுகிறோம்.

மின்சா-அ என்ற வார்த்தைக்கு இந்த விளக்கத்தை நாம்

ஏற்றுக்கொண்டோமேயானால், சுலைமான் (அலை) தனது கைத்தடியில் ஊன்றி அமர்ந்திருந்தார் என்பதும், கைத்தடி சரிந்தபோது, அவரது இறந்த உடலும் சரிந்தது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டி வரும்.

<u>மின்சா-அ பற்றிய நமது பார்வை</u>:

சுலைமான் (அலை) அவர்களின் கைத்தடியை வைத்திருப்பதால் தான், சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ஜஸத்,ஜின்களை தொடர்ந்து அவனுக்காக பணியாற்ற வைக்க முடிகிறது, என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஜின்கள் மீது இவ்வளவு ஆதிக்கம் செலுத்த முடிகிறது என்றால்,சுலைமான் (அலை) அவர்களின் கைத்தடிக்கு இறைவனால் அருளப்பட்ட அதிசய சக்திகள் அல்லது மறைவான உலகத்தின் காலச்சக்கரத்தோடு(World of Time) தொடர்பை ஏற்படுத்தும் பண்புகள் இருந்திருக்க வேண்டும்.

நம்முடைய வரலாற்றில்,சற்று பின்னோக்கி பார்த்தோமேயானால்,அவருடைய கைத்தடி, இறைவனால் அருளப்பட்ட அபூர்வ சக்திகளை கொண்டிருந்தது தெரியவரும். இதை வைத்து தான் மோசஸ்,அதாவது,நபி மூஸா (அலை) அவர்கள் செங்கடலில் ஓங்கி அடிக்க, பின்னர் அது வியக்கத்தக்க வகையில் பிளந்து ஒரு பாதையை உருவாக்கி பனூஇஸ்ரேலியர்களை பாதுகாப்பாக செங்கடலை கடந்து செல்ல உதவியது. **(குர்ஆன், அல்-ஷுரா, 26:23 ஐ காணவும்)**.இதே கைத்தடியை வைத்து தான், மூஸா (அலை) பாறையில் அடித்தார். அப்பாறையிலிருந்து பனூஇஸ்ராயிலின் பன்னிரண்டு பழங்குடியினருக்கும் ஒவ்வொரு ஊற்றின் வீதம், பன்னிரண்டு நீரோட்டங்கள் அற்புதமாக பெருக்கெடுத்து ஓடின. **(குர்ஆன், அல்-பகரா, 2: 160 ஐ பார்க்கவும்).**

இதே கைத்தடியாள்தான் நபி மூஸா (அலை) ஃபிர்அவ்னின் மந்திரவாதிகளை தோற்கடித்தார். அவருடைய கைத்தடி ஒரு பாம்பாக மாறி அந்த மந்திரவாதிகள் தயாரித்த அனைத்தையும் விழுங்கியது. **(குர்ஆன், அல்-அராஃப், 7: 107-117 ஐ பார்க்கவும்).**

தந்தை யாகூப்பின் (அலை) முகத்தில் வீசப்பட்ட அவருடைய மகனான யூசுப்பின் (அலை) சட்டைதான்,அவருடைய பார்வையை அனைவரும் வியக்கத்தக்கவகையில் மீட்டெடுக்க உதவியது என்பதை, நாம் நினைவு கூரலாம்.

காலத்தில் முன்னோக்கியும் பின்னோக்கியும் பயணம் மேற்கொண்டு

இயங்குவதை, சாத்தியமாக்கிய கைத்தடியின் அதிசய சக்திகளைத் தான், மின்சா-அ என்ற வார்த்தை குறிப்பிடுகிறது என்றால், இதை வைத்து தான் தஜ்ஜால்,ஜின்களை ஏமாற்றி சுலைமான் (அலை) இறந்ததையும், அவரது சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பது வேறு யாரோ என்பதையும்,ஜின்களால் உணர முடியாதவாறு செய்கிறான்.

எங்கள் கண்ணோட்டம் என்னவென்றால், சுலைமான் (அலை) உயிருடன் இருப்பது போன்றும், அவரது சிம்மாசனத்தில் அமர்வது மற்றும் நகர்வது போன்றும், ஜின்களுக்கு பொய்யான காட்சிகளை வழங்குவதற்கு,மின்சா-அ தான் சாத்தியம் ஆக்குகிறது. இதனால் தான் ஜின்கள் ஏமாற்றப்பட்டனர்.

இதனால் தாப்பத்துல்-அர்த் என்பது கைத்தடியின் விஷேசமான சக்தியையும், அதனுடைய அதீத திறனையும் அழிக்க கூடியதாக இருக்க வேண்டும் .இதன் மூலம் தஜ்ஜால் ஜின்களுக்கு காட்டும் போலியான தோற்றமும் மறைந்து போகும்.

நம்முடைய விளக்கம் என்னவென்றால்,திருக்குர்ஆனிலும், நபி(ஸல்) மொழிகளிலும்(ஹதீஸ்),மின்சா-அ என்ற வார்த்தைக்குதிருக்குர்ஆனின் சில விரிவுரையாளர்கள் குறிப்பிடுவது போல், கைத்தடியைத் தான் குறிக்கிறது, என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இதன்மூலம் மின்சா-அ என்பது சுலைமான் (அலை) கைத்தடியில் உள்ள காலச்சக்கரத்தோடு தொடர்புள்ள அதிசய சக்தியை குறிக்கலாம் என்ற மாற்றுக் கருத்து உள்ளது.

ஒரே நேரத்தில் வெவ்வேறு பரிமாணங்களுக்கு முன்னும் பின்னுமாக, ஒரே நேரத்தில் பயணிக்க அனுமதிக்கும் கைத்தடியின் அதிசய திறனை அழிக்கக்கூடியது தான் தாப்பத்துல்-அர்த். இவ்வாறு முன்னும் பின்னுமாக இரு காலச்சக்கரத்தில் பயணித்ததின் மூலம்தான், குகையில் தூங்கிக் கொண்டிருந்த இளைஞர்களால் ஒரே நேரத்தில் இரண்டு பரிமாணங்களில் இருக்க முடிந்தது. **(குர்ஆன், அல்-கஹ்ஃப், 18: 16-20 ஐ காண்க)**.

ஜஸத்தால் காலத்தின் வெவ்வேறு பரிமாணங்களுக்கு சென்று வருவதை கையாள முடிந்தால், அதன் மூலம் சுலைமான் (அலை) அவர்களின் மரணத்தையும் மறைக்க முடியும். அதே போன்று அவர் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்று நம்ப வைக்க சுலைமானின் (அலை) பொய்யான தோற்றத்தையும், ஜின்களுக்கு முன் வைக்க முடியும்.

சுலைமான் (அலை) அவர்களின் கைத்தடியில் உள்ள மின்சா-அ மூலம்

ஜஸத் ஆகிய தஜ்ஜால் வெவ்வேறு பரிமாணங்களைக் கையாள முடியும். இதனை வைத்து புனித பூமியாகிய ஜெருசலேமில் இருந்து தனது கொள்கையான ஓர் உலக ஆட்சியை நிறுவ முடியும் என்றால், தாப்பத்துல்-அர்த்துடைய முக்கிய கோட்பாடு கைத்தடியின் அபூர்வ திறனை இழக்கச் செய்வதாகவே இருக்கும்.இவ்வாறு செய்வதன் மூலம் தஜ்ஜாலுடைய ஆட்சிக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்படும். அது கைத்தடியின் மின்சா-அ என்ற அதிசய திறனை உட்கொண்டு அழிப்பதன் மூலம், அதனுடைய செயல்களும் தடுக்கப்படும். எனினும்,அல்லாஹ்வே சர்வமும் அறிந்தவன். அல்லாஹுஆலம்.

குர்ஆனுடைய மற்றொரு வசனம், தாப்பத்துல்-அர்த் என்பது 'அவர்களுடன் பேசும்' அல்லது 'அவர்களைக் காயப்படுத்தும்' என்று விவரிக்கிறது:

وَإِذَا وَقَعَ ٱلْقَوْلُ عَلَيْهِمْ أَخْرَجْنَا لَهُمْ دَآبَّةً مِّنَ ٱلْأَرْضِ تُكَلِّمُهُمْ أَنَّ ٱلنَّاسَ كَانُوا۟ بِـَٔايَٰتِنَا لَا يُوقِنُونَ

அவர்கள் மீது (வேதனையுடைய) வாக்கு நெருங்கும் போது, அவர்களுக்காக ஒரு பிராணியை பூமியிலிருந்து நாம் வெளியாக்குவோம்; அது, நிச்சயமாக மனிதர்கள் (யார், யார்) நம் வசனங்களின் மீது உறுதி கொள்ளவில்லையென்று அவர்களுக்குச் சொல்லிக் காண்பிக்கும்.

(திருக்குர்ஆன், அல்-நம்ல்-27:82)

பூமியில் தோன்றும் மிருகம் அல்லது பிராணி, அஃதாவது தாப்பத்துல்-அர்த், வெளிப்படுவது மக்களின் அறியாமையைக் குறிக்கும்.அப்பொழுது, அவர்கள் வேதத்தை முற்றிலுமாக நிராகரித்து, மூளை சலவை செய்யப்பட்டவர்களாக இருப்பார்கள்.

ஒரே அரபு வார்த்தையான تكلمهم வெவ்வேறு ஒலிக்குறியீடுகளின்(**அல்-தஷ்கீல்** - التشكيل) அடிப்படையில, இரண்டு வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்டிருக்கலாம். **துகல்லிமுஹும்** என்றால் '**அவர்களுடன் பேசுங்கள்**' என்று பொருள். ஆனால் அது **தக்லிமுஹும்** என்று எழுதப்பட்டால், '**அவர்களைக் காயப்படுத்துங்கள்**' என்று பொருள். நாம் இப்போது எடுத்துக் கூறிய விதத்தில், தாப்பத்துல்-அர்தை விளக்கினால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு அர்த்தங்களும் பொருந்தும்.

நபிகள் நாயகம் (ஸல்) காலத்தில் வாழ்ந்த கற்றறிந்த தோழரான அப்துல்லா இப்னு அப்பாஸ் (ரலி),இதே கருத்தை கொண்டிருந்தார். **(தஃப்சீர் அல்-குர்துபியைக் காண்க)**

கண்ணுக்குத் தெரியாத மின்னணு அலைகளை, தொலைக்காட்சித் திரைகள், ஸ்மார்ட் போன்கள் மற்றும் வயர்லெஸ் இண்டர்நெட் ஆகியன வெளிப்படுத்துகின்றன. இந்த மின்னணு அலைகளே தாப்பத்துல்-அர்த் என்று நமக்கு தோன்றுகிறது. அல்லாஹு ஆலம். எனினும்,அல்லாஹ்வே சர்வமும் அறிந்தவன்.

ஏற்கனவே, தேனீக்கள் மகரந்த சேர்க்கைக்கு செல்லும்பொழுது, வழி அறியாமல் சிரமப்படுகின்றன.இதன் விளைவாக, நவீன உலகில் தேன் உற்பத்தியின் நிலை மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது.

கூடுதலாக,மின்னணு தகவல்தொடர்பு மூலம் இயங்கும் "ஸ்மார்ட் போன்கள்" மற்றும் பிற தொலைபேசிகளும், உலகின் பெரும்பகுதிகளை ஒன்றாக ஒருங்கிணைத்து `**Talk City**' என்ற **பேச்சு நகரமாக** மாற்றி வருகின்றன. இதில் மக்கள் ஆட்டு மந்தைகளைப் போல கண்கள் கட்டப்பட்டு ஒரு முடிவே இல்லாமல், மணி கணக்கில்,நாட்கணக்கில்,சில சமயம் வாரங்களாக, வாழ்நாள் முழுவதும் பேசியே கழிக்கின்றனர்.
இந்த ஆட்டுமந்தைகள் பல சமயங்களில் 'வள வள' என்று பேசி ரம்பம் போட்டுக்கொண்டே இருப்பதால், இந்த சாதனங்கள் இல்லாமல் வாழ முடியாத அளவுக்கு அடிமையாகி விடுகின்றனர். இவ்வாறு பேச்சிலேயே நம்மை மூழ்கடித்து வைத்திருப்பது, தற்செயலாக நடக்கவில்லை என்பதை அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். இதில் தான் இவர்களுடைய(தஜ்ஜாலினுடைய) திட்டம் வெளிவருகிறது. மின்னணு அலைகள் வளிமண்டலம்,மனிதனின் செவிப்பறை(Ear Drum) மற்றும் மூளைக்குள் ஊடுருவதால், அழிக்கப்பட இருப்பது சுலைமான் (அலை) அவர்களின் கைத்தடியின் அதிசய பண்புகள் மட்டுமல்ல, ஆட்டு மந்தைகளாக வாழும் மக்களினுடைய மூளையும் தான்.

இது மனித மூளைகளை பாதித்து மூளை புற்றுநோய், **டிமன்ஷியா**(நியாபக மறதி, யோசிக்கும் திறனை இழத்தல்). **அல்ஜைமர்**(எனப்படும் ஒரு வகையான டிமென்ஷியா நோய்) முதலியவற்றை உருவாக்கும்.இந்த நோய்கள் எல்லாருக்கும் ஏற்படும் பெருவாரியாக பரவும் தொற்று நோயாக(epidemic) கூட மாறலாம். அல்ஜைமர் நோய் (Alzheimer Disease) என்பது

நிரந்தரமான நினைவிழத்தல் நோய் எனலாம்.நம்முடைய குணத்தில், செயல்பாடுகளில் மாற்றம் ஏற்படும்.

وَلَا تَكُونُوا۟ كَٱلَّذِينَ نَسُوا۟ ٱللَّهَ فَأَنسَىٰهُمْ أَنفُسَهُمْ ۚ أُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْفَٰسِقُونَ

அன்றியும், அல்லாஹ்வை மறந்து விட்டவர்கள் போன்று நீங்கள் ஆகிவிடாதீர்கள், ஏனெனில் அவர்கள் தங்களையே மறக்கும்படி (அல்லாஹ்) செய்து விட்டான், அத்தகையோர் தாம் ஃபாஸிக்குகள் - பெரும் பாவிகள் ஆவார்கள்.

(திருக்குர்ஆன்: அல்-ஹஷ்ர் 59:19)

தாப்பத்துல் அர்த்தைப்பற்றி மேலேயுள்ள அடையாளங்களை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், வேறு சில குறிப்புகளில் விவரிக்கப்பட்டுள்ளது போன்று, தாப்பத்துல்-அர்த்தின் வேறு சில அடையாளங்கள் நிகழ்வதைக் காணும் வரை காத்திருக்கலாம்.அவை பின்வருமாறு:

‘அதன் தலை ஒரு காளையின் தலை போன்றது, அதன் கண்கள் பன்றியின் கண்கள் போன்றது, அதன் காதுகள் யானையின் காதுகள் போன்றது, அதன் கொம்புகள் ஒரு மானுடைய கொம்புகள் போன்றது, அதன் கழுத்து நெருப்புக்கோழியின் கழுத்து போன்றது, அதன் மார்பு சிங்கத்தின் மார்பு போன்றது, அதன் நிறம் புலியின் நிறம் போன்றது, அதன் வேட்டையாடும் திறன் பூனையின் திறனை போன்றது, அதன் வால் ஒரு ஆட்டுக்குட்டியின் வால் போன்றது, அதன் கால்கள் ஒட்டகத்தின் கால்கள் போன்று இருக்கும்.

தாப்பத்துல்-அர்தினுடைய இந்த செயல்பாடு தஜ்ஜாலினுடைய பண்பிற்கு மிகவும் ஒத்ததாகவும், உகந்ததாக இருக்கிறது,ஏனென்றால், தற்பொழுது இஸ்ரேலுக்கு எதிரிகளாக விளங்கும் ஒவ்வொரு நாட்டையும் சுவடில்லாமல் அழிப்பதையே, ஒரே குறிக்கோளாக வைத்துள்ளான். இந்த குறிக்கோளானது ,இப்போது அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நவீன மேற்கத்திய நாடுகளை பீடித்து வருகிறது.ஓர் உலக ஆட்சியை நோக்கி, சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ஜஸத்தின் அரசாங்கத்தை தாங்கி நிற்கும் சுலைமான் (அலை) அவர்களின் கைத்தடியின் மின்சா-அ சக்தியை, எப்படி தாப்பத்துல்-அர்த் அழிக்க இருக்கிறதோ,அதேபோன்று உலகை ஆளும் நாடுகளும், பாக்ஸ் பிரிட்டானிக்கா மற்றும் பாக்ஸ் அமெரிக்கானா போன்றவற்றை இந்த உலகிற்கு வழங்கிய மிகப் பெரிய நட்பு

நாடுகளும்,இதே சக்தியால் ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டு ஆட்சியில் இருந்து அகற்றப்படுவார்கள். உலகில் இஸ்ரேலிய அரசுக்கு போட்டியாளர்களாக இருப்பவர்கள் அனைவரும், வரும் காலங்களில் வீழ்த்தப் படுவார்கள்.அதற்கான நேரமும் நெருங்கி விட்டது.
(குறிப்பு - பாக்ஸ் பிரட்டானிக்கா (உலக நிலப்பரப்பில் 1/4 பங்கை கைப்பற்றி, அங்குள்ள மக்களை நாகரிக்கத்தில் முதன்மைப் படுத்துகிறோம் என்ற பெயரில் அடிமைப்படுத்தி ஆண்டதை குறிப்பது, பாக்ஸ் அமெரிக்கானா (இரண்டாம் உலகப்போருக்குப் பின், அமெரிக்கா உலக வல்லரசாக இருந்தபொழுது, உலக நாடுகளுக்கிடையே அமைதியை நிலைநாட்டுகிறோம் என்ற பெயரில் போலியாக உருவாக்கிய ஒப்பந்தம்)

இந்த எழுத்தாளர்,ஒரிறைக் கொள்கையுடைய அனைவருக்கும் அறிவுருத்த விரும்புவது என்னவென்றால்: முஸ்லிம்களோ, கிறிஸ்தவரோ, யூதரோ அல்லது வேறுவித நம்பிக்கை கொண்ட அனைவருக்கும், இவர்களோடு, தஜ்ஜாலின் மின்னணுதொடர்பில் இணைக்கப்பட்ட உலகத்தினை தழுவி, சிக்குண்டு வாழும் அனைத்து மக்களும்,திருக்குர்ஆனை அரபியில் ஓதுங்கள். இவ்வாறு திருக்குர்ஆனை ஓதுவதன் மூலம், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆபத்துகளில் இருந்து பாதுகாப்பும், நம்முடைய மனதை குணப்படுத்தும் அருமருந்தாகவும், அது அமையும்.அதுவும் எவரொருவர், அதிகப்படியான நேரத்தை இந்த மின்னணு உபகரணங்களில் கழிக்கிறாரோ, அவர்களுக்கு இந்த யுத்தி, மிகவும் பயனுள்ளதாக அமையும்.

திருக்குர்ஆன் ஓதுவது நம்மை '**குணமடையச் செய்யும்**' என்ற அறிவிப்பை இதுபோன்றவர்களுக்கு நினைவுபடுத்த, இந்த நூலின் எழுத்தாளராக நான் கடமைப் பட்டுள்ளேன்:

وَنُنَزِّلُ مِنَ ٱلْقُرْءَانِ مَا هُوَ شِفَآءٌ وَرَحْمَةٌ لِّلْمُؤْمِنِينَ ۙ وَلَا يَزِيدُ ٱلظَّٰلِمِينَ إِلَّا خَسَارًا

இன்னும், நாம் மு:மின்களுக்கு ரஹ்மத்தாகவும், அருமருந்தாகவும் உள்ளவற்றையேதிருக்குர்ஆனில் (படிப்படியாக) இறக்கிவைத்தோம்; ஆனால் அக்கிரமக்காரர்களுக்கோ இழப்பைத் தவிர வேறெதையும் (இது) அதிகமாக்குவதில்லை.

(திருக்குர்ஆன்: அல்-இஸ்ரா 17:82)

மடிக்கணினிகள், செல்போன்கள் மற்றும் பிற மின்னணு சாதனங்களிலிருந்து வெளிப்படும் மின்காந்த கதிர்வீச்சு, நம் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் என்பதற்கான அறிவியல் மற்றும் மருத்துவ சான்றுகள் விரைவிலேயே வெளிவரும். மூளைக் கட்டிகள்(Brain Tumor), கருவுறாமை, மலட்டுத்தன்மை போன்றவற்றுடன் இதற்கு தொடர்பு இருப்பதற்கான சான்றுகள் விரைவில் நமக்கு கிடைப்பது மட்டுமல்லாமல், எல்லாவற்றிற்கும மேலாக நம்முடைய நினைவாற்றலுக்கும்,சிந்திக்கும் திறனுக்கு ஏற்படும் சேதம் தான் மிகவும் அச்சுறுத்தலை தருவதாக உள்ளது. விரைவிலேயே உலகம் முழுவதும் ஜஸத்களால் நிரம்பி விடும்.

நவீன மின்னணு தொடர்புகளினால் இணைக்கப்பட்டிருக்கும் நகரங்களில் வளரும் எந்தவொரு குழந்தையும், மின் காந்த கதிர்வீச்சுக்கு ஆளாகாமல் இருக்காது. இதனால் அவர்களுடைய நியாபகத் திறன் பாதித்து,திருக்குர்ஆனை மனப்பாடம் செய்ய முடியாத ஒரு காலம் வரும் என்று இந்த எழுத்தாளர் எதிர்பார்க்கிறார்.

நாம் இந்த நவீன உலகத்தின் நகரங்களில் வசிக்கும் பெற்றோர்களுக்கு அறிவுறுத்த விரும்புவது என்னவென்றால், பெற்றோர்களான அவர்கள் தங்கள் குழந்தைகளை தினமும்திருக்குர்ஆனை ஓத செய்வதில் உறுதியாக இருக்க வேண்டும்.திருக்குர்ஆனை ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது முழுவதுமாக ஓதி முடிக்க அறிவுருத்துங்கள். இத்தகைய கதிர்வீச்சினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து குழந்தையின் மூளை மற்றும் மனதைப் பாதுகாக்கும் கேடயமாக புனித நூலாகிய திருக்குர்ஆன் செயல்படக்கூடும்.

இந்த புத்தகத்தை முடிப்பதற்கு முன்பு ஒரு முக்கிய விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாம் தொழுகையில் சிரம் பணிந்து சுஜூத் செய்யும் நிலையில், பூமியோடு(தரையோடு) நம் உடலில் உள்ள ஏழு எழும்புகளை இணைக்கிறோம்.இவை எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமானது, நெற்றியை மூக்குடன் இணைக்கும் எலும்பு தரையைத் தொடுவதுதான். ஒவ்வொரு எலும்பும் மின்காந்த கதிர்வீச்சை நம் உடலில் இருந்து பூமியில் செலுத்துவதற்கான ஒரு வழியாக இது செயல்படுகிறது. இதனால் உடலை, மின்னணு காந்த சக்திகளால் விளையும் தீங்கிலிருந்து காப்பாற்றுகிறது. மூளை மற்றும் தலையிலிருந்து பூமிக்கு நடைபெறும் இந்த பரிமாற்றம் தான் எல்லாவற்றிலும் மிக முக்கியமானது. ஏனெனில், இத்தகைய கதிர்வீச்சால் மற்ற உறுப்புகளை விட தலைக்கே மிகப்பெரிய ஆபத்து ஏற்படுகிறது.

இறுதியாக, ரப்பரால் ஆன காலணிகளைப் பயன்படுத்துவதை நாம் தவிர்க்க வேண்டும். ஏனெனில்,ரப்பர் காலணிகள்,தரை வழியாக நம் உடலில் இருக்கும் மின்னணு காந்த அலைகள் பூமிக்குள் செலுத்தப்படுவதை தடுக்கிறது.

இறுதி வார்த்தைகள்:

இந்த நூல் எழுதப்பட்ட நோக்கமே , "ஜஸத்" மற்றும் "தாப்பத்துல் அர்து" பற்றிய நமது கருத்தின் மீது ஆலிம்களுடைய பார்வையை அறிந்து கொள்வதற்காகத் தான். அவர்கள், சலஃபிகளின் வழிமுறையை பின்பற்றுபவராக இருந்தாலும் சரி, தாருல் உளூமில் கற்றவராக இருந்தாலும் சரி.

அவர்களின் பதிலை எதிர்பார்த்து காத்திருக்கிறோம்

பின் இணைப்பு-1

குர்ஆனில் உள்ள (ஜஸத்)உயிரற்ற உடல் பற்றிய மேன்மையான உரையாசிரியர்களின் கருத்துச் சுருக்கம்

(ஹஸ்புல்லாஹ் ஷாஃபிஇ)

1. ஜஸத் பற்றிய பல ஆசிரியர்களின் பொதுவான விமர்சனம் என்னவென்றால் ஜஸத் என்பது தலை, சதையுடன் கூடிய உயிரற்ற சடலம் என்பதாகும்.
   (*அத்-தஃப்சீர் அல்-கபீர், அத்-தபரானி, ரூஹ் அல்-பயான், இஸ்மாயில் ஹக்கீ, மஜ்மா'உல்-பயான், அத்-தபர்சீ, அன்வர்* அத்-தன்ஜில், *பைதாவி, அல்-பஹர்* அல்-முஹீத், *அபு ஹய்யான், கரைப் அல்-குர்ஆன், நிஜாம் அத்-தீன்* அன்-நைசாபூரி, *அல்*-பஹர் *அல்-மதீத், இப்னு* அஜிபாஹ், அத்-தஸ்-ஹீல், *இப்னு ஜுஸய் அல்-கர்நாதீ, ரூஹ் அல்-மாஆனீ, அல்-அல்யுசீ*)

2. ஆங்கிலம், தமிழ், மலாய் போன்ற மொழியில் உள்ள நவீன காலத்தின் விளக்கவுரைகள் அனைத்தும், பாரம்பரியமாக வழங்கப்படும் விளக்கவுரைகளைத் தழுவியே உள்ளது. இவற்றில் இருந்து விதிவிலக்காக இருப்பது, மௌலான மௌதூதியின் விளக்க உரை மட்டுமே.அவருடைய விளக்க உரையில் "ஜஸத்" என்பது நபி சுலைமான் (அலை) அவர்களின் மகனைப் பற்றிக குறிக்கலாம் என்று கூறியிருப்பார். ஏனென்றால், தன் தந்தைக்கு பின், அவரால் ஒரு சிறந்த ஆட்சியை அமைக்க முடியவில்லை. அவரால் சிறந்த ஆட்சியாளராக இருக்க முடியவில்லை. அவர் ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திலேயே தன் அரசாட்சியை இழந்தார். பேராசிரியர்.ஹம்கா போன்ற நவீன காலத்து உரையாசிரியர்கள் பலர்,இமாம் அல்-ராஜிஸ் அவர்களின் விமர்சனத்திற்கு ஈர்க்கப்படுகின்றார்கள்.(கீழே 5ஆம் எண்ணின் விளக்கத்தை பார்க்கவும்). நவீன காலத்தில் உள்ள ஆசிரியர்களின்

விமர்சனங்களை பார்க்கும் பொழுது,அல்-ஷா'ரவீஸ் (d.14181H) குறிப்பிடும்படியாக உள்ளது. அல்-ஷா'ரவீஸ்,தன் விளக்கவுரையில் குறிப்பிடுவதாவது; ஃபித்னாஹ் என்பது குற்றங்காணக்கூடிய சொல்லாக பார்க்கவில்லை, மாறாக தங்கத்தை உருக்கி, அதில் உள்ள தேவையற்ற பொருளை (குற்றங்களை) நீக்குவதாகும் என்கிறார்.

தங்கம் பிற உலோகத்துடன் கலந்த நிலையில்தான் கண்டெடுக்கப் படுகின்றது.அதோடு, தூய்மையான தங்கம் கிடைப்பதற்கு நாம் என்ன செய்கிறோம்? தங்கத்தை நெருப்பால் உருக்கி,அதிலுள்ள பிற கழிவுகளை நீக்கி சொக்கத் தங்கத்தை பெறுகிறோம். இதைப் போன்றுதான், ஃபித்னாஹ் நன்மையையும், தீமையையும் பிரித்துப்பார்க்க, மனிதகுலத்தை தூண்டுகின்றது. அல்லாஹ், சுலைமான் நபியின்(அலை) தந்தையாகிய தாவூத் நபியை(அலை) எவ்வாறு ஃபித்னாவை கொண்டு சோதித்தானோ; அவ்வாறே, சுலைமான் நபியையும்(அலை) ஃபித்னாவை கொண்டு சோதித்தான். மேலும் "ஜஸத்"(جَسَد) பற்றி கூறும்போது,"கண்களால் பார்க்கக் கூடிய வெளிப்புறதோற்றத்தை கொண்ட, ஆன்மா அற்ற ஒரு உடல்". இதனைப்பற்றி அல்லாஹ் தன் திருமறையில் கூறுகையில்,

"***அதனை நான் செவ்வையாக உருவாக்கி, அதில் என் ஆன்மாவிலிருந்து ஊதியதும், அவருக்கு பணிந்து விடுங்கள் (என்றும் கூறியதை நினைவுகூறுவீராக)!"*** **(15:29)**

அதாவது மேற்காணும் வசனத்தில் "அது" என்பது "அல்-ஜஸாத்தை" குறிக்கும் மற்றும்திருக்குர்ஆனில் உள்ள "சாமிரி"(samiriy)யின் கதையை பார்க்கையில்,

"***பிறகு ஒரு காளைக் கன்றை- அதன் (உருவில் உள்ள) ஒரு சடலத்தை (சிலையை) அவர்களுக்கு அவன் வெளியாக்கினான். அதற்கு (மாட்டின்) சப்தமும் இருந்தது)"***.**(20:88)**

விளக்கம்: காளைக் கன்றின் வடிவம் மற்றும் வெளிப்புறத் தோற்றமானது கண்களால் புலப்படும் ஆன்மா அற்ற உடல் என்பதாகும்.

3. பழங்கால தஃப்சீர்களில் உள்ள விவரிப்புரைகள் யாவற்றிலும், அல் புகாரி மற்றும் முஸ்லிமில் காணப்படும் ஹதீஸ்களில், ஒன்றே ஒன்று மட்டும் தான், **'மர்ஃபு'** ஹதீஸ் ஆகும்.

அபு-ஹுரைரா (ரலி) அவர்கள், நபி (ஸல்) கூறியதாக விவரிக்கிறார்கள்:
நபி சுலைமான் (அலை) அவர்கள், தன் மனைவிகள் ஒவ்வொருவரும் தனக்காக ஒருஒரு குழந்தையை கருத்தரிப்பார்கள், அல்லாஹ்வின் பாதையில் போரிடும் குதிரை வீரர்களின் படையை அவருக்காக தாங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன், ஒரு குறிப்பிட்ட இரவு தன் மனைவியரிடம் சென்றார்கள். ஆனால் சுலைமான் (அலை) இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடினால்) என்று கூற மறந்துவிட்டார். ஆகையால், ஒரு மனைவி மட்டும் கருத்தரித்தார். ஆனால் அந்தக் குழந்தையும் உடல் சிதைந்து, இறந்த நிலையிலேயே பெற்றெடுக்கப்பட்டது. மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; சுலைமான் நபி (அலை) அவர்கள் "இன்ஷா அல்லாஹ்" என்று கூறியிருந்தால்,அவருக்கு அல்லாஹ்வின் வழியில் (ஃபீ ஸபிலில்லாஹ்) போர் இடுவதற்கான குதிரைப் படைவீரர்களை, குழந்தைகளாக அவர் பெற்றிருப்பார். இவ்வாறு, இறந்த நிலையில் பிறந்த குழந்தைதான் அவரது சிம்மாசனத்தில் வைக்கப்பட்டதாகவும்; அதுதான் அந்த ஜஸத் (உயிரற்ற உடல்) என்றும் முஃபாஸிரூன் கூறுகிறார். இருப்பினும், இதுதான்திருக்குர்ஆன் வசனத்தில் குறிப்பிடப்பட்ட சம்பவம் என்றும், அந்த வசனத்தில் ஜஸத் (உயிரற்ற உடல்) என்று குறிப்பிடப்பட்டது,இந்த இறந்த குழந்தையைப் பற்றியே என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடவில்லை. அவ்வாறு இருக்க வாய்ப்பிருந்தால், நபி (ஸல்) அவர்கள் அதனை குறிப்பிட்டுச் சொல்லி இருப்பார்கள். எனவே, விமர்சகர்கள் அனைவரும் ஜஸத் என்பது இறந்து பிறந்த குழந்தை என்பதில், உறுதியற்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர். மேலும்; இமாம் அல்-புகாரி அவர்களும் கூட இதுபற்றிய ஹதீசை தன் தஃப்ஸீரில் பதியவில்லை. எனவே, இது நபி சுலைமானின் (அலை) வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு உண்மை சம்பவமாகவே உள்ளது. மேலும், இதுதான்திருக்குர்ஆன் வசனத்தில் குறிப்பிடப்பட்ட சம்பவம் என்பதை நம்மால் உறுதிப்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றோம். *அல்-*

குஷைரீ, அல்- சமக்ஷரி, அபு-ஹய்யன், அல்-தபர்ஸி, அல்-ராஸி, அல்-குர்துபி, அல்-பைதவி, அல்-மவார்தி, அல்-பாகவி, இப்னு அப்து அஸ்-ஸலாம், அல்-நஸஃபீ, இஸ்மாயில் ஹக்கீ, இப்னு அஜீபா, அப்துல் ரஸ்ஸாக் அல்-காஷனி, அல்-அலூசி மற்றும் பல விமர்சகர்களும்,குர்ஆன் வசனத்திற்கு சாத்தியமான விளக்கமாக இதனையே குறிப்பிடுகின்றனர்.

4. மற்ற அனைத்து விவரிப்புகளும் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸுக்கும்(ரலி), வேறு சில தாபீயின் மற்றும் தபி அல்-தாபீயின்களையும் அறிவிப்பாளராக கொண்டுள்ளன.. சிலவற்றில் காப் அல்-அஹ்பருக்கும் கூட அறிவிப்பாளராக உள்ளார். ஆனால்,எந்த அறிவிப்பாளர் தொடரும் நபிகளார்(ஸல்) கூறியதாக இல்லை. இந்த விவரிப்புகள் பெரும்பாலும் "இவை விவரிக்கப்பட்டவை", "இவர்களால் கூறப்பட்டவை" மற்றும் "இவ்வாறு கூறப்படுகின்றது" என்று மட்டுமே தொகுக்கப்பட்டுள்ளன. ஆனால், இவையாவும்திருக்குர்ஆனின் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வினை உறுதிப்படுத்திய விளக்கங்கள் அல்ல. மேலும், முஃபஸ்ஸீர் மற்றும்திருக்குர்ஆனின் விளக்க உரையாளர்களால் தெளிவுப்படுத்தாத வரையில் ஆயிரக்கணக்கான விளக்கங்கள் மற்றும் கூற்றுகள் வெறும் தொகுப்புகளாகவே இருக்கும். இதன் மூலம் அறிந்து கொள்வது என்னவென்றால்; இந்த நிகழ்வைப்பற்றிதான்திருக்குர்ஆன் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எந்த முஃபஸ்ஸீரும் விளக்கம் கூறவில்லை. இவற்றைப்பற்றி கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது, அவற்றைப் பார்ப்போம்.

அ. நபி சுலைமான் (அலை) அவர்கள் 'சாய்தூன்'(saidun) என்ற தீவின் அரசாட்சியை கைப்பற்றினார்கள்.அந்த ராஜ்ஜியத்தில் கொடுங்கோல் ஆட்சி புரிந்த மன்னனை கொன்றுவிட்டு,அவனுடைய மகளை மணம் புரிந்தார். அந்தப் பெண் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டாள். எனினும், அவள் மகிழ்ச்சியாக இல்லை.அவளுடைய பெயர் "ஜரதாஹ்". சிலர் அவள் இஸ்லாத்தை ஏற்கவில்லை என்று கூறுகிறார்கள். அவள் தன் தந்தையின் அரசவைக்கும்,அவரின் அரவணைப்பிற்கும் ஏங்கினாள். இதனால், அவள்

சுலைமான்(அலை) நபியிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தாள். அந்த வேண்டுகோள் யாதெனில்; நபி சுலைமானிடம், ,ஜின்கள், அஃதாவது ஷயாத்தீன்களிடம் தன் தந்தையின் உருவத்தை வடிவமைத்துதர கட்டளையிடுமாறு வேண்டினாள். நபி சுலைமானும்(அலை) அவளினுடைய வேண்டுகோளை நிறைவேற்ற; அந்தப் பெண் தன் அரசவைப்பணி பெண்களுடன், தன் தந்தையின் உருவத்தை வழிப்பட ஆரம்பித்தாள். இந்தச் செயல், அவள் தந்தையின் அரண்மனையை நினைவூட்டுவதாக இருந்தது. இதைத்தான், அவள் தன் தந்தையின் அரண்மனையில் செய்துகொண்டிருந்தாள். இவையாவும் நபி சுலைமான் (அலை) அவர்களுக்கு தெரியாமல் நடந்து வந்தது(சிலரால் 40 நாட்கள் எனப்படுகிறது). அதன்பின் இதனைப்பற்றி அறிந்தவுடன், அந்த உருவத்தை நபி சுலைமான்(அலை) அவர்கள் அழித்து, எரித்து அந்த சாம்பலை காற்றில் சிதறடித்தார்கள். அஃதாவது அந்த சிலைதான் உயிரற்ற உடலாகிய அந்த 'ஜஸத்' என்று குறிப்பிடப்படுகின்றது. *அல்-ஜாமக்ஷரி* அவர்கள், இந்த விளக்கத்தை கூறிவிட்டு இவற்றின் உண்மை தன்மைப் பற்றி அறிந்தவன் அல்லாஹ் ஒருவனே என்று கூறுகிறார்கள்.*அல்-குர்தூபி* இதனை *வஹ் இப்னு முனாஃபியிடமிருந்து* விவரிக்கிறார். மேலும், மற்றொரு பதிப்பையும் பதிவுசெய்கிறார். அதாவது ஜரதாஹ் திருமணத்திற்கு பின்னும், சிலை வழிப்படுபவராகவே இருந்தார். அதோடு இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்னர், மாணிக்கக்கற்கள் கொண்ட சிலையை எடுத்து வந்து நாற்பது நாட்கள் நபி சுலைமான்(அலை) அவர்களுக்கு தெரியாமல் வழிப்பட்டதாகவும் விளக்கம் அளிக்கிறார். *அல்-குஷைய்ரி, அல்-மவார்தி, அல்-பைதவி, இப்னு அப்துஸ்ஸலாம், அஸ்-சுயூதி, அப்துல் ரஜ்ஜாக், அல்-காஷனி*, *அல்-பாகவி* (இந்த தொகுப்பில் நீட்டிக்கப்பட்ட பதிப்பில், நபியவர்கள் தனது மோதிரத்தை ஷைத்தானிடம் இழக்க நேரிட்டதையும் குறிப்பிடுகிறார்)*அஜிபாஹ், அல்-ஜாவ்சி, அல்-அலூசி,* மற்றும் பலர் விவரித்துள்ளனர். இப்னு ஜுஸைய் அல்-கர்நதி இதனை ஒரு பலகீனமான கருத்தாக பதிவிட்டுள்ளார் ஏனெனில், ஒரு நபியின் வீட்டில், சிலையை வைத்து வழிபடுவதற்கும்,சிலையை உருவாக்குமாறு நபியே கட்டளையிடுவதற்கும் வாய்ப்புகள் குறைவே.

ஆ. நபி சுலைமான்(அலை) அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. இதனை அறிந்த ஷைத்தான்கள், சுலைமான் நபிக்கு பின் அவரின் அடுத்த தலைமுறைக்கும், அவரின் ராஜ்ஜியத்திற்காகவும் வேலை செய்யும் நிலைக்கு உள்ளாவோம் என்று அஞ்சின. எனவே, அக்குழந்தையைக் கொல்லவோ அல்லது ஊனமுற்றவராக ஆக்கவோ சதி செய்தன. தன் குழந்தைக்கு நடக்கவிருக்கும் தீங்கினைப்பற்றி அஞ்சி அக்குழந்தையை மேகங்களுக்கு இடையே மறைத்து வைத்தார்கள். காற்று அக்குழந்தைக் தேவையான உணவைத் தந்தது. *இஸ்மாயில் ஹக்கின்* கூற்றுப்படி; அல்லாஹ் அக்குழந்தையை இறக்கச் செய்தான்.ஏனெனில், நபி சுலைமான்(அலை), அவர்கள் மேகங்களையும், காற்றையும் நம்பியதாலும், ஷைத்தான்களின் பாதிப்பிற்கு அஞ்சியதாலும், இது நேர்ந்தது. இந்த உயிரற்ற உடல் தான் அதன்பின்னர் சிம்மாசனத்தில் வைக்கப்பட்டது. *அல்-குர்தூபி* தன் உரையில் *அல்-சாபியா* அறிவித்ததைப்பற்றி குறிப்பிடுகிறார். ஷைத்தான்களினால், தன் குழந்தைக்கு ஏற்படக்கூடிய தீங்கு குறித்த, அச்சத்தின் காரணமாகவே அவர் மோசமான விளைவுகளை சந்தித்தார். மேலும், இறந்த குழந்தை தனது சிம்மாசனத்தில் விழும் வரை, அவர் இதைப்பற்றி உணரவில்லை. *அல்-குஷைரி*, *அல்-ஜமக்ஷரி, அல்-நஸாஃபி, அல்-பைதவி, அல்-மாவர்தி, இப்னு அப்துஸ்ஸலாம், இப்னு அஜிபாஹ்* மற்றும் பலர் இதனை தங்களின் விமர்சனங்களில் இணைத்துள்ளனர். *அல்-அலூசியும்,* இதனை பதிவு செய்துள்ளார். ஆனால் இதனை தொடர்ந்து வரும்திருக்குர்ஆன் வசனங்களின் மிகத்தெளிவான வரிசையால், இதை ஒரு தவறான அறிக்கை என்று வாதிடுகிறார். ஃபித்னா நிகழ்ந்த பின்னரே, காற்று சுலைமான்(அலை) நபிக்கு உடன்பட கட்டளையிடப்பட்டது. எனவே, இது உண்மைத்தன்மை அற்ற ஒரு இட்டுக்கட்டப்பட்ட கதை என்றும் அவர் கூறுகிறார்.

இ. அல்-சயூதி அவர்கள் அத்-தபரானியின் அல்-அவ்ஸத்தில் உள்ள அபு-ஹுரைராவின்(ரலி) பலவீனமான ஹதீசை தனது அல்தூர் அல்-மந்தூரில் பதிவு செய்துள்ளார். "நபி சுலைமானுக்கு ஒரு குழந்தை பிறந்தது. நபி சுலைமான்(அலை) ஷைத்தானைப் பார்த்து,"நீங்கள் அவரை மரணத்திலிருந்து மறைப்பீர்களா?" என்று கேட்டார். அதற்கு ஷைத்தான்," நாங்கள் அவரை கிழக்கு நோக்கி கொண்டு செல்வோம்" என்று கூறியது. அதற்கு நபி

சுலைமான்(அலை) "மரணம் அவரை வந்தடையும்" என்றார். இதனைக் கேட்டதும், "அப்படியென்றால், மேற்கு நோக்கி செல்வோம்" என்றது. அதற்கு சுலைமான் நபி,"அங்கும் மரணம் வந்தடையும்" என்றார்.அதற்கு ஷைத்தான்," கடலை நோக்கி" என்றது. அதற்கு நபி சுலைமான்," மரணம் அவரை வந்தடையும்" என்றார்கள். ஷைத்தான் அதற்கு," நாங்கள் அவரை வானங்களுக்கும், பூமிக்கும் இடையே வைப்போம்" என்று கூறியது. இதனிடையே உயிரைக் கைப்பற்றும் வானவர் (மலக்குல் மவ்த்) இறங்கி வந்து, " ஒரு உயிரைக் கைப்பற்றும்படி எனக்கு கட்டளையிடப்பட்டது; நான் அந்த உயிரை கடலில் தேடினேன், பூமியின் அனைத்து எல்லைகளிலும் தேடினேன், ஆனால், நான் அதை அடையவில்லை, அதன் பின் முன்னேறி செல்லும் போது நான் அவரைக் கண்டேன்.அவருடைய உயிரைக் கைப்பற்றினேன்" என்று கூறினார்கள். (பின்னர் நபி சுலைமான் அவர்கள் தொடர்ந்தார்கள்). அந்த உடல் (ஜஸத்) சுலைமான் நபி அவர்களின் சிம்மாசனத்தில் விழுந்தது. இதனையே அல்லாஹ் தன் வசனத்தில் " **சுலைமானை மற்றொரு விதத்திலும் சோதித்தோம். மேலும், அவருடைய சிம்மாசனத்தில் ஒரு சடலத்தை நாம் போட்டோம்.பின்னர், அவர் நம்மளவில் திரும்பினார்**"என்று குறிப்பிடுகின்றான். இதனை *அல்-தபரானி* தனது ஹதீஸ் தொகுப்பில் சேர்த்திருந்தாலும், தனது தஃப்சீரில் இந்த வசனங்களை பதிவு செய்யவில்லை. *இப்னு கதீர், அல்-ஜாவ்சி, மற்றும்* அல்-*சுயூதி(*அவருடைய மற்றொரு புத்தகத்திலும்) ஆகியோரின் கருத்துப்படி, இந்த ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்டதே ஆகும்,அல்லாஹ்வின் தூதர்களுடைய(அலை) ஈமானை ஒருவர் சந்தேகிக்காத வரையில், இந்த ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்டது என்பதற்கு மாற்றக்கருத்தே உருவாகாது என்று இதனைப் பற்றி கூறியுள்ளனர்.

ஈ. *சாயித் இப்னு ஜுபைர்* அவர்கள் கூறினார்கள்,நபி சுலைமான் (அலை) கழிவறைக்குச் செல்லும் போது தனது மோதிரத்தை மிகவும் நம்பகமான மனைவியான ஆமினாவிடம் கொடுத்து சென்றார்கள். அப்பொழுது ஷைத்தான் சுலைமான்(அலை) நபியின் உருவம் கொண்டு ஆமினாவின் முன்தோன்றி, அந்த மோதிரத்தை வாங்கிச் சென்றான். அதன்பின் அரசாட்சி சைத்தானின் கட்டுப்பாட்டில் வந்தது. *கதாதாஹ்* இதுபற்றி கூறுவது

யாதெனில்;நபி சுலைமான்(அலை) அவர்கள் தன் மோதிரத்தை ஷைத்தானிடம் கொடுத்தார்கள். அந்த மோதிரத்தை ஷைத்தான் கடலில் தூக்கி எறிந்தது.சைய்யத் இப்னு அல்-முஸையப் அவர்களின் கூற்றுப்படி சுலைமான் நபி(அலை) அவர்கள் தன் மோதிரத்தை தலையணைக்கு கீழ் வைத்து விட்டு கழிவறைக்கு சென்றார்கள். அப்பொழுது ஷைத்தான் வந்து மோதிரத்தை எடுத்துச்சென்று கடலில் வீசி எறிந்தது. இந்த மூன்று பதிவுகளும் *அல்-ஜவ்ஸியின்* தஃப்சீரில் பதிவு செய்யப்பட்டுள்ளன. *அல்-தபரி, அஸ்-சமக்ஷரி, அல்-குர்துபி* மற்றும் பிறவற்றிலிருந்து எடுத்து சுருக்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு ஷைத்தானையே அந்த உயிரற்ற உடலாக குறிப்பிடப்படுகின்றது.அவன்தான் சுலைமான்(அலை) நபி போன்று உருமாறி சிம்மாசனத்தில் அமர்ந்தான்.

உ. *முஜாஹித்* கூறுகிறார்; நபி சுலைமான் (அலை) ஷைத்தானைப் பார்த்து,"மக்கள் மத்தியில் நீங்கள் எவ்வாறு குழப்பத்தை ஏற்படுத்துவீர்கள்?" என்றுக் கேட்டார்கள். அதற்கு ஷைத்தான்," உங்கள் மோதிரத்தை எனக்கு கொடுங்கள்; நான் உங்களுக்கு தெரிவிக்கிறேன்" என்று சொன்னது. சுலைமான் நபியவர்கள் மோதிரத்தை கொடுத்தவுடன், அதனை கடலில் வீசி எறிந்தது. நபியுடைய அரசாட்சி அவரை விட்டுச் சென்றது. சைத்தான் நபியவர்களின் அல்-தூர் அல்-மந்தூர் என்ற சிம்மாசனத்தில் அமர்ந்தது. ("ஜஸத்" பற்றி வசனத்தில் குறிப்பிடப்பட்டது போன்று).சில காலத்திற்கு பின், அந்த மோதிரமும், அரசாட்சியும் மீண்டும் நபியிடமே திரும்ப வந்தது. அல்-*சுயூதி* மற்றும் முஃபஸ்ஸிரீன்களில் பலர் இதனை பதிவு செய்துள்ளனர்.இங்கும் உயிரற்ற உடலாக குறிப்பிடப்படுவது ஷைத்தானையே. அவன்தான் சுலைமான் நபியின் உருவத்தில் அவரது அரசாட்சியை கைப்பற்றிக் கொண்டான்.

ஊ. நபி தாவூத் (அலை) அவர்களுக்கு மற்றொரு மகன் இருந்தார், அவர் நபி சுலைமான்(அலை) அவர்களின் ஆட்சியின் போது அவருக்கு எதிராக கலகம் செய்து, அரசாட்சியை கைப்பற்றி நீண்ட காலமாக அரசனாக ஆட்சி செய்து வந்தார். அல்லாஹ் ஆட்சியை சுலைமானுக்கு திருப்பித்தர விரும்பியபோது, அரசாட்சியை கைப்பற்றிய நபியின் சகோதரரை உயிரற்ற உடலாக

சிம்மாசனத்தில் வைத்தான். பரந்த ஆதிக்கத்தை வைத்து ஆட்சி செய்த அவருடைய சகோதரனிடம் ,எந்த ஆட்டமும் ,அசைவும் இல்லாமல் போனது. அல்லாஹ் அவனிடமிருந்த அனைத்து அதிகாரங்களையும் பறித்துக் கொண்டான். அதுமட்டுமின்றி; அவனுடைய உடல் மற்றும் கை கால்களை இயக்குவதற்கே சக்தியற்றவனாக, அவனை மாற்றிவிட்டான். அவனுடைய மக்களே, அவனுடைய ஆட்சிக்கு எதிராக திரும்பி, இறுதியில் அவர்களே அவனை கொன்றும் விட்டார்கள். இதன்பின்னர், நபி சுலைமான் (அலை) அவர்கள் அரசாட்சியை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள். இதை *அஷ்ஷா* ராவி பாரம்பரிய முஃபஸ்ஸிரீன்களிடம் இருந்து எடுத்து பதிவிட்டுள்ளார்கள்.

எ. நபி சுலைமான்(அலை) அவர்கள் மூன்று நாட்களுக்கு பொதுவாழ்க்கையில் இருந்தும், மக்களிடம் இருந்தும் விலகி இருந்தார்கள். இதன் காரணமாக அல்லாஹுதஆலா அவர்களுக்கு தண்டனையாக அவரது சிம்மாசனத்தில் ஷைத்தானை அமரவைத்தான். *அல்-ராஜி* மற்றும் பலர் இதனை தங்கள் விரிவுரையில் சேர்த்துள்ளனர். ஷைத்தானின் வேறு பெயர்களும் இந்த தொகுப்புகளில் விவரிக்கப்பட்டுள்ளன. அவைகள் *சக்ர், அசஃப்* அல்லது *ஹுப்கிக்* என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் நபி சுலைமான் அவர்களை இறைவன் சோதனைக்கு உட்படுத்தியதன் காரணமும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எடுத்துக்காட்டு :) *அல்-குர்தூபி, கஃப் அல் அஹ்பரிடமிருந்து* விவரிக்கிறார். "எப்பொழுது அவர் (சுலைமான் நபி) குதிரைகளைக் கொன்று அநீதி இழைத்தார்களோ; அப்பொழுதே அவருடைய அரசாட்சி அவரிடமிருந்து 40 நாட்களுக்கு பறிக்கப்பட்டது". மேலும்,நபி சுலைமான்(அலை) பனு இஸ்ராயீலர்களைத் தவிர மற்ற இனத்தவரிடம் திருமண பந்தத்தில் இணைவதில்லை என்று ஒரு சத்தியபிரமாணம் செய்திருந்தார்கள். ஆனால் சத்தியத்தை மீறினார்கள். அதனால், சோதனைகளையும் அனுபவித்தார்கள் என்றும் கூறப்படுகின்றது. மேலும் நபி சுலைமான்(அலை) அவர்கள் எதற்கு மற்றும் எவ்வாறு அல்லாஹ்வின் பக்கம் திரும்பினார்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றது." பிறகு அவர் மனம் திருந்தி அல்லாஹ்வின் பக்கம் திரும்பினார்" அல்லது " பின்னர் ராஜ்ஜியம்/ சக்தி/அவரின் அரசாட்சி அவரிடமே திரும்பக் கொடுக்கப்பட்டது.

இப்னு அல்-ஜவ்சி அவர்கள், முந்தையக் கருத்து *கதாதாவின்* பார்வையும், பிந்தையது *அத்-தஹ்ஹாக்கின்* பார்வையும் என்று எழுதுகிறார்.இபன் அபதஸ் சலாம் என்பவர் மேலே உள்ள இரண்டையும் குறிப்பிட்டு, மூன்றாவதாக(அவர் 'திரும்பினார்' என்பதற்கு) அவர் நோயிலிருந்து குணம் பெற்றார் என்று கூடுதலாக விளக்கம் அளித்துள்ளார்.

5. *அல்-ராஜி* இதைப்பற்றிய தனது அனைத்து கருத்துக்களையும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கின்றார்.

ஒன்று: திணிப்பு மற்றும் இட்டுக்கட்டப்பட்டக் கதைகளை சேகரித்தவர்களின் கருத்து.

இரண்டு: உண்மை ஆதாரங்களை திரட்டி சரிபார்த்தவர்களின் கருத்து.

அவர் பிரித்த முந்தையக் தொகுப்பாளர்களின் கருத்துக்களில் **அ,ஈ** எடுத்துக்கொண்டார். கருத்துகள் **அ** மற்றும் **ஈ, ஈ** மற்றும் **எ** என்று ஒன்றாகச் சேர்த்து பார்க்கின்றார். இதில் அவர் தற்கால தொகுப்பாளர்கள், முந்தைய தொகுப்பாளர்களின் தொகுப்புகளை நிராகரித்ததன் காரணத்தை விளக்குகிறார். இந்த காரணங்களுக்கு இடையில் சைத்தான் ஒரு நபியின் உருவத்தை எடுக்க முடியாது என்பதும்; ஒரு நபி சிலையை வணங்க அனுமதிக்கமாட்டார் எனவும்; அவ்வாறு இருந்தால், அவருக்கு தெரியாமல் சிலைவழிபாடு நடத்தியதற்கு அல்லாஹ் அவரை எவ்வாறு தண்டித்திருப்பான்?.
பிந்தைய பிரிவின் கீழ்வரும் கருத்துக்களில் **3, ஆ**, மற்றும் **மூன்றாவது** விளக்கத்தை எடுத்துக் கொண்டார். அதாவது, சுலைமான்(அலை) நபியவர்கள் ஒரு கடுமையான நோயால் பாதிக்கப்பட்டார். அதனால்,அவர் உடல் திறனில் ஒரு சடலத்தை போல் தோற்றமளித்தது. மேலும் கடுமையான நோய்வாய்ப்பட்ட ஒரு நபரை பற்றி விவரிக்க,பழங்குடி அரேபியர்கள் இவ்வாறு விவரிப்பார்கள். அவர்கள் இத்தகைய நபரை ஒரு உடல்(ஜிஸ்ம்) (ஜஸத் என்ற சொல்லின் ஒத்த கருத்துடைய சிறிய வேறுபாடுடைய சொல்) ஆன்மா இல்லாமல் இருப்பது என்று கூறுவார்கள். மேலும் அவர் மொழியியல் ஆய்வுகளை மேற்கொண்டு, நான்காவதாக ஒரு பகுதியை அவர்

தனது சொந்த கருத்தாக தெரிவிக்கின்றார். "அவரது (சுலைமான் அலை) ஆட்சியில் ஒரு கட்டத்தில் அவர் மீது அச்சத்தை திணித்ததன் மூலம் அவர் சோதிக்கப்பட்டு இருக்கலாம் என்று நினைப்பது மறுக்க முடியாதது. மேலும் அவரது சில அதிகாரிகள் மற்றும் நிர்வாகங்களால் ஏற்பட்ட சோதனைகள் அவருக்கு பலவீனத்தை ஏற்படுத்தி ஒரு கட்டத்தில் அவரையே, அவரது ஆட்சியில் ஒரு சடலமாக காட்டியிருக்கலாம்". மேலும் இவருடைய கருத்து என்னவென்றால், நபி சுலைமான் (அலை),தானே தனது சிம்மாசனத்தில் ஒரு சடலத்தை போல் தோன்றினார். இந்த வசனத்தில் குர்சி, அதாவது அரியனை அல்லது நாற்காலி,அவரது அதிகார நிலையைக் குறிக்கும் என்றும், சடலம் (ஜஸத்) என்பது தனது சொந்த மக்களிடமிருந்து அவர் சந்தித்த தொல்லைகளை கையாள முடியாத,அவரது பலவீனமான திறனை குறிக்கும் என்பதையும் இதன் விளக்கமாகக் கூறுகிறார்.

6. *இப்னு அத்தியாஹ் கூறுகிறார்: பொதுவான கருத்து என்னவென்றால்,*உயிரற்ற உடலான ஜஸத் என்பது ஒரு குறிப்பிட்ட ஜின்னையே குறிக்கும்(மேலே விளக்கவுரையில் குறிப்பிடப்பட்டது போல்) ஏனென்றால், அந்த ஜின்னானது,நபி சுலைமான்(அலை) அவர்களின் உடல் உருவத்தை ஒத்தது போல தோன்றமளித்தது. ஆனால், உண்மையில் யாருடைய வடிவத்தை மக்கள் பார்த்தார்களோ, அது நபியவர்கள் அல்ல. *அல்-காதி அபு முகம்மது,* இது தான் மிகவும் சரியான மற்றும் தெளிவான விளக்கம் என்கிறார். தஜ்ஜால் தான் அந்த உயிரற்ற உடலான ஜஸத், ஜின் அல்ல என்பதைத் தவிர, இந்த கருத்தும், மௌலானா இம்ரான் ஹுசைனின் விளக்கமும் ஒருமித்து இருப்பதாகவே தோன்றுகின்றது. அந்த உயிரற்ற உடலில் தோன்றியவர் சுலைமானைப்(அலை) போல் உள்ளார் என்னும் கருத்தானது, சுலைமான் (அலை) நபியே ஜஸத்தாக தோன்றினார் என்பதைக் காட்டிலும், விளக்கத்தில் தெளிவாக உள்ளது.

பின் இணைப்பு-2

குர்ஆனில் உள்ள நபி சுலைமான் (அலை) மரணத்தைப் பற்றிய மேன்மையான உரையாசிரியர்களின் கருத்துச் சுருக்கம்

(ஹஸ்புல்லாஹ் ஷா:ஃபிஇ)

அல்-குர்துபி பின்வரும் ஹதீஸ்களை தனது தப்சீர் அல்-ஜாமி லி-அஹ்காம் அல்-குர்ஆனில், அதனுடைய நம்பகத்தன்மையைப் பற்றி கருத்துத் தெரிவிக்காமல், மர்புவாக(marfu) பதிவு செய்துள்ளார்.

(அறிவிப்பாளர் தொடர்-இப்ராஹீம் இப்னு துஹ்மான்' -- அத-இப்னு அஸ்-சாஇபிடம்--சயீத் இப்னு ஜுபைர்---இப்னு அப்பாஸ்) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவித்தனர்: அல்லாஹ்வின் நபியான, சுலைமான் இப்னு தாவூத் (அலை), தொழுத பிறகு எப்பொழுதும் மரக்கன்றுகள் அவருக்கு முன்னால் தோன்றும். (இந்த நிலையில் ஒரு மரத்தைப் பார்த்த போதெல்லாம்), "உன்னுடைய பெயர் என்ன?" என்று கேட்பார். அந்த மரக்கன்று நடவு செய்யப்படவேண்டும் என்று கூறினால், அவர் அதை நடவு செய்யுமாறு கட்டளையிடுவார், அது தன்னை மருந்தாகப் பயன்படுத்தும்படி கூறினால், அவர் (அதைக் கட்டளையிடுவார்) அதற்கேற்ப பதிவு செய்து வைக்கும்படியும் கட்டளையிடுவார். ஒரு நாள், அவர் தனது தொழுகையை முடித்தபோது, அவருக்கு முன் ஒரு மரக்கன்று தோன்றியது. அவர், “உன் பெயர் என்ன?” என்று கேட்டார். அதற்கு அது "**அல்-கர்னுபா**" என்று பதிலளித்தது. "நீ எந்த நோக்கத்திற்காக (பயன்) வந்துள்ளாய்?" அதற்கு அந்த மரக்கன்று "இந்த வீடு (பைத் உல்-முகத்தஸ்) முற்றிலுமாக அழிக்கப்படுவதற்காக (லி கராபி ஹதல் பைத்)." என்றது. பின்னர் அவர் , "யா அல்லாஹ்! ஜின்களுக்கு மறைவான விஷயங்களை பற்றிய அறிவு இல்லை என்பதை மனிதர்கள் அறிந்துகொள்ளும் வரை, எனது மரணத்தை ஜின்களுக்கு தெரியாமல் மறைத்துவிடு' என்று வேண்டினார். பின்னர் அவர் அந்த மரத்திலிருந்து ஒரு கைத்தடியை உருவாக்கி, அதன் மீதே எந்நேரமும்

ஊன்றியபடி இருந்தார். (அதில் சாய்ந்தவாரே உயிர் இழந்தார்). இதனை எவரும் உணரவில்லை. இறுதியில் அந்த கைத்தடி சரிந்ததும், மனிதர்கள் (அவருடைய ஆட்சியில் கீழ் இருந்தவர்கள்) ஜின்களுக்கு கண்ணுக்கு மறைவான விஷயங்கள் தெரியாது என்பதை உணர்ந்து கொண்டனர். பின்னர், அவர்கள் இந்த நிகழ்வு நடைபெற்ற கால அளவை (அஃதாவது,நபி சுலைமான்(அலை) கைத்தடி சரியும் வரை எத்துணை காலம்,இறந்த நிலையிலேயே கைத்தடியில் சாய்ந்திருந்தார்) மதிப்பிட்டார்கள்.பின்னர் அது ஒரு வருடம் இருக்கும் என்று யூகித்தனர்.

"இப்னு கதிர் அவர்கள் தபரியின் ஹதீஸின் பதிப்பை போன்றே அவருடைய பதிப்பிலும் இவ்வாறே குறிப்பிட்டுள்ளார்.இவர்கள் இருவருடைய பதிப்பில் " அல்-கர்னுபாவிற்கு பதில் அல்-கர்ருப் என்றிருக்கும்."பின்வரும் சொற்றடர் கூடுதலாக இருக்கும்: "நபி சுலைமான்(அலை) இறந்தபின்பும் ஒரு வருடகாலம் கைத்தடியில் சாய்ந்தவாறே இருந்தார். இந்த சமயத்திலும் ஜின்கள் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருந்தன". இப்னு கதிர், இந்த ஹதீஸினை மர்பூ கரீப் என்றும், இதன் நம்பகத்தன்மை குறித்து கேள்வியும் உள்ளது என்கிறார்.

அல்-சுயுதீ தனது தப்சீர், 'அல்-துர் அல்-மந்தரில்' சற்றே மாறுபட்ட கருத்தை பதிவு செய்துள்ளார், இது இஹ்ன் மர்தாவே என்பவரால் சஹிஹ் தரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறுகிறார்.

அல்-பஸார், அல்-ஹகீம், இப்னு ஜரிர், இப்னு அல்-முன்திர், இப்னு அபி ஹாதிம், தபரானி, இப்னு அஸ்-சுன்னியில் உள்ள அத்-திப் அன்-நபவி மற்றும் இப்னு மர்தாவை ஆகிய (அனைவருமே) பதிவு செய்துள்ளார்கள். இதில் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள், நபி (ஸல்) கூறியதாக விவரிக்கப்படுகிறது: நபி சுலைமான்(அலை) மரக்கன்றுகள் அவருக்கு முன்னால் தோன்றுவதைப் பார்த்தார். (அவர் இவ்வாறு மரங்களை காணும் போதெல்லாம் வினவுவார்) "உன் பெயர் என்ன?" கேள்விகளுக்கேற்ப இதுஇது இன்னதென்று பதிலளிக்கும். அது நடவு செய்யவேண்டும் என்றால், அதை நடவு செய்ய வேண்டும் என்று கட்டளையிடுவார், அதை மருந்தாகப் பயன்படுத்தவேண்டும்

என்றால், அவர் அதனையும் பதிவு செய்யுமாறு கட்டளையிடுவார். ஒரு நாள் அவர் தனது தொழுகையை முடித்தபோது,அவருக்கு முன் ஒரு மரக்கன்று தோன்றியது. அவர், அதனிடம் “உன் பெயர் என்ன?” என்று கேட்டார். அதற்கு "**அல்-கர்னுப்**" என்று பதிலளித்தது. அவர் கேட்டார், "நீர் எந்த நோக்கத்திற்காக(பயன்) வந்துள்ளாய்?" அதற்கு அந்த மரக்கன்று "இந்த வீடு (**பைத் உல்-முகத்தஸ்**) முற்றிலுமாக அழிக்கப்படுவதற்காக (*லி கராபி ஹதல் பைத்*)." என்றது. பின்னர் அவர் , "யா அல்லாஹ்! ஜின்களுக்கு மறைவான விஷயங்களை பற்றிய அறிவு இல்லை என்பதை மனிதர்கள் அறிந்துகொள்ளும் வரை,எனது மரணத்தை ஜின்களுக்கு தெரியாமல் மறைத்துவிடு என்று வேண்டினார். பின்னர் அவர் ஒரு கைத்தடியை எடுத்து அதன் மீது சாய்ந்தார் (அவர் வழக்கமாக அதன்மீது சார்ந்தே தொழுவார்), அல்லாஹ் அவருடைய ஆன்மாவை கைத்தடியில் சாய்ந்துகொண்டிருந்தபோதே திரும்ப பெற்றுக்கொண்டான். அவர் அதே நிலையில் ஒரு இறந்திருந்தபோதும், ஜின்கள் இதனை அறியாமல் தொடர்ந்து அவருக்கு பணிபுரிந்துக் கொண்டிருந்தனர். பின்னர் கரையான்கள் கைத்தடியை அரித்து உட்கொண்டபின், அவருடைய உடல் சரிந்தது. அந்த நேரத்தில் தான் அவருடைய குடிமக்கள் அனைவரும் அவர் இறந்துவிட்டார் என்பதை உணர்ந்தார்கள். ஜின்கள் கண்ணுக்குத் தெரியாத மறைவானவற்றின் அறிவைப் பெற்றிருந்தால், அத்தகைய கடினமான உழைப்பில் அவர்கள் ஒரு வருடம் தொடர்ந்து உழைத்திருக்க மாட்டார்கள் என்பது மனிதர்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது (இப்னு அப்பாஸ்(ரலி) இந்த வசனத்தை இவ்வாறே ஓதிக் கொண்டிருந்தார்). இதன் பின்னர்,கரையான்களுக்கு நன்றி தெரிவித்து, அவற்றினை எங்கு கண்டாலும் (அப்போதிருந்து) தண்ணீர் கொண்டு வந்து தருவார்கள்,ஜின்கள்.

அல்-மாவர்தி என்பவர் இந்த ஹதீஸில் சுலைமான் (அலை) அவர்கள் வேண்டியதை (துஆ செய்ததை மட்டும் சற்று வித்தியாசமாக பதிவிட்டுள்ளார்.." யா அல்லாஹ்! என்னுடைய மரணத்தை ஜின்களிடமிருந்து மறைத்துவிடு ... "மக்கி இப்னு அபி தாலிப் தனது தப்சீரில் இந்த ஹதீஸை பதிவு செய்துள்ளார். அவரது பதிப்பில் மரக்கன்று, அதன் நோக்கத்தைப் பற்றி பேசுகையில்," இந்த வீட்டின் மக்கள் (பைத் அல்-முகத்தஸ்)

அழிந்துபோகவேண்டும் (கராப்) (இங்கே வீட்டை குறிக்காமல் மக்களைக் குறிக்கிறது). இப்னு அதிய்யாஹ் என்பவர் இப்னு அப்பாஸ்(ரலி) மற்றும் இப்னு மசூத்(ரலி)அவர்களின் வாயிலாக(கூற்றின்படி) அறிவிக்கிறார்.'அல்-கர்ருப் எனும் மரம் "நான் உங்களுடைய சாம்ராஜ்ஜியத்தின் அழிவிற்காக (கராப்) வெளிப்பட்டேன்" என்று கூறியது'.

நபி சுலைமானின்(அலை) மரணம் குறித்து நபி (ஸல்) அவர்கள் கூறியதாக மேற்கூறிய கூற்றுகளைத் தவிர, மீதமுள்ளவை நபித் தோழர்கள் மற்றும் தாபியீன்களின் கூற்றுகளாகும்.மற்றவை எல்லாம் எந்தவொரு குறிப்பிட்ட ஆதாரமும் கூறப்படாமல் வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்பாகும். பின்வருவன ஒரு கதைச் சுருக்கம்:
ஜின்களிடையே ஏழு தலைவர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.இந்த தலைவர்களினால் தான்,ஜின்கள் அனைவரும் நபி சுலைமானிற்கு (அலை) அடிபணிந்து வேலை செய்கிறோமே என்று எண்ணி நபியை(அலை) அவமதித்து விமர்சித்து வந்தனர்.தனது கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படுவதை அவர்கள் வெறுக்கிறார்கள் என்பதை நபி சுலைமானும்(அலை) அறிந்திருந்தார், மேலும் அவரது தந்தை நபி தாவூத் (அலை) அவர்களால் ஏற்கனவே தொடங்கப்பட்டு, இவரிடம் ஒப்படைக்கப்பட்ட பைத் அல்-முகத்தஸ் மசூதியின் கட்டுமான பணிக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படுவதை அவர் விரும்பவில்லை.தனது மரணம் நெருங்கியதை அறிந்து கொண்ட அவர், தனது மரணத்தை ஜின்களிடமிருந்து மறைக்கும்படி,அவர் தனது மக்களுக்கு கட்டளையிட்டார். இதனால் ஜின்கள் தொடர்ந்து அவரைப் பார்த்து பயந்து மசூதியின் கட்டுமானத்தை செய்வார்கள்.அந்த நேரத்தில் கட்டுமானம் நிறைவடைய இன்னும் ஒரு வருடம் இருந்தது. **[அல்-குர்துபி]**

மற்றொரு அறிக்கையில்,மலக்குல் மவ்த் அவருக்கு தோழனாக இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.ஒருமுறை, நபி சுலைமான்(அலை) மலக்குல் மவ்த்திடம் மரணம் ஏற்படும் நேரத்தின் அடையாளத்தைக் கேட்டார். அல்-கர்னுபா(அல்-கர்ருப்) என்ற மரம் அவருக்கு முன்னால் தோன்றும் என்றும், அந்த மரத்தைப் பார்க்கும்போது, அவருடைய மரணம் வந்துவிட்டது என்பதை அவர் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் மலக்குல் மவ்த் பதிலளித்தார்.

மேலே உள்ள ஹதீஸில் குறிப்பிடப்பட்டது போலவே, இறுதியில் அல்-கர்ருப் அவருக்கு முன் தோன்றி, பைத் அல்-முகத்தஸின் அழிவைப் பற்றி அவருக்குத் தெரிவித்தபோது, அவர் தன்னுடைய இறுதி காலம் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்தார். பின்னர் அவர் தன்னை அடக்கம் செய்வதற்கேற்ப தயார் செய்து கொண்டார். அடக்கம் செய்யப்படும்(கஃபன்) துணியை உடுத்திக் கொண்டு, மிஹ்ராபிற்குள் நுழைந்து, தொழுது விட்டு, பின்னர் தனது சிம்மாசனத்தில் அமர்ந்து, தனது கைத்தடியை ஊன்றி, அதன்மீது சாய்ந்தார். இந்த நிலையிலேயே காலமானார். ஒரு வருடத்திற்குப் பிறகு மசூதி கட்டுமானப் பணிகள் முடிவடையும் வரை,அவர் இறந்துவிட்டார் என்பது ஜின்களுக்குத் தெரியாமலே இருந்தது. அபு ஜாபர் அன்-நஹ்ஹாஸ், அவரது மரணத்தை பற்றிய விளக்கங்களில், இதுவே சிறந்தது என்று கூறியுள்ளார். அல்-குர்துபி கூறுகையில், ஹதீஸ்களில் (மேலே மேற்கோள் காட்டப்பட்டுள்ளது) அவரது மரணத்தினைப் பற்றிய பதிப்புகளில், இதுவே மிகவும் சரியானதாக உள்ளது என்கிறார்.

அல்-மவார்தி தனது தப்சீரில் பின்வருவனவற்றை பதிவு செய்துள்ளார்: நபி சுலைமான்(அலை) தனது ஆட்சியின் பதினொன்றாம் ஆண்டில் பைத் அல்-முகத்தஸின் மசூதியைக் கட்டிய பின்னர் ஈத் கொண்டாடினார் என்று விவரிக்கப்பட்டுள்ளது. பின்னர் அவர் தனது கைகளை வானத்திற்கு உயர்த்தி ஒரு பாறையின் மீது நின்று, பின்வருமாறு கூறினார்: "யா அல்லாஹ்! நீ தான் எனக்கு இந்த ராஜ்யத்தை வழங்கினாய், நீ தான் இந்த மசூதியைக் கட்டுவதற்கு எனக்கு பலம் கொடுத்தாய், அதனால் நீ எனக்கு அளித்த அருளிய நன்கொடைகளுக்கு உனக்கு நன்றி செலுத்த கடமைப் பட்டுள்ளேன். உன்னுடைய தீனிலேயே என்னை மரணிக்க செய்வாயாக, என்னை உண்மையான பாதையில் வழிநடத்தியபின் வழிதவற செய்து விடாதே.
யா அல்லாஹ்! இந்த மசூதிக்குள் நுழையும் ஐந்து வகையான மக்களுக்கு (ஐந்து விஷயங்களை) வழங்கும்படி நான் உன்னிடம் கேட்டுக்கொள்கிறேன். ஒரு தவறான செயலைச் செய்து, அதிலிருந்து மனந்திரும்பிய நிலையில், எவர் இந்த மசூதிக்குள் நுழைகிறாரோ, நீ அவரை மன்னித்து அவரை நேர்வழியில் செலுத்துவாயாக;பாதுகாப்பிற்கு அஞ்சி எவர் இதற்குள்

நுழைகிறாரோ , நீ அவருக்கு பாதுகாப்பை வழங்கு;நோய்வாய்ப்பட்டவர்கள் நுழைந்தால் அவரைக் குணப்படுத்து;ஏழைகள் நுழைவார்களாயின் அவர்களை வளப்படுத்து;அநியாயக்காரர்களும் அடக்குமுறை செய்பவர்களைத் தவிர மற்ற எவர் நுழைந்தாலும் அவர் வெளியேரும் வரை அவர்களை விட்டு உனது பார்வையை திருப்பி விடாதே.

"அல்-மவார்தியின் கூற்றை மேற்கொள் காட்டி அல்-குர்துபி அவர்கள் இதுவே மிகவும் சரியான கருத்து என்று எடுத்துரைக்கிறார். இதில் மஸ்ஜித் அவரது மரணத்திற்கு முன்பே நிறைவு செய்யப்பட்டுவிட்டது.-ஏனெனில் அன்-நசாயில் பதிவுசெய்யப்பட்ட ஒரு சஹிஹ் ஹதீஸ் உண்மையான அறிவிப்பாளர்கள் சங்கிலியுடன் ஒத்துப்போகிறது. அப்துல்லா இப்னு அம்ர் அவர்கள் நபி (ஸல்) கூறியதாக அறிவிக்கிறார்.

"சுலைமான் இப்னு தாவூத் (அலை) பைத் அல்-முகத்தஸைக் கட்டியெழுப்பியதும், அல்லாஹ்விடம் மூன்று விஷயங்களைக் கேட்டார்: (1) அல்லாஹ்வின் சட்டத்தை (ஆணையை) ஏற்றுநடக்கும் ஒரு ஆட்சி, அவருக்கு அது வழங்கப்பட்டது, (2) அவருக்குப் பின் யாருக்கும் கிடைக்க பெறாத ஒரு ராஜ்ஜியம்,அதுவும் அவருக்கு வழங்கப்பட்டது, 3) மஸ்ஜிதிற்கு (மனதில் உறுதியான ஈமான் கொண்டு) எவர் வணக்கம் செலுத்த வந்தாலும், அவரது தவறான செயல்கள்(பாவங்கள்) அனைத்தும் அவரை விட்டு நீங்கி, அவரை அவரது தாயார் பெற்றெடுத்த நாளில் இருந்ததுபோல்,பரிசுத்தமாக ஆகிவிடவேண்டும். நான் நம்புகிறேன்,அவருடைய இந்த வேண்டுகோளும் ஏற்கப்பட்டு வழங்கப்பட்டுவிட்டது என்று”

"இந்த ஹதீஸின் அடிப்படையில், நபி சுலைமான் (அலை) இறப்பதற்கு முன்பே மஸ்ஜித்தின் கட்டுமானம் நிறைவு செய்யப்பட்டது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நபி சுலைமான் (அலை) கட்டளையின் கீழ் ஜின்கள் வேறு ஏதோ ஒரு விஷயத்தில் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறியப்படுகிறது.

இப்னு அஜிபாஹ் என்பவர் சுலைமான் (அலை) மரணத்தை பற்றிய வேறு சில பதிப்புகளை சுருக்கமாக பதிவு செய்துள்ளார். மற்ற விரிவுரைகளுடைய நீண்ட பதிப்புகளிலும் இது போன்று காணப்படுகிறது. சுருக்கமாக கூற வேண்டும் என்பதால் நான் இப்னு அஜிபாவிடமிருந்து பின்வருவனவற்றை மொழிபெயர்க்கிறேன்:

நபி சுலைமான்(அலை) ஒரு முறை தனது தோழர்களிடம், "நீங்கள் பார்க்கும் அனைத்தையும் அல்லாஹ் எனக்கு வழங்கியிருந்தான், ஆனால் என்னைப் பொறுத்தவரை, என் ஆட்சியின் போது ஒரு நாள் கூட துயரமில்லாமலும் கவலையில்லாமலும் நான் கடந்ததில்லை.ஒருநாள் வரும், அந்த நாளிலிருந்து, எனக்கு வந்த இந்த துன்பத்திலிருந்து நான் விடுபடுவேன் என்று நம்புகிறேன். அடுத்த நாள் அவர் தனது அரண்மனைக்குள் நுழைந்து, அதன் கதவுகள் அனைத்தும் பூட்டப்பட வேண்டும் என்றும், யாருக்கும் உள்ளே வர அனுமதி வழங்கப்படக்கூடாது என்றும், எந்த செய்தியும் அவரிடம் கொண்டு வரக்கூடாது என்றும் கட்டளையிட்டார். பின்னர் அவர் தனது கட்டுப்பாட்டில் இருக்கும் பரந்த ராஜ்ஜியத்தை பார்த்தவாரே தனது கைத்தடியில் சாய்ந்தார். அங்கே அவருக்கு ஒரு அழகான இளைஞன் சலாம் கூறினார். (அவருக்கு பதில் கூறிய அடுத்து கணமே அந்த இளைஞர் மலக்குல் மவ்த் என்பதை உணர்ந்தார்) பின்னர் அவர், "உயிரைக் கைப்பற்றும் வானவரே, நான் என் துயரங்களிலிருந்து முற்றிலுமாக, என்னை விடுவிக்க விரும்பிய நாள் இதுதானா" என்று வினவினார். அதற்கு மலக்குல் மவ்த் பதிலளித்தார், "ஓ சுலைமானே, அப்படி ஒரு நாள் இந்த உலகத்தில் உள்ள நாட்களில் படைக்கப்படவேயில்லை, "பின்னர் நபியவர்கள் தனது கைத்தடியில் சாய்ந்துக் கொண்டிருந்தபோதே அவரது உயிரை கைப்பற்றிக்கொண்டார்.

மற்றொரு அறிக்கையில் ஒரு நுழைவுவாயில் இல்லாத கண்ணாடி போன்ற அரண்மனையை தன்னை சுற்றி எழுப்புமாறு ஷைத்தான்களுக்கு உத்தரவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.அவர், அதில் தனியாக தொழுகையில் நின்றார்,பின்னர் தனது கைத்தடியின் மீது சாய்ந்திருந்தார். அப்போது, மரண தூதுவர் அந்த அரண்மனைக்குள் நுழைந்து அவரது உயிரைக்

கைப்பற்றிக்கொண்டார். இப்னு அஜிபா கூறுகிறார், "இதில் எவையெல்லாம் நடந்தது என்பதை மிக உயர்ந்தவனாகிய அல்லாஹ் மட்டுமே நன்கு அறிவான். "கரையான்கள் அவரது கைத்தடியை அரிக்கும் வரை, நபி சுலைமான் (அலை) ஒரு வருடம் தனது கைத்தடியிலேயே இறந்த நிலையிலேயே சாய்ந்திருந்தார்.

இவ்விஷயம் இங்கே கண்டிப்பாக பதியப்பட்ட வேண்டும் என்பதால் கூறுகிறேன். அபுஹய்யான் என்பவர், தான் கூறுவதில் தனக்கே உடன்பாடு இல்லை என்றபோதும்,இந்த கருத்துகளில் இருந்து மாறுபட்ட சில குறிப்புகளை பதிவிட்டுள்ளார்.சுலைமான் (அலை) தொழுகையில் சுஜூத் செய்த நிலையில் உயிர் பிரிந்ததாக கூறப்படுகிறது. இந்த பதிப்பில், அவர் தொழுத இடத்தின் மீது கட்டப்பட்ட வீட்டில் அவர் இருந்தார்.

கரையான்கள் வீட்டின் கதவு மற்றும் சன்னல்களை உட்கொண்டதால்,கதவு இடிந்துவிழுந்து அவர் இறந்துவிட்டார் என்பது,அனைவருக்கும் தெரிய வந்தது. "அவர் தனது கம்பளத்தின் மீது தொழுது கொண்டிருந்தபோது இறந்துவிட்டார்.அவர் கதவையும் பூட்டி வைத்ததால் தனியாக தான் இருந்தார்.கரையான்கள் மின்சா-அவை உட்கொண்டது.இதில் மின்சா-அ என்பது கதவின் விட்டத்தை குறிக்கிறது, "கர்ரா" என்பது விழுந்த கதவைக் குறிக்கிறது.இந்த இடத்தில் மட்டுமே மின்சா-அ என்ற வார்த்தைக்கு நபித்தோழர் ஒருவரால் கைத்தடி என்பதற்கு பதிலாக, கதவின் விட்டம் என்று விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.இப்ன் அதிய்யாவிற்கு,இந்த கருத்தில் உடன்பாடு இல்லை என்றாலும்,இதே போன்று ஒரு கருத்தை அவரும் பதிவிட்டுள்ளார்.நபி சுலைமான்(அலை) தனது கடைசி நாட்களில் தனிமையில் இருப்பதற்காக கட்டப்பட்ட அரண்மனை பற்றியும்,அரண்மனைக்குள் நுழைய முயன்ற சில ஜின்கள் பற்றிய நிகழ்வின் கூடுதல் விவரங்களுடன், வேறு சில பதிப்புகள் உள்ளன. ஒவ்வொரு முறை ஜின்கள் ஜன்னல் வழியாக அரண்மனைக்கு உள்ளே செல்ல முயன்றபோதும்,நெருப்பால் தீண்டப்பட்டு தடுக்கப்பட்டனர். ஒரு நாள் அரண்மனைக்குள் எந்த சத்தமும் கேட்கவில்லை,அதே நேரத்தில் அவர்கள் உள்ளே செல்வதற்கு தடையாய்

இருந்த நெருப்பும் இல்லை என்பதை உணர்ந்தார்கள்.அப்போதுதான் சுலைமான் (அலை) இறந்துவிட்டார் என்பதை அவர்கள் அறிந்துக்கொண்டனர்.

இந்த நிகழ்வைப் பற்றி வேறுபட்ட வெவ்வேறு பதிப்புகள் மற்றும் விவரங்கள் இருந்தபோதிலும்,திருக்குர்ஆனின் முதன்மையான விரிவுரையாளர்கள் ஒருமித்த கருத்தாக,இந்த நிகழ்வை பற்றி கூறுவது என்னவென்றால், நபி சுலைமான் (அலை) அவர்களுடைய மரணம் ஜின்களிடமிருந்து நீண்ட காலமாக மறைக்கப்பட்டது.அவர்களில் பெரும்பாலோர் இது ஒரு வருடம் என்பதாக கூறுகிறார்கள்,ஏனென்றால் நபி(ஸல்) அவர்களால் இதே போன்ற ஹதீஸ் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது போன்று பெரும்பாலான பதிப்புகளில், மின்சா-அ, தாப்பத்துல்-அர்த் மற்றும் கர்ரா போன்ற வார்த்தைகள் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.

இதில் வியக்கத்தக்கது என்னவென்றால், சாத் அத்தியாயத்தில் நபி சுலைமான்(அலை) அவர்களுடைய சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த ஜஸத்திற்கும், அஸ்-ஸபாவில் கூறப்பட்டுள்ள சுலைமான் (அலை) மரணத்திற்கும் உள்ள நேரடி தொடர்பை பற்றி எந்த ஒரு பதிப்பாளரும் ஒப்பிட்டு பார்க்கவே இல்லை. இந்த இரண்டு வசனங்களுக்கிடையே உறுதியான இணைப்பு உள்ளது. மேலே மேற்கொள் காட்டப்பட்ட அன்-நசாயில் உள்ள ஹதீஸே, நாம் இவ்வாறு கூறுவதற்கான காரணம். நபி சுலைமான் (அலை) பைத் அல்-முகத்தஸை கட்டி முடித்தபின், தனக்குப் பின் யாரும் தனது ராஜ்யத்தைப் போன்று பெறக்கூடாது என்று அல்லாஹ்விடம் கேட்டுக் கொண்டார். இதே காலத்தில் தான் ஜஸத் தனது சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதைக் அவர் கண்டிருக்க வேண்டும்.

இருப்பதிலேயே சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இந்த நிகழ்வில் கூறப்பட்ட தாப்பத்துல்-அர்த்திற்கும், ஆகிருல்-ஜமானில் கூறப்படும் தாப்பத்துல்-அர்த்திற்கும் தொடர்பு இருக்கக்கூடும் என்று யாரும் சிந்திக்கவில்லை.

இறுதிக் குறிப்பு: இந்த வசனத்தைப் பற்றி அல்-குஷைரி கருத்துரைக்கிறார்: "அல்லாஹ்வைத் தவிர வேறு ஒன்றினைச் சார்ந்திருக்கும் அரசனின் நிலை இவ்வாறே இருக்கும், இந்த ராஜ்ஜியத்தின் கட்டுப்பாடு ஒரு கைத்தடியிலேயே உள்ளது (அதுவே அதிகாரத்தையும் தருகிறது). இதன் விளைவாக, அது(கைத்தடி) எப்போது வீழ்கிறதோ, அதை சார்ந்த ராஜ்ஜியமும் அதனுடனேயே வீழும். மேலும், எவர் அல்லாஹ்வைத் தவிர வேறு எதனையும் நம்புகிறாரோ, அவன் நம்பியிருப்பது முடிவுக்கு வரும்போது அவனுக்கும் முடிவு வரும்."

இந்த கருத்து(அஸ்-ஸபா விளக்கம்) நபி சுலைமான்(அலை) அவர்களுக்கு பொருந்தாது என்பதால்,திருக்குர்ஆனின் இந்த வசனத்தைப் பொருத்தவரை,சாத் அத்தியாயத்தில் கூறப்பட்ட நபியின் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ஜஸத்திற்கு மட்டுமே, இது பொருந்தமானதாக இருக்கும்.

பின் இணைப்பு-3

(ஜஸத் மற்றும் தாப்பத்துல்-அர்த் பற்றிய அமீர் ஹசன் இலாகியின் கருத்து)

ஜஸத்தைப் பற்றிய அவரின் மொழியாக்கம்.

"நாம் சுலைமானை (அலை) சோதனையில் ஆழ்த்தினோம்.அவருடைய சிம்மாசனத்தில் ஒரு ஜஸத்தை வீசினோம். உடனே அவர் தவ்பா செய்தார். அவர் வேண்டினார்: என்னுடைய இறைவா! என்னை மன்னிப்பாயாக. எனக்கு அருளிய அரசாட்சியை என்னைத் தவிர வேறு யாருக்கும் தகுதியாக ஆக்கிவிடாதே. நீ தான் அபரிமிதமாக கொடுப்பவன்"

திருக்குர்ஆன்: சாத்(38:34-5)

அவரின் கருத்து:

இன்னொரு சம்பவத்தின் மூலம் நபி சுலைமான் (அலை) அவர்களின் பாவமன்னிப்பு கோரும் குணத்தையும் அறியமுடிகிறது. இந்த சம்பவம் நமது தஃப்சீர்களில் சற்று சிதைந்த நிலையில் காணப்படுவதால், முதலில் எளிதான வார்த்தைகளால் புரிந்து கொள்ள முயற்சிப்போம். அதன்பின்பு வாசகர்கள், அதற்கரியதிருக்குர்ஆன் வசனத்தைப் படிக்கும் போது, அவர்களால் எளிதாக புரிந்துக் கொள்ள முடியும்.

நபி சுலைமான் (அலை) மிகப்பெரிய சோதனையில் ஆழ்த்தப்பட்டது, வரலாற்றின் மூலம் அனைவரும் அறிந்த ஒன்றே. நபி சுலைமான் (அலை) அவர்களுக்கு பல்வேறு இன்னல்கள் அவருடைய பகைவர்களால் ஏற்பட்டது.இவருடைய பல பகுதிகளை கைப்பற்றினர். சிலவற்றை அழிக்கவும் செய்தனர். இதனால் ஆட்சியில் பல குழப்பங்கள் ஏற்பட்டது. அவரது ஆட்சியின் மையப்பகுதி மட்டுமே அவருடைய கட்டுப்பாட்டில் இருந்தது.. இது இறைவனிடம் இருந்து வந்த சோதனையாகும். நபி சுலைமான் (அலை) மிகவும் இரக்கக் குணம் கொண்ட அரசனாவார். தான் செய்த தவறினால்தான், தனக்கு இறைவனிடம் இருந்து இத்தகைய தண்டனை வழங்கப்பட்டுள்ளது

என்று எண்ணி வருந்தினார். இந்த எண்ணம் அவரது கவலையை பெரிதாக்கியது. இதனால் அவரது அரியணையிலேயே உயிரற்ற உடலாக மாறிப்போனார். இதனால் ஏக இறைவனிடம், தன் பாவங்களை மன்னிக்குமாறு வேண்டினார். இந்த அரசாங்கத்தை ஆளும் அளவிற்கு தனக்கு தகுதி இல்லை. நான் இவ்வளவு பாவங்கள் செய்த பிறகும் எனக்கு இந்த அரசாங்கம் அருளப்பட்டுள்ளது. இதற்கு தன்னைப் போன்ற பாவம் செய்தவர்கள் தகுதியற்றவர்கள்.

وَلَقَدْ فَتَنَّا سُلَيْمَٰنَ

'நாம் சுலைமானை சோதனையில் ஆழ்த்தினோம்'

இவ்வாறு சோதனையில் ஆழ்த்துவது இறைவனுடைய வழக்கமான வழிமுறையாகும். இது சுலைமான் (அலை) அவர்களின் பாவத்தால் ஏற்பட்டது என்பதல்ல. இதற்கு முன்னரும் நபிமார்களும், ரசூல்மார்களும்(அலை) பல்வேறு சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இது அவர்களுடைய பொறுமைக்கும், நன்றியுணர்வுக்கும் இறைவன் வைக்கும் சோதனையாகும். நபி சுலைமான் (அலை) இதுபோன்ற சோதனைக்கு ஆட்படுத்தப்பட்டார். இவர் அரசனாக இருந்ததால், இவருக்கு ஏற்படுத்தப்பட்ட சோதனை, இவரடைய ஆட்சியை சார்ந்ததாக இருந்தது.

وَأَلْقَيْنَا عَلَىٰ كُرْسِيِّهِۦ جَسَدًا

இந்த ஆயத்துகள் சுலைமான் (அலை) எற்பட்ட சோதனையை தெளிவாக காட்டுகிறது.

தொடக்கத்தில்,அவருடைய அரசாங்கம் பரந்து விரிந்து இருந்தது. இவர் பலமான ஆட்சியாளராக இருந்தார். பின்னர் ஏக இறைவன் அவருடைய சிம்மாசனத்தில் உயிரற்ற உடலை வைத்தார். இதில் ஜஸத் என்னும் வார்த்தை, நபி சுலைமான் (அலை) அவர்களின் கவலை மற்றும் இயலாமை நிலைமையை குறிக்கிறது. இந்த அனுமானம் எதை குறிக்கிறது என்றால் நபி

சுலைமான் (அலை) தனது அரசாங்கத்தின் மையப்பகுதி மட்டுமே தன் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில்,, சோகமாகவும், சக்தியற்வறாகவும் காட்சியளித்தார் (எதைப்போல் என்றால் உடல் இருந்தும் உயிரற்றவர் போல்). இதைவிட ஒரு அரசரின் இயலாமையை சோகத்தையும் சித்தரிக்க முடியாது.

ثُمَّ أَنَابَ

இந்த நிலையிலும் சுலைமான் (அலை) இறைவன்மீது நம்பிக்கையை கைவிடவில்லை.மாறாக தான் செய்த தவறுகளால் தான், இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று உணர்ந்த அவர், உடனடியாக இறைவனிடத்தில் திரும்பி பாவமன்னிப்பு கோரினார்.

قَالَ رَبِّ ٱغْفِرْ لِى وَهَبْ لِى مُلْكًا لَّا يَنۢبَغِى لِأَحَدٍ مِّنۢ بَعْدِىٓ ۖ

(திருக்குர்ஆன்: சாத் 38:35)

இந்த ஆயத்துகள் நபி சுலைமான் (அலை) தனக்கு கொடுக்கப்பட்ட ஆட்சியைப் போன்று, தனக்குபின் எவருக்கும் வழங்கப்பட்டுவிடக்கூடாது என்று வேண்டியதாக பொருள் தரவில்லை. நபி சுலைமான்(அலை) வேண்டியது என்னவென்றால், தன்னுடைய பாவங்களால் இந்த அரசை ஆட்சி செய்ய தகுதியானவராக அவர் இல்லை; இறைவனுடைய கருணை மற்றும் பிரியத்தால்,அவருக்கு வழங்கப்படும் ஆட்சியானது தானும் தனக்கு பிறகு வருபவர் யாரும் தகுதியானவராக இருக்கக் கூடாது என்று வேண்டினார்.

إِنَّكَ أَنتَ ٱلْوَهَّابُ

சுலைமான் (அலை) அவர்களின் துஆவின் மூலம், அவருடைய நோக்கம் நமக்கு தெளிவாக தெரிகிறது. அவருடைய நோக்கம் யாருக்கும் கிடைக்காத பேரரசை பெறுவது அல்ல; தான் தவறுகள் செய்திருப்பினும், தனக்கு கொடுக்கப்படும் ஆட்சிக்கு, தனக்கு பின் யாரும் தகுதி உள்ளவராக இருக்கக்

கூடாது என்றுதான் வேண்டினார்.இது அவர் தனது தவறை உணர்ந்து இறைவனிடத்தில் திரும்பியதைக் காட்டுகிறது. அனைத்து நல்ல உள்ளம் கொண்ட ஆட்சியாளர்களும், தங்களுடைய பாவத்தினால்தான் தங்களுடைய நாட்டிற்கு பஞ்சம் வந்ததாக கருதினர். இதேபோல் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஆட்சியில், 'அம் அல்-ரிமாதாஹ்' என்ற பெரிய பஞ்சத்தின் மூலம் சோதனை வந்தது. அப்போது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்ணீர் வெள்ளத்தில் 'யா அல்லாஹ், என்னுடைய ஆட்சியில் நபி முகம்மது (ஸல்) அவர்களுடைய உம்மத்தை அழித்துவிடாதே! என்று வேண்டினார்.

தாப்பத்துல்-அர்த் பற்றிய இஸ்லாகியின் கருத்து

தாப்பத்துல்-அர்த்துடைய வசனத்திற்கு அவருடைய மொழிபெயர்ப்பு:

அவர் (சுலைமான்) மீது நாம் மரணத்தை விதித்த போது அவர் இறந்து விட்டார் என்பதை, அவர் (சாய்ந்திருந்த) தடியை அரித்து விட்ட நிலத்தின் பூச்சி (கரையானைத்) தவிர வேறெதுவும் அந்த ஜின்களுக்கு அறிவிக்கவில்லை அவர் கீழே விழவே "தாங்கள் மறைவான விஷயங்களை அறிந்திருக்கக் கூடுமானால் (கடின உழைப்பாகிய) இழிவுதரும் வேதனையில் தாங்கள் தரி பட்டிந்திருக்க வேண்டியதில்லை" என்று ஜின்களுக்கு தெளிவாக தெரிந்தது.

(திருக்குர்ஆன்: சபாஅ-34:14)

இஸ்லாஹியின் விளக்கம்

மேற்கண்டதிருக்குர்ஆன் வசனங்களின் மூலம் சுலைமான்(அலை) நபியின் சாதனைகள் அனைத்தும் (இறைவா மன்னிப்பாயாக) ஜின்களால் தான் என்ற கருத்து, தவிடுபொடியானது. இவ்வசனங்களின் மூலம் ஜின்களுக்கு மறைவான விஷயங்கள் மறைக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. மற்ற படைப்பினங்களைப் போலவே, ஜின்களுக்கும் அவர்களைப் பற்றியான அனைத்து விஷயங்களும் தெரிவதில்லை. இதைப்பற்றி மேலும் விவரிக்க

சுலைமான்(அலை) அவர்களின் மரணத்தை எடுத்துக்காட்டாக பயன்படுத்தியுள்ளனர். அவருடைய மரணத்தின் போது கூட, ஜின்களுக்கு கொடுத்த வேலைகளை அவர் மேற்பார்வையிட்டதை,ஜின்கள் அறிந்திருக்கவில்லை. அவர்கள் கடினமாக உழைத்துக் கொண்டே இருந்தனர். நீண்ட நாட்களுக்கு பிறகு தான் சுலைமான்(அலை) நபியின் மரணத்தைப் பற்றி தெரியவந்தது. அதன்பிறகே ஜின்கள் அடிமை வாழ்வில் இருந்து வெளியே வந்தனர்.

இந்த நிகழ்வின் தொகுப்பு: நபி சுலைமான் (அலை) தனது மரண தருவாயில் ஜின்களுக்கு தான் கொடுத்திருந்த வேலைகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்தார். கைத்தடியில் சாய்ந்தவாறு கட்டுமானப் பணிகளை பார்வையிடும் போதே, அவரது உயிர் கைப்பற்றப்பட்டது. ஆனால், அவர் கைத்தடியில் சாய்ந்திருந்தமையால் அவர் பார்வையிடுகிறார் என்று எண்ணி வேலையை தொடர்ந்தனர், ஜின்கள். சில காலம் கடந்ததும் கரையான்கள் கைத்தடியை அரித்த பின்னர், அவருடைய உடல் சரிந்தது.

இந்த நிகழ்வின் தாப்பத்துல்-அர்த் என்னும் சொல் கரையான்களை குறிக்கிறது. மின்சா-அ என்பது கைத்தடியை குறிக்கிறது. இந்த வசனத்தில் எத்துணை காலம், சுலைமான் (அலை) இதே நிலையில் இருந்தார் என்பதற்கு எந்த விதமான விளக்கமும் இல்லை. ஆனால் அவர் இறந்த பின்பும் சில காலம் கைத்தடியிலேயே சாய்ந்திருந்தார் என்பதும் கரையான்கள் கைத்தடியை அரித்ததும்,திருக்குர்ஆன் வசனங்கள் மூலம் அறியமுடிகிறது. கரையான்கள் தீவிரமாக அரிக்கக்கூடிய பூச்சிகளாகும். இவை பெரியஅளவில் சேரும்போது மரத்தினை சிறிது நேரத்தில் அரித்துவிடும். குச்சிகளும் கைத்தடிகளும் இவற்றின் முதன்மையான இரையாகும். இந்த நிகழ்வு மிகவும் வித்தியாசமானதாக காணப்படுகிறது.

இறைவனுடைய அருளால் நபி சுலைமான் (அலை) அவர்களின் மரணம் மக்களுக்கு ஒரு பாடமாய் அமைந்தது .அதாவது காற்றும் ஜின்களும் அவருடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும்,இவற்றால் நபியுடைய திடீர் மரணத்திலிருந்து அவரை காப்பாற்ற முடியவில்லை. இந்த வசனங்கள்

ஜின்களுக்கு மறைவான விஷயங்கள் பற்றித் தெரியும் என்ற பொய்யான கருத்தை விவரிக்கும் வண்ணம் உள்ளது. இந்த விஷயத்தை தெளிவு படுத்துவதற்காகவே, ஏக இறைவன், சுலைமான் நபி (அலை) அவர்களுடைய மரணத்தை இவ்வாறு அமைத்தான். இறைவன் எந்த காரியத்தையும் செயல்படுத்துவதில், சர்வ வல்லமை படைத்தவன்.

تَبَيَّنَتِ ٱلْجِنُّ أَن لَّوْ كَانُوا۟ يَعْلَمُونَ ٱلْغَيْبَ مَا لَبِثُوا۟ فِى ٱلْعَذَابِ ٱلْمُهِينِ

மேற்கண்ட வசனத்தின் மூலம் நாம் அறிவது என்னவென்றால் தீய ஜின்கள்(ஷையாத்தீன்கள்), நம் எண்ணத்திற்கு அப்பாற்பட்ட மறைவான உலகத்தில்(அல்-கய்ப்) நடக்கும் விஷயங்களை ஒட்டுகேட்க முயற்சித்து கொண்டே இருக்கின்றன. அத்தியாயம் ஜின் மற்றும்திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்கள் மூலம், அவை சுவர்க்கத்தில் பல்வேறு வாயில்களில் அமர்ந்து ஒட்டுக்கேட்க முற்படுகின்றன என்பது தெரிய வருகிறது. தங்களுக்கு மறைவான விஷயங்கள் தெரியும் என்று மனிதர்களை நம்பவைத்து, ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆனால், சுலைமான் (அலை) மரணத்தையே இவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதன் மூலம் தங்களுக்கு அருகில் நடப்பதையே அறிந்து கொள்ள முடியாத இவர்கள், சுவர்க்கத்தின் ரகசியங்களையா அறிந்து கொள்ள போகிறார்கள். இந்த அறிவின்மையால் இவர்கள், பலநாட்கள் அவமானப்பட்டு கடுமையாக உழைக்க வேண்டியதானது. நபி சுலைமான்(அலை), தீய ஜின்களாகிய ஷையாத்தீன்களை தனது கட்டுக்குள் வைத்திருந்தார் என்பதும்,இவர்களை மட்டும்தான் அடிமைப்படுத்தி வேலை வாங்கி கொண்டிருந்தார், என்பதையும் இதிலிருந்து நம்மால் உணர முடிகிறது.

பின் இணைப்பு-4

(ஜஸத் மற்றும் தாப்பத்துல்-அர்த் பற்றி இமாம் அபுல் ஆலா மவ்தூதியின் கருத்து)

நமது பார்வையில், இந்த நிகழ்வை தொடர்புபடுத்தி விளக்குவதே, நம்முடைய உண்மையான நோக்கம். முந்தைய வசனங்கள் அதற்கு நல்லதொரு தொடக்கமாக அமைந்தன. இந்த வசனங்களுக்கு,சற்று முந்தைய வசனங்களில், நபி தாவூத் (அலை) அவர்களை புகழப்பட்டதும், அதன் பிறகு அவர் சோதனைக்குள்ளாக்கப்பட்ட நிகழ்வும் விவரிக்கப்படுகிறது. மேலும், அல்லாஹுதஆலா தன் நேசத்திற்குரிய அடியாரையும், சோதனை செய்வதில் இருந்து விடமாட்டான் என்றும்,அதன்பின்னர் அவரது உன்னத இயல்பைப் பற்றியும் நமக்கு கூறப்படுகிறது. மேலும், அவர் சோதனையைப் பற்றி எச்சரிக்கப்பட்ட பின்பும், தன் இறைவனிடத்தில் பாவமன்னிப்பு கூறி மீண்டதாக கூறப்படுகிறது. மேலும், இறைவனுக்கு சஜ்தா செய்து,தான் செய்த அந்த தவறான செயலிலிருந்த தன்னை தடுத்துக் கொண்டதாக குறிப்பிடப்படுகிறது. இதேபோன்று தான்,முதலில் நபி சுலைமான் (அலை) அவர்களின் மேன்மைகள், அடுத்ததாக அவரது பயபக்தி உணர்வும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பின்னர், அவரும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், அவரது சிம்மாசனத்தில் ஒரு சடலம் போடப்பட்டதாகவும் குறிக்கப்படுகிறது. ஆகவே, அவர் தன் பிழையை பற்றி எச்சரிக்கப் படுவதை உணர்ந்து கொண்டதும், உடனே இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரி தன் செயலில் இருந்து விலகினார் என்றும், இந்த நிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப்படுத்தப்படுகிறது. வேறுவிதமாகக் கூறினால், இந்த இரண்டு நிகழ்வின் வாயிலாக அல்லாஹ் சுப்ஹானதஆலா, ஒரே நேரத்தில் இரண்டு விஷயங்களில்பால் நமக்கு படிப்பினை தர விரும்புகிறான்.1)சாதாரண மனிதர்களை மட்டுமல்ல, உயர்ந்த தரத்தில் உள்ள தன்னுடைய நபிமார்களக்கும், அல்லாஹ் தனது கடுமையான சோதனையிலிருந்து விலக்களிக்கவில்லை. 2) மனிதனின் சரியான

அணுகுமுறை; ஒரு தீமையான காரியத்தை செய்தபிறகு பெருமை கொள்வதும், இறுமாப்புக் கொள்வதும் அல்ல; மாறாக தன் இறைவனிடத்தில் தாழ்மையுடன் தலைவணங்கி, பாவமன்னிப்புக்கோரி மீள வேண்டும் என்பதேயாகும். இந்த அணுகுமுறை காரணமாகத் தான், இந்த உன்னதமான மனிதர்களை அல்லாஹ் மன்னித்தது மட்டுமல்லாமல், அவர்களுக்கு மேலும் அருள்புரிந்தான்.

இங்கே நபி சுலைமான் (அலை) அவர்களுக்கு, இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்ட சோதனை என்னவென்ற கேள்வியும் எழுகிறது. வெறும் உடலை அவர் சிம்மாசனத்தில் போடப்பட்டதன் பொருள் என்ன? அவர் பாவமன்னிப்புக் கோரி மீள்கிறார் என்றால், அவருக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையின் தன்மை என்ன?. இதற்கு பதிலளிக்கும் விதமாக விரிவுரையாளர்கள், நான்கு வெவ்வேறு விதமான கண்ணோட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

அவர்களில் முதல்சாரார், ஒரு நீண்ட கதையை இதனுடன் தொடர்புப்படுத்துகின்றனர். அவற்றினை நாம் ஏற்கனவே மேலே விவாதித்துள்ளோம்.அவற்றின் கதைச் சுருக்கம் இதுதான். சுலைமான் (அலை) செய்த பிழை என்னவென்றால், அவருடைய மனைவியர்களில் ஒருவர், அரண்மனையில் சிலைகளை வைத்து
, 40 நாட்கள் தொடர்ந்து வணங்கினார். அவர் இச்செயலைப்பற்றி அறியாமல் இருந்தார் அல்லது அவர் தனது தங்குமிடத்தில் சில நாட்கள் தன்னை, எங்கும் செல்லாமல் தடுத்து வைத்துக் கொண்டிருந்தார். அவர் அநீதி இழைக்கப்பட்டவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யவும் செல்லவில்லை. இதனால்தான், அவர் பின்வருமாறு தண்டிக்கப்பட்டார்; ஜின்கள், மனிதர்கள், காற்றின் மீது ஆட்சி செலுத்த உதவிய அவரின் மோதிரத்தை, எப்படியோ ஒரு ஷைத்தான் எடுத்துச்சென்றது. அவர் தன் மோதிரத்தை இழந்தவுடன் தனது அதிகாரத்தையும் இழந்துவிட்டார். இதனால், அவர் 40 நாட்கள் ஒவ்வொரு இடமாக அலைந்து தேடிக் கொண்டிருந்தார். இதற்கிடையில் ஷைத்தான், சுலைமான் (அலை) அவர்களின் உருவத்தில் தொடர்ந்து ஆட்சிசெய்தான். சுலைமான் (அலை) அவர்களின் சிம்மாசனத்தில் உள்ள

வெற்றுடல், இந்த ஷைத்தானையே குறிக்கிறது. ஷைத்தான், சுலைமான் (அலை) அவர்களின் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த காலக்கட்டத்தில், அரசக்குடும்பத்தில் உள்ள பெண்களின் கற்பு கூட ஷைத்தானின் தீங்கிலிருந்துப் பாதுகாக்கப்படவில்லை என்று கூறும் அளவிற்கு சிலர் சென்றுள்ளனர். இறுதியில், அவனது செயல்களினை வைத்து, அரசவையின் அமைச்சர்களும், தலைவர்களும், அறிஞர்களும்,இது சுலைமான் (அலை) அல்லவே என்று சந்தேகிக்கத்தொடங்கினர். எனவே,அவனுக்கு (அதாவது ஷைத்தானுக்கு) முன்னாள் தவ்ராத் வேதத்தை திறந்து ஓதியபோது அவன் வெருண்டோடினான். போகும் வழியில் கையிலிருந்த மோதிரம் தவறி கடலில் விழுந்ததாகவும் அல்லது அவனே அதை கடலில் வீசி எறிந்தான் என்றும் கூறுகிறார்கள்.. அதை ஒரு மீன் விழுங்கியது. பின்னர், எப்படியோ சுலைமான் (அலை) அவர்களுக்கு அந்த மீன் கிடைத்தது. சமைப்பதற்காக அந்த மீனின் வயிற்றை கிழித்தபொழுது, அதில் தனது மோதிரத்தை கண்டார். மோதிரம் கிடைக்கப்பெற்றதும், ஜின்களும், மனிதர்களும் தாழ்மையுடன் அவருடைய கட்டுப்பாட்டிற்குள் வந்தனர்.

இந்த முழுக்கதையும் தொடக்கத்திலிருந்து இறுதிவரை மிகவும் முட்டாள்தனமானதும், அபத்தமானதுமாகும். யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களிடமிருந்து மதம் மாறியவர்கள் தால்மூத் மற்றும் பிற இஸ்ரேலிய மரபுகளிடமிருந்து, இந்தக் கதையை எடுத்துவந்து முஸ்லிம்களிடம் பரப்பினர். நம்மிடையே, நன்கு அறியப்பட்ட அறிஞர்கள் சிலர், இந்த கதைகளை உண்மையானவை என எண்ணி எடுத்துக்கொண்டு, அவற்றைதிருக்குர்ஆனின் வசனங்களிற்கு விளக்கமாக மேற்கோள் காட்டியிருப்பது வினோதமானது. அதேசமயம் நபி சுலைமான் (அலை) அவர்களின் மோதிரத்தை பற்றி கூறப்பட்டவற்றிலும், எந்த உண்மையுமில்லை. மேலும், அவரின் மகத்துவமிக்க பணிகளை மோதிரம் இருந்ததனால் தான் நடத்த முடிந்தது என்று குறிப்பிடுவதும் ஏற்புடையதல்ல. மேலும், நபிமார்களாக உருவம் கொண்டு, மக்களை தவறாக வழிநடத்தும் ஆற்றல் ஷைத்தான்களுக்கு வழங்கப்படவில்லை. நபியாக மாறுவேடமிட்டு, ஒரு சமுதாயத்தை சிதைத்து அழிக்க ஷைத்தானுக்கு உதவியும் புரிந்து,அதனைக் கொண்டு ஒரு நபியை சோதிப்பான் என்று அல்லாஹ்வை

பற்றி நாம் கற்பனை செய்துகூட பார்க்கமுடியாது. இந்த விளக்கத்தைதிருக்குர்ஆனும் மறுக்கிறது.

பின்வரும் வசனங்களில் அல்லாஹ் கூறுகிறான்,
நாம் சுலைமானை சோதித்தபோது, அவர் நம்மளவில் பாவமன்னிப்பிற்காக திரும்பினார். நாம் காற்றையும், ஷைத்தானையும் அவருக்கு வசப்படுத்திக் கொடுத்தோம்.

ஆனால், இதற்கு முரணாக, மேற்கண்ட விரிவுரையின்படி, மோதிரத்தின் காரணமாகத்தான் ஷைத்தான் அவருடைய கட்டுப்பாட்டில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே, அஃதாவது சோதனைக்கு முன்னரே ஷைத்தான், அவரின் கட்டுப்பாட்டில் இருந்தார்கள் என்ற அறிஞர்களின் கூற்று;திருக்குர்ஆனில் அடுத்தடுத்த வசனங்களில் சொல்லப்பட்டக் கருத்தை அவர்கள் கருத்தில்கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது. இவ்வாறு விளக்கம் அளித்திருப்பது மிகவும்
விசித்திரமாகவும் உள்ளது.

இரண்டாவது பிரிவினரின் கூற்றானது;
நபி சுலைமான் (அலை) அவர்களுக்கு 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு மகன் பிறந்தான் என்றும், சுலைமான்(அலை) அவர்களுக்குப் பிறகு, அவன் அரசனானால் ஷைத்தான்கள் அவனுக்கும் அடிமையாகப் பணிகளைத் தொடரவேண்டும் என்று கருதியதால்; அவருடைய மகனைக் கொல்ல ஷைத்தான்கள் சதிசெய்தனர். சுலைமான் (அலை) அவர்கள் இதை அறிந்து கொண்டதும், அவருடைய குழந்தையை மேகங்களில் மறைத்து வைத்தார். இதனால், அக்குழந்தை அங்கேயே வளர்ந்தது. இவர் சம்பந்தப்பட்ட சோதனை, இதுவேயாகும். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பதற்கு பதிலாக மேகங்களின் பாதுகாப்பை நம்பியிருந்தார். இதற்காகத் தான், இந்த வழியில் அவர் தண்டிக்கப்பட்டார். குழந்தை இறந்து, அவர் சிம்மாசனத்தில் வெற்றுடலாக விழுந்தது. இந்த கதையும் ஆதாரமற்றது. மேலும், வெளிப்படையாகதிருக்குர்ஆனுக்கும் எதிரானது. ஏனென்றால், இதில் காற்றும், ஷைத்தான்களும் ஏற்கனவே சுலைமான் (அலை) அவர்களின் கட்டுப்பாட்டில்

இருந்ததாக் கருதப்படுகிறது. அதேநேரம் இந்த நிகழ்வு சோதனைக்குப் பிறகு நடந்த நிகழ்வு என்று திருக்குர்ஆன் தெளிவாக குறிப்பிடுகிறது.

மூன்றாவது சாரார்கள் கூறுகிறார்கள், சுலைமான் (அலை) அவர்கள் ஒரு நாள் தனது எழுபது மனைவிகளிடமும் செல்வேன் என்று சத்தியம் செய்தார். மேலும் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு போர் வீரன் பிறப்பான். அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவார்கள் என்றார். ஆனால், அவர் இதைக் கூறும்போது; "இன்ஷா அல்லாஹ்" என்று கூறவில்லை. இதன் விளைவாக ஒரு மனைவி மட்டுமே கருத்தரித்தார். அவரிடமிருந்து குறைபாடுள்ள குழந்தை பிறந்தது. அக்குழந்தையை சிம்மாசனத்தில் அமர்த்தினார். இந்த ஹதீஸை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அபூஹுரைரா அறிவிக்கிறார்கள். மேலும், இந்த ஹதீஸ் புகாரி மற்றும் முஸ்லிம் போன்ற கிதாபுகளில் பல இடங்களில், பல வழிகளில் பாரம்பரியமாக தொடர்பு படுத்தி கூறப்பட்டு வருகிறது. ஒரு இடத்தில் மனைவிகளின் எண்ணிக்கை 60 என்றும் மற்றவைகளில் 70,90 அல்லது 99 அல்லது 100 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிவிப்பாளர்களின் வரிசைத்தொடரை பொறுத்தவரை பெரும்பாலான மரபுகள், வலுவான சங்கிலித் தொடரை கொண்டுள்ளது. அவற்றின் நம்பகத்தன்மையை மறுக்க முடியாது. ஆனால், ஹதீஸில் கூறப்பட்டுள்ள கருத்தானது பொருத்தமற்றது.

இதுபோன்ற ஒரு விஷயத்தை நபி(ஸல்) கூறியிருக்க முடியாது என்பதை உரக்க அறிவிக்கிறது. ஆனால், இதற்கு மாறாக யூதர்களின் முட்டாள்தனமான கதை அறிவிப்பிற்கு இந்த கதை ஒரு எடுத்துக்காட்டு என்று நபியவர்கள் (ஸல்) குறிப்பிட்டிருக்கலாம்.ஆனால்,அதை ஒரு நிகழ்வாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே கூறியிருக்கிறார் என்று தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். இத்தகைய கதைகளை அறிவிப்பாளர்களின் சங்கிலித்தொடரின் வலிமையின் அடிப்படையில் மக்களை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்துவது, மார்க்கத்தை வேடிக்கையாக்குவதாகவும், கேலி செய்வதாகவும் உள்ளது. குளிர்காலத்தின் மிகநீண்ட இரவில் கூட இஷா மற்றும் ஃபஜர் தொழுகைக்ககான இடைவெளி 10 முதல் 11 மணி நேரத்திற்கு மேல் இருக்க முடியாது என்பதை எல்லோரும் அறிந்ததே. மனைவியரின் குறைந்தபட்ச எண்ணிக்கை 60 ஆக இருந்தால் சுலைமான் நபி அவர்கள் ஒருகணமும் ஓய்வெடுக்காமல் ஒரு மணி

நேரத்திற்குள் ஆறு மனைவி என்ற விகிதத்தில் 10 முதல் 11 மணி நேரம் உறவு கொண்டார் என்று பொருள்படுகிறது. இது நடைமுறையில் சாத்தியமா? அல்லது நபி(ஸல்) அவர்கள் இதை ஒரு கதைப் போன்று எடுத்துக் கூறி இருப்பார்களா?திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளபடி நபி சுலைமான் (அலை) அவர்கள் சிம்மாசனத்தில் வைக்கப்பட்டிருந்த அந்த உடல் குறைபாடுள்ள குழந்தையைக் குறிக்கிறது என்று இந்த ஹதீஸில் எந்த இடத்திலும் கூறப்படவில்லை. எனவே, இந்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இந்ததிருக்குர்ஆன் வசனத்திற்கு இவ்வாறு விளக்கம் அளித்தார் என்று கூறமுடியாது. மேலும், நபி சுலைமான் (அலை) அவர்கள், குழந்தை பிறந்ததும் இறைவனிடம் திரும்பி பாவி மன்னிப்பு கேட்டார் என்று கூறுகிறவர்கள், அதனைத் தொடர்ந்து, எனக்குப் பிறகு வேறு யாரும் அடையமுடியாத அரசாட்சியை எனக்கு அளிப்பாயாக என்று பிரார்த்தித்ததன் காரணத்தை புரிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள்.

இமாம் ராஜியின் மற்றொரு விரிவுரை இதுவாகும். நபி சுலைமான் (அலை) ஒரு தீவிர நோயால் பாதிக்கப்பட்டார், அல்லது வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்து வருத்தத்தால் மெலிந்து போனார். ஆனால் இந்த விவரிப்பும்திருக்குர்ஆன் வார்த்தைகளுக்கு பொருந்தாது, என்று திருக்குர்ஆனே கூறுகிறது.

"**நாம் சுலைமானை சோதித்தோம். மேலும், அவர் சிம்மாசனத்தில் ஒரு சடலத்தை எறிந்தோம். அப்போது அவர் அல்லாஹ்விடம் திரும்பினார்"**

(திருக்குர்ஆன்: சாத் 38:34)

இந்த வசனத்திலிருந்து சுலைமான் நபியின் உடலையே உயிரற்ற உடல் (ஜஸத்) என்று குறிக்கிறது என புரிந்து கொள்ளமுடியாது. சோதனைக்கு உட்படுத்துவதென்பது, அவர் செய்த பிழையைக் குறிக்கின்றது என்பதை தெளிவாகக் காட்டுகிறது. இதில் அவர் எச்சரிக்கப்பட்ட விதம், அவரது சிம்மாசனத்தில் உயிரற்ற சடலம் வைக்கப்பட்டது. மேலும், அவர் செய்த பிழையை உணர்ந்து கொண்டபோது, அவர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோரி திரும்பினார்.

உண்மையிலேயே,திருக்குர்ஆனில் புரிந்துகொள்வதற்கும், திட்டவட்டமாக இன்னது தான் பொருள் என்று விளக்கும் கொடுப்பதில், மிகவும் கடினமான வசனமாக இது உள்ளது. ஆனால், நபி சுலைமான்(அலை) அவர்களின் பிரார்த்தனையை இஸ்ரேலின் வரலாற்றைக் கொண்டு, ஒப்பிட்டு பார்ப்போமாயின் நபி சுலைமான் (அலை) அவர்கள் தனக்குப்பிறகு தன் மகன் ரெஹோபோம் (Rehoboam) தான் அரசாட்சிக்கு வாரிசாக முடிசூட வேண்டும் என்று விரும்பினார். ஆனால், அவருடைய மகன் ஒரு தகுதியற்ற இளைஞனாக வளர்ந்தபோது; அவனது தவறான பழக்கவழக்கங்களால் நபி தாவூத் (அலை) மற்றும் நபி சுலைமான் (அலை) அவர்களுடைய வலிமைமிக்க அரசாட்சியை அவனால் தக்கவைக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டார். எனவேதான், தன் இறைவனிடம்; "**என் இறைவா! என்னை மன்னிப்பாயாக எனக்குப் பிறகு வேறு எவரும் அடைய முடியாத ஒரு அரசாட்சியை எனக்குத் தருவாயாக என்று அவர் பிரார்த்தித்தார்**".

(திருக்குர்ஆன்: சாத் 38:3)

வெறும் உடலை அவருடைய சிம்மாசனத்தில் வைப்பதென்பது, அனேகமாக அவருக்குப் பிறகு சிம்மாசனத்தில் அமர விரும்பிய மகன், தகுதியற்ற நபர் என்று பொருள். ஆகையால், அவர் தனது விருப்பத்தை மாற்றிக்கொண்டு, அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி பிரார்த்தனை செய்தார். மேலும், இந்த அரசாட்சி தன்னுடன் முடிவடைய வேண்டும் என்றும், வேறு யாரும் இந்த அரசாட்சியை அடையக்கூடாது என்றும் பிரார்த்தித்தார். இஸ்ரேலின் வரலாறும், இதையே காட்டுகின்றது. நபி சுலைமான் (அலை) அவர்கள் தன் வாரிசை பற்றி எந்த ஒரு விருப்பத்தையும் தெரிவிக்கவில்லை. தனக்குப் பிறகு யாருக்கு மக்கள் கட்டுப்பட வேண்டும் என்று எந்த குறிப்பு சாசனமும் செய்து வைக்கவில்லை. நபி சுலைமான் (அலை) அவர்களின் காலத்திற்கு பிறகு; அவரது அமைச்சர்கள் சுலைமான்(அலை) அவர்களின் மகன் ரெஹோபோமை ஆட்சியாளராக சிம்மாசனத்தில் ஏற்றினர். ஆனால், சில காலத்திற்குப் பிறகு, இஸ்ரேலின் பத்து கோத்திரங்களும், வடக்கு பாலஸ்தீனை எடுத்துக்கொண்டு பிரிந்து போயின. யூதாவின் கோத்திரம் மட்டுமே, ஜெருசலேமில், சிம்மாசனத்துக்கு விசுவாசமாக இருந்தது.

<u>தாப்பத்துல்-அர்த் குறித்த இமாம் மவ்தூதியின் கருத்து:</u>

"அவர் மீது (சுலைமான்) மீது நாம் மரணத்தை விதித்த போது அவர் இறந்துவிட்டார் என்பதை அவர் (சாய்ந்திருந்த) தடியை அழித்துவிட்ட நிலத்தின் பூச்சியை (கரையானை) தவிர வேறெதுவும் அந்த ஜின்களுக்கு அறிவிக்கவில்லை. அவர் கீழே விழவே தாங்கள் மறைவான விஷயங்களை அறிந்திருக்கக் கூடுமானால் (கடின உழைப்பாகிய) இழிவுதரும் வேதனையில் நாங்கள் திரிப்பட்டிருக்க வேண்டியதில்லை என்று ஜின்களுக்கு தெளிவாக தெரிந்தது".

(திருக்குர்ஆன் அல்-ஸபா 34:14)

இந்த வசனத்தின் இன்னொரு படிப்பினையும் உள்ளது. அஃதாவது, ஜின்களின் உண்மையான தன்மையும், அவர்களின் நிலையும் தெளிவாக வெளிப்படுத்தப் பட்டுவிட்டது.

முதல் பொருளானது : மறைவான ஞானம் தங்களுக்கு உண்டு என்ற ஜின்களின் கூற்று தவறானது என்பதை ஜின்களே உணர்ந்தன.

இரண்டாவது பொருளானது: ஜின்களுக்கு மறைவான ஞானம் கொடுக்கப்பட்டுள்ளதாக மனிதர்கள் நம்பியது. இந்த நிகழ்விலிருந்து அப்படி இல்லை என்றுத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

சில நவீன விரிவுரையாளர்கள் இதை பின்வருமாறு விளக்கியுள்ளனர். நபி சுலைமான் (அலை) அவர்களின் மகன் ரெஹோபோம் தகுதியற்றவனாகவும், ஆடம்பர வாழ்க்கைக்கு பழக்கப்பட்டவனாகவும், முகஸ்துதி செய்பவர்களால் சூழப்பட்டவனாகவும் இருந்ததால்; அவனது தந்தையின் மறைவுக்குப் பிறகு அவன் தோள்களில் சுமத்தப்பட்ட பெரும் சுமையை, அவனால் தாங்க முடியவில்லை. அவன் முடிசூடிய சிறிது காலத்தில் ஆட்சியும் சரிந்தது. அதுவரை சுலைமான் (அலை) அவர்களின் வலிமைமிக்க சக்தியால் கட்டுப்படுத்தப்பட்டிருந்த ஜின் குலத்தார், இவரின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்து பிரிந்து சென்றனர். ஆனால் இந்த விளக்கம்,திருக்குர்ஆனுடைய வசனங்களுடன் ஒத்துப்போகவில்லை.திருக்குர்ஆனில் சித்தரிக்கப்பட்ட காட்சியானது, சுலைமான் (அலை) அவர்கள், தன் கைத்தடியை ஊன்றி

உட்கார்ந்திருந்தபோது, அவருக்கு மரணம் வந்தது. அவரது உடல் அந்த கைத்தடியின் துணையுடன், அந்த இடத்தில் நிலைத்திருந்தது. மேலும், ஜின்கள் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று எண்ணியே தங்களுடைய வேலைகளை செய்து வந்தன. கடைசியில் கைத்தடியைக் கரையான் அரித்ததும், அதன் உட்பகுதி வெற்றிடமாக மாறியது. அதன்பின்னரே சுலைமான் (அலை) அவர்களின் உடல் சரிந்து கீழே விழுந்தது. அவர் இறந்துவிட்டார் என்பதையும், ஜின்கள் அறிந்து கொண்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக,இந்த நிகழ்வினைப் பற்றியே தெளிவு இல்லாத பொழுது,அவரின் கைத்தடி அவரின் அதிகாரத்தைக்குறிக்கிறது என்றும்,மரத்தின் பூச்சியானது நபி சுலைமானின்(அலை) மகனுடைய தரமற்ற தன்மையை குறிக்கின்றது என்றும் எவ்வாறு விளக்கம் அளிக்க முடியும்?. மேலும், அவருடைய உடல் சரிவது அவரின் அதிகாரமும், அரசாட்சியும் சரியும் என்பதையே குறிக்கிறது என்றுள்ளது. இவற்றையெல்லாம் அல்லாஹ் சுப்ஹானதஆலா கூறுவதற்கு நாடி இருந்தால், இவற்றினைக் குறிக்கும் வகையில், அரபி மொழியில் நிறைய வார்த்தைகள் உள்ளனவே.திருக்குர்ஆன் இத்தகைய புதிரான மொழியை, எந்த இடத்திலும் பயன்படுத்தியதில்லை. அவ்வாறு இருந்திருப்பின்,திருக்குர்ஆனுடைய முதல் முகவர்களாக இருந்த அரேபியர்கள், இவ்வாறான சொற்களை எவ்வாறு எதிர்கொண்டிருக்க முடியும்.

மேலும், இந்த மொழிபெயர்ப்புகளிலேயே மிகவும் அபத்தமான பகுதி எதுவென்றால்: இந்தக் கூற்றின்படி ஜின்கள் என்பது சுலைமான் (அலை) அவர்களுக்கு கட்டுப்பட்டு பணிவிடை செய்துவந்த கிராமப்புற பழங்குடியினரை குறிக்கின்றது என்பதாகும். இங்கே கேள்வி என்னவென்றால்; எந்த பழங்குடி மக்கள், மறைவான ஞானம் தங்களுக்கு இருப்பதாக உரிமை கோரினார்கள்?; மறைவான விஷயங்களை பற்றி அறிந்துக் கொண்டிருப்பதாக முஷ்ரிக்குகள் யாரைக் கருதினார்கள்?.குர்ஆனின் இந்த அறிக்கையின், இறுதி வசனங்களைப் படிக்கும் மக்களுக்கு ஜின்கள்தான் மறைவான விஷயங்களை அறிவதாக, நம்பினார்கள் என்பதை, சரியாக இனம் காண முடியும். மேலும், இந்தக் குழுவின் ரகசியம் வெளியாகாமலே இருந்தது. எதுவரையெனில்

மறைவான விஷயங்களை அறியமாட்டார்கள் என்ற கருத்து நபி சுலைமான் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, அவர் இன்னமும் உயிருடன் இருப்பதாக எண்ணி சுலைமான் நபிக்கு கட்டுப்பட்டு, பணிவிடை செய்து வந்ததன் மூலம் தெளிவாகவும், வெளிப்படையாகவும் தெரியவந்தது. ஒரு உண்மையான மனிதருக்கு ஜின்கள் என்பது பழங்குடி மக்களை குறிக்கிறது என்கிற தங்களின் கருத்தை மாற்றிக்கொள்ள,திருக்குர்ஆனின் இந்த வசனமே போதுமானதாகும். ஆனால், மக்களுடன் ஜின்களும் வாழ்வதைக் குறித்துதிருக்குர்ஆனில் தெளிவாக்கப்பட்ட பின்னரும், இந்த இயந்திர உலகில் வாழ்பவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளத் தயங்கி, வேறுபொருளினை தருகின்றனர்.

குர்ஆனில் பல இடங்களில் அல்லாஹ் சுப்ஹானதஆலா கூறுகின்றான்: அரேபியர்களில் இணைவைப்பவர்களில் சிலர் ஜின்களை அல்லாஹ்வின் கூட்டாளிகள் என்றும்,அவனுடைய பிள்ளைகள் என்றும் கருதி, அவற்றிடம் பாதுகாவல் தேடிவந்தனர்.

"இவ்வாறிருந்தும் அவர்கள் ஜின்களை அல்லாஹ்வுக்கு இணையானவர்கள் ஆக்குகின்றார்கள். அல்லாஹ்வே அந்த ஜின்களையும் படைத்தான். இருந்தும் அறிவில்லாத காரணத்தால் இணைவைப்போர் அவனுக்குப் புதல்வர்களையும் புதல்விகளையும் கற்பனை செய்து கொண்டார்கள். அவனோ இவர்கள் இவ்வாறு வர்ணிப்பதில் இருந்து தூயவனாகவும், உயர்ந்தவனாகவும் இருக்கின்றான்"

(திருக்குர்ஆன்: அல்- அன்ஆம் 6:100)

"அன்றியும் இவர்கள் அல்லாஹ்வுக்கும், ஜின்களுக்குமிடையில் வம்சாவளி உறவை கற்பனையாக ஏற்படுத்துகின்றனர். ஆனால், ஜின்களும் மறுமையில் இறைவன் முன் நிச்சயமாக கொண்டு வரப்படுவார்கள் என்பதை அறிந்தே இருக்கிறார்கள்.

(திருக்குர்ஆன்: அல்-ஸப்பத் 37:158)

"ஆனால் நிச்சயமாக மனிதர்களிலுள்ள ஆடவர்களில் சிலர் ஜின்களிலுள்ள ஆடவர்கள் சிலரிடம் காவல் தேடிக் கொண்டிருந்தனர். இதனால், அவர்கள் (ஜின்களிலுள்ள ஆடவர்களின்) மமதையைப் பெருக்கி விட்டனர்.

(திருக்குர்ஆன்: ஜின் 72:6)

அவர்களின் நம்பிக்கை என்னவென்றால்; அவர்கள் ஜின்களை கண்ணுக்குத் தெரியாத மறைவானவற்றின் அறிவை பெற்றிருப்பதாகவே கருதினர். மேலும், மறைவான அறிவைப் பெறுவதற்காக ஜின்களின் உதவியையும் நாடினர். அல்லாஹுதஆலா இந்த நிகழ்வை தொடர்பு படுத்தியதன் காரணம், அரேபியர்கள் தவறானவர்களை பின்பற்றுகின்றார்கள் என்றும், இந்த நம்பிக்கை முற்றிலும் ஆதாரமற்றது என்பதை அவர்களுக்கு உணர வைப்பதே ஆகும்..

பின் இணைப்பு-5

ஜஸத் மற்றும் தாப்பத்துல்-அர்த் பற்றிய முஹம்மது அஸத்தின் கருத்துக்கள்:

ஜஸத்

அவருடைய மொழிபெயர்ப்பு:

இன்னும் நாம் சுலைமானைத் திட்டமாகச் சோதித்தோம்; அவருடைய சிம்மாசனத்தில் ஒரு சடலத்தை எறிந்தோம் - ஆகவே அவர் (நம்மளவில்) திரும்பினார். "என் இறைவனே! என்னை மன்னித்தருள்வாயாக! அன்றியும், பின்னர் எவருமே அடைய முடியாத ஓர் அரசாங்கத்தை எனக்கு நீ நன்கொடையளிப்பாயாக! நிச்சயமாக நீயே மிகப்பொருங் கொடையாளியாவாய்" எனக் கூறினார்.

(திருக்குர்ஆன்: சாத் 38: 34-5)

அவரது விரிவுரை:

இந்த வசனத்தை விளக்க, சில விரிவுரையாளர்கள் மிக அருமையான கதைகளை முன்வைக்கிறார்கள், கிட்டத்தட்ட அனைவருமே டால்மூதிய (யூத கூற்றுகள் அல்லது கதைகள்) கதைகளை போன்று விவரிக்கிறார்கள். இவற்றில் எதனையும் கருத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று இவை அனைத்தையும் நிராகரிக்கிறார், ராஜி.

சுலைமான் (அலை) அவர்களின் சிம்மாசனத்தில் உள்ள "உடல்" (ஜஸத்) அவருடைய சொந்த உடலை குறிப்பதாவே இருக்கிறது என்கிறார் ராஜி. மேலும், இது மறைமுகமாக, இறைவனால் அருளப்பட்ட, எந்த நெறிமுறைகளையும் ஏற்று நடக்காமல் நீண்ட காலமாக உயிரற்று இயங்கி கொண்டிருக்கும் அவருடைய அரசாட்சியையும் குறிப்பதாக உள்ளது. (அரேபிய தொடர்களில், ஒரு நபர் நோய், கவலை, பயத்தால்

ஆட்கொள்ளப்பட்டு உளப்பண்பற்று முற்றிலும் பலவீனமடைந்திருப்பதை, "உயிரற்ற உடல்/நடைபிணம்" என்ற சொற்களின் மூலம் விவரிக்கிறார்கள் என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது). மேலும் அந்த அரசாட்சியினை சிறந்த வழியில் அர்த்தமுள்ளாதகவும், ஆன்மீக சாராம்சத்துடனும் செயல்படுத்தி ஆள்வதே அவருக்கு சோதனையாக இருந்தது.

(திருக்குர்ஆன்: சாத் 38:34)

சோதனைகள் தரப்படுவது ஆன்மாவை மெருகூட்டுவதற்கும், அல்லாஹ்விடமான நெருக்கத்தை அதிகப்படுத்துவதற்குமேயாகும்.

இந்த வசனங்கள் சுலைமானின் (அலை) வாழ்க்கையின் மற்றொரு பக்கத்தை விளக்குகின்றன. ஒரு மனிதனின் சக்தி எவ்வளவு உயர்ந்ததாக வளர்ந்தோங்கினாலும், அதில் அவனுடையது என்று எதுவும் இருப்பதில்லை, அவனிடம் இருப்பதெல்லாம் அல்லாஹ்வின் புறத்திலிருந்து கிடைக்கப் பெற்றமையே ஆகும்.

"இன்னும் நாம் சுலைமானைத் திட்டமாகச் சோதித்தோம்; அவருடைய சிம்மாசனத்தில் ஒரு சடலத்தை எறிந்தோம் - ஆகவே அவர் (நம்மளவில்) திரும்பினார்"

(திருக்குர்ஆன்: சாத் 38:34)

"குர்சி என்ற அரபு வார்த்தைக்கு குறுகிய கால்கள் கொண்ட சிம்மாசனம் என்று அர்த்தம். பண்டைய மன்னர்களின் பயன்பாட்டில் இரண்டு வகையான சிம்மாசனங்கள் இருந்ததாகத் தெரிகிறது: குறுகிய கால்கள் கொண்டவை சாதாரண காலங்களில் வழக்கமாக அமரப் பயன்பட்டன. முக்கியமான சந்திப்புகளுக்கும், அரச விழாக்களுக்கும், நீண்ட கால்களைக் கொண்ட சிம்மாசனங்கள் பயன்படுத்தப்பட்டன. முன்கூறப்பட்டது 'குர்சி' என்றும், பிந்தையது 'அர்ஸ்' என்றும் அழைக்கப்பட்டன.

ஜஸத் என்ற அரபு வார்த்தைக்கு அர்த்தம் 'உயிர்(ஆன்மா) இல்லாத உடல்' என்பதாகும். ராகிப் என்பவர் முஃப்ரதத்தில், இந்த சொல் உயிரற்ற உடல்

என்ற கருத்தாக்கத்தை தாண்டி வேறு ஒரு தனி கருத்தினை வெளிப்படுத்துவதற்காகவே வந்துள்ளது, என்கிறார். ஏனெனில் ஜஸத் என்ற சொல் மனிதனை குறிப்பிட அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது. ஜிஸ்ம் (உடல்) என்பதே பொதுவான சொல்லாகும்.

இந்த வசனத்திலிருந்து சுலைமான் (அலை) அவர்களுடைய சோதனை, அவர் சற்றும் எதிர்பாராத விதமாக, அவருடைய கண்களுக்கு முன்பாகவே, அவரது சிம்மாசனத்தில் வைக்கப்பட்ட ஒரு உயிர் இல்லாத உடல் வழியாக இருந்தது. இந்த விஷயத்தில், இதைத் தவிர்த்து வேறு எந்த விளக்கத்தையும் திருக்குர்ஆன் நமக்கு அளிக்கவில்லை.

இந்த விஷயத்தில் விரிவுரையாளர்களும் பண்பாளர்களும், சில செய்திகளையும் விரிவுரைகளையும் குறிப்பிடுகின்றனர்.

இவர்கள் அனைவருக்கும் மிகவும் பொருத்தமாகவும் தெளிவாகவும் தெரிவது என்னவென்றால், நாட்டை ஆள்வதற்கும், குறிப்பாக தன்னுடைய பகைவர்களுக்கு எதிராகப் போராடுவதற்கும் உதவக்கூடிய வகையில், துணிவாகவும், தனக்கு பலனளிக்க கூடிய குழந்தைகளை சுலைமான் (அலை) பெற விரும்பினார். ஆனால் அந்த தருணத்தில் 'அல்லாஹ் நாடினால்' (இன்ஷா அல்லாஹ்) எனும் இறைவனை நாடும் சொற்றொடரை கூற மறந்தார். இச்சொற்றொடர் எத்தகையெதென்றால் 'எல்லா சூழ்நிலைகளிலும் மனிதன் அல்லாஹ்வின் மீது மட்டுமே நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் என்று நம் அனைவருக்கும் பறைசாற்றுவது ஆகும்; இதனால், இவருடைய மனைவியரிடமிருந்து ஓர் ஊனமுற்ற குழந்தையைத் தவிர வேறு எந்தக் குழந்தையும் அவரருக்கு கிடைக்கப் பெறவில்லை. அந்த உயிரற்ற உடல் போன்று இருந்த குழந்தையையே, சிம்மாசனத்தில் அமர்த்த நேர்ந்தது.

சுலைமான் (அலை) ஆழமாக சிந்தித்து, ஏன் ஒரு கணம் நாம் அல்லாஹ்வை புறக்கணித்து, நம்முடைய சுய பலத்தை நம்பினோம் என்று வருந்தினார். பின்னர் மனந்திருந்தி அல்லாஹ்விடம் திரும்பினார்.

அடுத்த வசனத்தில், திருக்குர்ஆன் சுலைமான்(அலை) அவர்களின் மனந்திரும்புதலை விவரிக்கிறது. அவை பின் வருமாறு:

"என் இறைவனே! என்னை மன்னித்தருள்வாயாக! அன்றியும், பின்னர் எவருமே அடைய முடியாத ஓர் அரசாங்கத்தை எனக்கு நீ நன்கொடையளிப்பாயாக! நிச்சயமாக நீயே மிகப்பொருங் கொடையாளியாவாய்" எனக் கூறினார்.

(திருக்குர்ஆன்: சாத் 38:35)

தாப்பத்துல்-அர்த்

இந்த வசனத்தின் மொழிபெயர்ப்பு:

ஆனாலும் [என்றாவது சுலைமான் இறக்கத்தான் வேண்டும்; ஆனாலும்] அவர் இறக்க வேண்டும் என்று நாம் கட்டளையிட்டபோது, அவர் இறந்துவிட்டார் என்பதை அவரின் கைத்தடியை அரித்த மண்புழுவைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்குக் காட்டவில்லை.அவர் தரையில் விழுந்தபோது, அந்த மறைவானவர்கள் [அவருக்கு அடிபணிந்தவர்கள்] இதனைத் தெளிவாகக் கண்டார்கள், அவர்களின் சிந்தனைக்கு அப்பார்ப்பட்ட இந்த விஷயத்தை நாம் புரிந்து கொண்டிருந்தார்கள் என்றால், இத்தகைய வெட்கக்கேடான துன்பத்தில் [உழைக்க] தொடர்ந்திருக்க மாட்டார்கள். [அடிமைத்தனம்].

(திருக்குர்ஆன்: சபா 34:14)

அவரது விரிவுரை:

இது பண்டைய அரேபியாவில், சுலைமான்(அலை) பற்றி காலம் காலமாக தொன்றுதொட்டு கூறப்பட்டு வரும் அழிக்க முடியாத கற்பனைக் கதைகளில், இதுவும் ஒன்றாகும். மேலும் இவ்வாறானக் கதைகளை, உருவகமாக்கி பல்வேறு நல்லுபதேசங்களைக் கூற திருக்குர்ஆன் பயன்படுத்துகிறது. மேலே, குறிப்பிடப்பட்ட கற்பனைக் கதையின்படி, சுலைமான்(அலை) தனது சிம்மாசனத்தில் அமர்ந்து, தனது தடியை ஊன்றிய படியே இறந்தார்; நீண்ட காலமாக அவரது மரணம் குறித்து யாரும் அறிந்திருக்கவில்லை; இதன்

விளைவாக, அவருக்காக வேலை செய்ய ஜின்கள் தொடர்ந்து தங்களது கடினமான பணிகளைத் செய்து வந்தனர். இதனிடையே,சுலைமான்(அலை) கைத்தடியை படிப்படியாக கரையான்கள் அரித்து சாப்பிட்டனர். இதனால், அவரது உடல், சமநிலையை இழந்து தரையில் விழுந்தது; இந்த கதை, எந்த உத்திரவாதமும் இல்லாமல், நிலையானதாக இல்லாத மனித வாழ்க்கையினைப் பற்றியும்,என்றாவது ஒருநாள் முற்றிலுமாக அழிந்து போகக்கூடிய இந்த உலகத்தினைப் பற்றியும், உருவகமாக எடுத்துக்கூறவே பயன்படுத்தப் பட்டுள்ளது.

அல்-கய்ப், "இது படைக்கப்பட்ட உயிரினங்களின் சிந்தனைக்கு அப்பார்ப்பட்ட ஒரு விஷயம்",முழுமையாக நம்மிடமிருந்து மறைக்கப்பட்டவை உள்ளது. இந்த நிகழ்வினைப் பொருத்தவரையில் சிறிதுகாலம் தற்காலிகமாக மறைக்கப்பட்டது. அவ்வாறு மறைக்கப்படாமல் இருந்திருந்தால் சுலைமான்(அலை) இறந்ததையும், அவர்கள் மீது விதிக்கப்பட்டு இருக்கும் கட்டுப்பாடு முடிந்துவிட்டது என்பதையும் ஜின்கள் முன்னரே அறிந்திருப்பார்கள். இதைப்பற்றி கூறியதுடன் மேலும் இரண்டு விஷயங்களை பற்றி திருக்குர்ஆன் அழுத்தமாக பதிவிடுகிறது. முதலாவதாக, நமக்கு இந்த உலகத்தை பற்றிய அறிவு மிகவும் குறைவாகவே உள்ளது.இதில், நாம் நம்முடைய ஆய்வுகள் மற்றும் அனுமானத்தின் வழியாக நமக்கு காண கிடைக்கும் பொருட்கள் மற்றும் நிகழ்வுகளினை ஆராய்ந்து, அவற்றின் குறிப்புகளினால் நமக்கு கிடைக்கப் பெற்றதும் உள்ளடங்கும்; இரண்டாவதாக, இத்தகைய குறைவான ஆற்றலினால், முக்கியமான சமயங்களில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதையும் சிந்திக்க முடியாத நிலை உள்ளது.

இந்த கதையானது "மறைவானவர்களுக்கு(ஜின்கள்) தொடர்புடையது என்றாலும்,இதன் தார்மீக(நீதி) பாடம் (அஃதாவது,உலக அறிவானது, சரியான வழி(வாழ்க்கை)முறையை நமக்கு அளிக்காது; நாம் ஆன்மிக அறிவையும் கற்று,உலக அறிவுடன் சேர்ப்போமேயானால் நமக்கு சிறந்த வழி(வாழ்க்கை)முறை கிடைக்கும்) மனிதர்களுக்கும் சேர்த்தே அறிவுறுத்தப் பட்டுள்ளது.

தி மெசேஜ் ஆஃப் திதிருக்குர்ஆன், முஹம்மது அஸத்
தாருல் அல்-ஆன்டலஸ் லிமிடெட்,1980

பின் இணைப்பு - 6

(ஜஸத் மற்றும் தாப்பத்துல்-அர்த் பற்றிய முஹம்மது அலியின் கருத்துக்கள்)

ஜஸத்:

வசனத்திற்கான அவரது மொழிபெயர்ப்பு:

இன்னும் நாம் சுலைமானைத் திட்டமாகச் சோதித்தோம்; அவருடைய சிம்மாசனத்தில் ஒரு சடலடத்தை எறிந்தோம் - ஆகவே அவர் (நம்மளவில்) திரும்பினார். "என் இறைவனே! என்னை மன்னித்தருள்வாயாக! அன்றியும், பின்னர் எவருமே அடைய முடியாத ஓர் அரசாங்கத்தை எனக்கு நீ நன்கொடையளிப்பாயாக! நிச்சயமாக நீயே மிகப்பொருங் கொடையாளியாவாய்" எனக் கூறினார்.

(திருக்குர்ஆன், சாத், 38: 34-5)

அவருடைய வர்ணனை:

அவரது சிம்மாசனத்தில் வைக்கப்பட்ட வெறும் உடலால் அவரது மகனான ரெஹொபெயாம்(Rehoboam) அல்லது புரட்சி செய்த யெரொபெயாமைக்(Jeroboam) குறிக்கும். அவருடைய மகனான ரெஹொபெயாம்,இஸ்ரேலின் ஒரு கோத்திரத்தைத் தவிர்த்து மற்ற அனைவரின் விசுவாசத்தையும் இழந்தான். (பைபிள், 1-இராஜாக்கள், 12:17).தாவூதின் (அலை) வம்சத்திற்கு எதிரான கிளர்ச்சியை வழிநடத்தியவன், யெரொபெயாம். இவன்,பத்து கோத்திரங்களுக்கு ராஜாவானதும், டான் மற்றும் பெத்-எலில் ஆகிய பொன்னாலான இரண்டு கற்றுக் குட்டிகளை உருவாக்கி உருவ வழிபாட்டை அமைத்தான்.இந்த இரண்டு கன்றுகளும் யெகோவாவின்(Jehovah-இறைவன்) உருவங்கள் என்றான் (பைபிள்,1-இராஜாக்கள்,12:28). இந்த, கன்றின் உருவங்களை வணங்கவும் தொடங்கினர் (பைபிள்,1-இராஜாக்கள்,14:9).

இவ்வாறு, ரெஹோபாம் மற்றும் யெரொபெயாம் ஆகிய இருவரும் சுலைமானின் (அலை) சிம்மாசனத்தின் மீது வீசப்பட்ட சடலத்திற்கு(உயிரற்ற உடல்-ஜஸத்) ஒப்பாகவே உள்ளனர்.

மேற்கண்ட வசனங்களில், சுலைமான்(அலை) அவர்களின் இராஜ்ஜியத்திற்கு சற்றும் தகுதியில்லாத வாரிசினைப் பற்றி பார்த்தோம்.இதனால்தான், சுலைமான்(அலை) ஆன்மீக இராஜ்ஜியத்திற்காக இறைவனை வேண்டினார். இத்தகைய இராஜ்ஜியத்திற்கு, தனது வாரிசால் எந்த கெடுதலும் ஏற்படாது என்பதாலேயே இவ்வாறு வேண்டினார்.

தாப்பத்துல்-ஆர்த்:

வசனத்திற்கான அவரது மொழிபெயர்ப்பு:

அவர் (சுலைமான்) மீது நாம் மரணத்தை விதித்த போது அவர் இறந்து விட்டார் என்பதை, அவர் (சாய்ந்திருந்த) தடியை அரித்து விட்ட நிலத்தின் பூச்சி (கரையானைத்) தவிர வேறெதுவும் அந்த ஜின்களுக்கு அறிவிக்கவில்லை அவர் கீழே விழவே, "தாங்கள் மறைவான விஷயங்களை அறிந்திருக்கக் கூடுமானால் (கடின உழைப்பாகிய) இழிவுதரும் வேதனையில் தாங்கள் தரி பட்டிந்திருக்க வேண்டியதில்லை" என்று ஜின்களுக்கு தெளிவாக தெரிந்தது.

(திருக்குர்ஆன்: சபா 34:14)

அவருடைய விரிவுரை:

பூமியின் கரையான்கள் சுலைமானின் (அலை) கைத்தடியை அரித்துவிட்டன என்னும் குறிப்பானது, அவரது மகனின் பலவீனமான ஆட்சியைக் குறிக்கிறது, அவனால்தான், சுலைமான்(அலை) அவர்களுடைய அரசாங்கம், பிளவுப் பட்டு துண்டு துண்டாகப் போனது. சுலைமானின்(அலை) வாரிசான ரெஹொபெயாம் ஆடம்பரமாகவும்,மிகவும் சவுகர்யமான முறையில் வாழ்ந்ததாகத் தெரிகிறது, மேலும் முதியோர்களின் ஆலோசனையின் பேரில் செயல்படுவதற்குப் பதிலாக, தனது தோழர்களின் இன்பம் தேடும் விருப்பங்களுக்கு

அடிபணிந்தான். (பைபிள், 1-இராஜாக்கள், 12:13). இதைப்போன்று ஆடம்பரமான பழக்கவழக்கங்களுக்கும், குதூகலமான வாழ்க்கை முறைக்கும் பழக்கப்பட்ட தால் தான், அவனை பூமியின் உயிரினமாக திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது என்பது எனது வாதம். அவருடைய கைத்தடியை உயிரினம் சாப்பிடுவது என்பது இராஜ்ஜியத்தை சீர்குலைப்பதைக் குறிக்கிறது. ஜின்கள்,மேலே குறிப்பிடப்பட்டுள்ள படி, கலகம் செய்து குலத்தவர் ஆவர். சுலைமானால்(அலை) அடக்கப்பட்டு, இராஜ்ஜியம் பிளவபடும் வரையில் இஸ்ரேலியருக்கு அடிபணிந்தே வாழ்ந்து வந்தனர். இந்த நிகழ்வானது, முஸ்லிம் மக்களுக்கு எச்சரிக்கை தருகிறது. அஃதாவது,ஆடம்பரத்தில் வாழ்ந்தால் எந்த பயனும் அடையமுடியாது.அவ்வாறு வாழ்ந்த உம்மையாக்கள் மற்றும் அப்பாசியர்களின் ஆட்சியும் சுலைமான்(அலை) அவர்களின் இராஜ்ஜியத்தைப் போலவே அழிந்து போயின.